

# சங்ககாலக் காசு இயல்

முனைவர் ப.சண்முகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சங்ககாலக் காசு இயல்

முனைவர் **ப. சண்முகம்**
பேராசிரியர்
பண்டைய வரலாறு தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை - 600 113

தினமலர் நாளிதழ் நிறுவுநர் திரு. டி.வி. இராமசுப்பையர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர் - தினமலர் ஆசிரியர் இரா. கிருட்டிணமூர்த்தி
வரிசை எண்: 3 நாள்: 12-08-2003

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Caṅka kālak kācu iyal** |
| Author | : | Dr. P. Shanmugam<br>Professor, Dept. of Archaeology<br>University of Madras<br>Chennai - 600 005 |
| General Editor | : | Dr. K. Bhagavathy<br>Associate Professor<br>International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 462 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2003 |
| Paper used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 points |
| No. of Pages | : | 8 + 106+12 (Photos) |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | Numismatic study |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**தரமணி, சென்னை-600 113.**

# அணிந்துரை

காசுஇயல் தொடர்பாக இதுவரை பல நூல்கள் வெளிவந்துள்ளன. சாங்க காலச் சோழர் நாணயங்கள், பாண்டிய பெருவழுதி நாணயங்கள் போன்ற நூல்கள் அவற்றுள் சில. இந்நிலையில் டி.வி. இராம சுப்பையர் அறக்கட்டளையின் சார்பில் **'சங்ககாலக் காசு இயல்'** என்ற தலைப்பில் நடைபெறும் இச்சொற்பொழிவு குறிப்பிடத்தக்கதாக அமைகிறது. சங்ககாலம் பொற்காலம் என்ற நிலையில் பண்பாட்டு உயர்வு சான்ற காலம் என்பதில் ஐயமில்லை. அக்காலத்தில் மக்களின் புழக்கத்தில் இருந்த காசுகளைப் பற்றிய அனைத்துத் தரவுகளுடன் ஒரு தனித்த சொற்பொழிவாக இச்சொற்பொழிவு அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது. இது, இவ்வறக்கட்டளையின் மூன்றாம் சொற்பொழிவாகும்.

பேராசிரியர் சண்முகம் அவர்கள் தம் ஆழ்ந்த புலமை நலத்தாலும், ஆய்வுச் சீர்மையாலும் , ஆய்வாளர்கள் பலரும் பாராட்டத்தக்க வகையில் இச்சொற்பொழிவை மிகவும் செம்மையாக அமைத்துத் தந்திருக்கிறார்கள். ஓர் அரிய வரலாற்றுப் பெட்டகத்தை வழங்கிய பேராசிரியர் சண்முகம் அவர்களை நிறுவனத்தின் சார்பில் பாராட்டுகிறேன். இச்சொற்பொழிவை நூலாக வெளிக்கொணர்வதில் இந்நிறுவனம் பெருமை அடைகிறது. தமிழ் ஆர்வலர்க்கும், வரலாற்று அறிஞர்க்கும், காசு இயல் தொடர்பாக ஆய்வு மேற்கொள்பவர்க்கும் இந்நூல் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் வெளிவருவதற்குப் பெருமுனைப்புடன் பணிமேற்கொண்ட அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் கு. பகவதி அவர்களுக்கு என் பாராட்டுகளும் நன்றியும் உரியன.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர் திரு. சு. கண்ணனுக்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

*04-08-2003* **இயக்குநர்**
சென்னை

# ஆசிரியரைப் பற்றி



* 1975 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர், துணைப் பேராசிரியர், மற்றும் பேராசிரியர்.
* 1999இல் துறைத் தலைவராகப் பொறுப் பேற்றார்.
* பண்டைய வரலாறு தொல்லியலில் முதுகலைப் பட்டம்.

சோழர் கால வருவாய் முறை பற்றிய ஆய்வுக்கு முனைவர் பட்டம் பெற்றார்.

தொல்லியலில் 25 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் உடையவர். துறை சார்ந்த தொல்லியல் அகழாய்வு, கள மேற்பரப்பு ஆய்வுகளில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். உறையூர், காஞ்சிபுரம், அப்புக்கல்லு, பருகூர், குட்டூர், திருவக்கரை ஆகிய ஊர்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் பங்கேற்றுள்ளார். தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை நடத்திய கொற்கை அகழாய்விலும், தமிழ்ப் பல்கலைக்கழகம் நடத்திய கொடுமணல் அகழாய்விலும் பங்கேற்றுள்ளார்.

காசு இயல் ஆய்வு, கல்வெட்டியல் ஆய்வு, தென்னிந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, நகரங்களின் வளர்ச்சி, ஊர் மற்றும் ஆள் பெயர் ஆகியவற்றிலும் ஆய்வு செய்துள்ளார்.

தமிழகத்திலும் கேரளாவிலும் சீனப் பீங்கான்கள் கிடைக்குமிடங்களில் கள ஆய்வு நடத்தியுள்ளார். பண்டைத் தமிழகத் துறைமுகங்கள் பற்றிப் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நல்கையோடு தற்போது ஆய்வு செய்துவருகிறார்.

பாண்டியர் கால வருவாய் முறை, வணிகக் குழுக்களைப் பற்றிச் சப்பானியப் பல்கலைக்கழகங்களோடு இணைந்து ஆய்வு நடத்தியுள்ளார். இந்தியப் பண்பாட்டின் தாக்கத்தைப் பற்றி அறிய தென் கிழக்காசிய நாடுகள் அனைத்திலும் கள ஆய்வு மேற்கொண்டார்.

பல ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார். சோழர் கால வருவாய் முறை, விசயநகர கால வருவாய் முறை பற்றிய நூல்கள் எழுதியுள்ளார்.

இந்திய வரலாற்றுக் கழகத்தின் தொல்லியல் பிரிவுக்குத் தலைமை ஏற்றுள்ளார். தமிழ்நாட்டு வரலாற்றுக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். தென்னிந்தியக் காசு இயல் கழகத்தின் துணைத் தலைவராக உள்ளார்.

# முன்னுரை

*சங்க காலத் தமிழ் நாட்டு வரலாறு எழுதுவதற்குக் காசுகள் ஒரு முக்கியச் சான்றாக உள்ளன அண்மைக் காலம் வரை ஆய்வாளர்களின் முழுக்கவனத்தை இச் சான்றுகள் ஈர்க்கவில்லை இந்நிலை கடந்த 15 ஆண்டுகளில் மாறியுள்ளது சங்க காலக் காசுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு அவை பற்றிய ஆய்வும் தீவிரமாக நடைபெற்றுள்ளது*

*இந் நூலில் தமிழ் நாட்டின் காசு இயல் வரலாறு கால முறைப்படி ஆராயப்பெற்றுள்ளது தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட முன்னோடிக் காசுகளும், முத்திரைக் காசுகளும் வகைப்படுத்தப் பட்டுள்ளன சங்க கால அரசர்களான பாண்டியர், சேரர், சோழர் மற்றும் சிற்றரசர்கள் வெளியிட்ட காசுகள் பற்றிய அனைத்துச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன அண்டை நாட்டுக் காசுகளோடு உரோமானிய நாட்டுக்காசுகள், பிற நாட்டுக் காசுகளும் விளக்கப் பெற்றுள்ளன*

*தின மலர் நிறுவுநர் டி வி இராம சுப்பையர் அறக்கட்டளைச் சொற்பொழிவின் நூல் வடிவமே இந்நூல்*

*இந்நூல் எழுதுவதற்குத் தேவையான நூல்கள் உவந்து அளித்த திருவாளர்கள் இரா கிருஷ்ணமூர்த்தி, முனைவர் ஸ்ரீனிவாசன், சங்கரன்ராமன் ஆகிய அனைவருக்கும் என் நன்றி*

*இச்சொற்பொழிவு, நூலாக வெளிவர உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் சா கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொழிவு அமைப்பாளர் முனைவர் கு பகவதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்*

*29-7-2003*
*பண்டைய வரலாறு தொல்லியல் துறை*
*சென்னைப் பல்கலைக் கழகம்*
*சென்னை - 600 005*

***ப. சண்முகம்***

# காசு படங்களை அளித்தோர்

இந்நூலில் தரப்பட்டுள்ள புகைப் படங்கள் பல நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன புகைப்படங்களை இந் நூலில் வெளியிட கீழ்க்கண்டவர்கள் அனுமதி அளித்துள்ளனர்

1 ஆணையர், அருங்காட்சியகங்கள் (தமிழக அரசு), சென்னை அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை

2 இரா கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், தினமலர், சென்னை

3 இரா நாகசாமி, இயக்குநர் (ஓய்வு), தமிழகத் தொல்லியல் துறை, தமிழக அரசு

4 அளக்குடி ஆறுமுக சீதாராமன், தஞ்சாவூர்

இவர்கள் அனைவருக்கும் என் நன்றி

காசு படங்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது

| காசு பட எண்கள் | அனுமதி அளித்தோர் / மூல நூல் |
|---|---|
| 3,4,5, 47-61, 64-68 | ஆணையர், அருங்காட்சியகங்கள், சென்னை அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை |
| 1,2 7-9, 11-15, 17, 20-22, 24-36, 38-44, 46, 69 | ஆர் கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், தினமலர், *Sangam Age Tamil Coins.* |
| 23, 62 | இரா நாகசாமி, இயக்குநர் (ஓய்வு), தமிழகத் தொல்லியல் துறை, தமிழக அரசு, சென்னை 1. Roman Karur 2. Seminar on Inscriptions. |
| 6,16,19,37,45,63 | அளக்குடி ஆறுமுக சீதாராமன், ராஜராஜன் நகர் தஞ்சாவூர் 1 தமிழகக் காசுகள்; 2 தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி-2; 3 தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி-1 |
| 10, 18 | கே என் வி சேயோன், ஸ்ரீ லங்கா K. N.V. Seyone, *Some Old Coins* |

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | காசு இயல் ஆய்வு | 1 |
| 2. | காசு இயல் ஆய்வு வரலாறு | 9 |
| 3. | சங்க இலக்கியத்தில் காசு | 22 |
| 4. | முன்னோடிக் காசுகள் | 28 |
| 5. | பாண்டியர் காசுகள் | 32 |
| 6. | சேரர் காசுகள் | 47 |
| 7. | சோழர் காசுகள் | 59 |
| 8. | சிற்றரசர் காசுகள் | 65 |
| 9. | பிற பகுதிக் காசுகள் | 73 |
| 10. | வெளிநாட்டார் காசுகள் | 85 |
| | நோக்கு நூல் பட்டியல் | 96 |
| | படங்கள் | |

## சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| *IA.* | *Indian Antiquary* |
| *JASB.* | *Journal of the Asiatic Society of Bengal* |
| *JBBRAS.* | *Journal of the Bombay Branch of the Royal Asiatic Society* |
| *JNSI.* | *Journal of the Numismatic Society* |
| *MJLS.* | *Madras Journal of Literature and Science* |
| *QJMS.* | *Quarterly Journal of the Mythic Society* |
| *SSIC.* | *Studies in South Indian Coins* |
| *TA.* | *Tamilian Antiquary* |

# காசு இயல் ஆய்வு

பண்டைக்காலத்தில் பொருள்களை வாங்கவும் விற்கவும் பண்டமாற்று முறையைப் பயன்படுத்தினர் சம மதிப்புடையதாகக் கருதப்படும் இரு வேறு பொருள்களைப் பரிமாறிக்கொண்டனர் இம்முறையில் ஒரு பொருளின் ஒப்பீட்டு மதிப்பை அறிய முடிந்தது காலப்போக்கில் இம்முறையில் பல இடர்ப்பாடுகள் எழுந்தன முக்கியமாகப் பொருள்களை விற்போரும் வாங்குவோரும சரியான மதிப்புக்கு ஒரு பொருளை விற்கவோ வாங்கவோ முடியவில்லை மேலும் தமக்குத் தேவையான பொருள் கிடைக்கும் வரை விற்போர்/ வாங்குவோர் காத்திருக்க நேரிட்டது இதனால் எல்லாப் பொருளையும் ஒரே பொருளோடு ஒப்பிட்டு, ஒரே மதிப்பை உறுதி செய்யத்தக்க ஒரு பொருளின் தேவையை உணர்ந்தனர் இதன் விளைவாகக் காலப்போக்கில் ‘காசு’ என்னும் ‘மதிப்பீட்டுப் பொருள்’ தோற்றுவிக்கப்பட்டது தொடக்கக் காலத்தில் இப்பொருளை எவ்வாறு அழைத்தனர் என்று அறிய இயலவில்லை ஒரு பகுதியில் அரிதாகக் கிடைக்கும் பொருள்களையே காசு பரிமாற்றத்திற்கு ஏற்றுக் கொண்டனர் இவ்வகையில் கிளிஞ்சல்களும் பின்னர் உலோகங்களும் காசாகப் பயன்பாட்டில் வந்தன காசுகளின் உண்மை மதிப்புக்கும் அவற்றின் செலாவணிக்கும் உறுதி அளிக்கும் வகையில் வணிகர்களின் சின்னங்களும், அரசு சின்னங்களும் அக்காசுகளில் இடப்பட்டன

இந்தியாவில் ஏறக்குறைய கி மு 6ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே காசுகள் புழக்கத்தில் இருந்தன அக்கால இலக்கியங்கள் இக் காசுகளை, கார்ஷாபணம், நிஷ்க, சதமாந, சுவர்ணம், கிருஷ்ணல, புராண போன்ற பெயர்களால் குறிப்பிடும் இதே கால கட்டத்தில் முத்திரைக் காசுகள் வழக்கில் இருந்துள்ளன தமிழ் நாட்டில் ஏறக்குறைய கி மு 3 ஆம் நூற்றாண்டளவில் உலோகக் காசுகள் புழக்கத்தில் வந்தன என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன

## காசு ஆய்வின் பயன்கள்

பழங்காசுகளைக் கண்டெடுத்துச் சேமிக்கும் பழக்கம் மிகத் தொன்மையானது என்று கருத இயலாது குறிப்பாக இந்தியாவில் இப்பழக்கம் எவ்வாறு, என்று தோன்றியதென்று வரையறுக்க

இயலாது. ஆயினும் இந்தியப் பண்பாட்டை அறிவதற்கான சான்றுகளைத் தேடிய 18 ஆம் நூற்றாண்டில் காசுகளையும் கண்டெடுத்து, சேமித்து, ஆய்வு செய்யவும் துவங்கினர். தமிழ் நாட்டிலும் ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டு வாக்கில் இவ்வழக்கம் தோன்றியது. அன்றைய சென்னை மாகாணத்தைச் சார்ந்த நெல்லூரில் (இன்றைய ஆந்திரப் பிரதேசம்) 1786இல் புதையலில் கிடைத்த உரோமானியக் காசுகள் ஆசியவியல் கழகத்திற்கு (கல்கத்தா) அனுப்பி வைக்கப்பட்டன.[1] இவையே இந்தியாவில் முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்ட காசு புதையல் மற்றும் காசுகள் பற்றிய ஓராய்வு. பின்னர் சென்னை அருங்காட்சியகம் 1851இல் தோற்றுவிக்கப் பட்டதைத் தொடர்ந்து காசுகள் சேகரிக்கப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இதற்கென தனி ஆய்வாளர் அமர்த்தப்படவில்லை. பின்னர் முறையான ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டுக் காசுகள் பதிவு செய்யப்பட்டன. இவ் அருங்காட்சியகத் தொகுப்பில் பல அரிய காசுகள் உள்ளன.

தற்போதைய நிலையில் அருங்காட்சியகங்கள் பலவும் அரிய காசுகள் பலவற்றைத் தம் தொகுப்பில் வைத்துள்ளன. முக்கியமாக, புது தில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகம் தொன்மையான தமிழ் நாட்டுக் காசுகள் பலவற்றைப் பாதுகாத்து வருகிறது. சென்னையில் கோட்டை அருங்காட்சியகம் கிழக்கிந்தியக் கம்பெனியின் காசுகளைத் தொகுத்து வைத்துள்ளது.

பல இடங்களில் மண்ணைத் தோண்டும்போது எதிர்பாராவிதமாகப் பழங்காசுகள் புதையலாகக் கிடைப்பதுண்டு. உரோமானியக் காசுகள், முத்திரைக் காசுகளின் புதையல்கள் பல தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முறையான களஆய்வு, அகழாய்வுகளிலும் பழங்காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், கரூர், கொடுமணல், அழகன்குளம் ஆகிய ஊர்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் இருந்தும் காசுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன

காசுகளைச் சேமிக்கும் பழக்கம் முறையான பொழுதுபோக்குக் கலையாகத் தற்காலத்தில் மாறியுள்ளது. தனியார் பலரும் இக்காசு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். காசு சேகரிப்போர் பலர் தம் மனத்திருப்திக்காகச் சேகரித்தாலும் அவற்றின் பொருள் மதிப்பை மனத்தில் நிறுத்தி வணிக நோக்கில் சேகரிப்பில் ஈடுபடுவோருமுண்டு. பழங்காசுகளை விற்போரிடமிருந்து மிகுந்த பொருள் செலவில் காசுகளை வாங்கிச் சேகரிப்போரும் உள்ளனர். இவ்வாறு பொருள்

செலவு செய்து சேகரித்து வைக்கப்படும் காசுகளால் விளையும் பலன் யாது என அறிந்துகொள்ள முயல்வது இயல்பே. பலவகைப் பயன்பாடுகள் உள்ளதெனினும், தமிழகப் பண்பாடு, வரலாறு ஆகியவற்றுக்குக் காசு ஆய்வின் பயனீடு மிக அதிகமானதே. மக்கள் பண்பாட்டு வளர்ச்சியில் காசுகளின் பங்கு முக்கியமானது ஒரு நாட்டின் வரலாறு, பொருளாதார நடவடிக்கைகள், அதன்போக்கு, வளர்ச்சி போன்ற பல தகவல்களை அறிய காசு இயல் ஆய்வு துணை புரியும். காசுகளைப் பலமுனை ஆய்வுக்கு உட்படுத்தும்போது பண்பாடு, கலை வளர்ச்சி, தொழில் நுட்பம் போன்ற பல்துறைச் செய்திகளையும் அறியலாம்

காசுகளை வெளியிடுவதன் முக்கிய நோக்கம் அவை பொருளியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படவேண்டும் என்பதே. எனினும் ஒரு நாட்டின் பொருளியல் வரலாறு எழுதுவதற்கும் காசு இயல் ஆய்வு வேண்டப்படுகிறது. மேலும் அந்நாட்டின் பொருளியல் வளர்ச்சியை அளந்தறிய காசு இயல் ஆய்வு துணைபுரிகிறது. காசுகள் புழக்கத்தை ஒட்டி வணிகப் பெருக்கம் ஏற்படலாம். காசுகளின் தன்மை மற்றும் மதிப்பு ஆகியவற்றை அறிவதால் பொருளியல் நிலைகளில் காணப்படும் ஏற்ற இறக்கங்களையும் அறியலாம். காசின் மதிப்பையொட்டி, பொருள்களின் விலை அமையும். இவ் விலை மதிப்பீட்டை வணிகர்களும், குடிகளும் ஏற்றுக்கொள்வது காசின் பயனீட்டைத் தெளிவாக நிலை நிறுத்தும். அதாவது அக்குறிப்பிட்ட காசை அனைவரும் மதிக்கின்றனர் என்றும் அவை முறையான பயன்பாட்டில் உள்ளன எனவும் அறியலாம். அவ்வாறின்றி, காசின் மதிப்பீட்டை ஏற்கவில்லையெனில், அக் காசினால் பயன் ஏதும் இல்லை. காசுகளின் மதிப்பு, அவற்றின் தன்மை பற்றி வணிக முறையில் மதிப்பீடு செய்யலாம்.

பல காசுகளில் வெளியிட்ட அரசர், வணிகக் குழு ஆகியோரது பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றால் அக்காசுகளை வெளியிட்ட அரசர்கள், சார்ந்த அரசகுலம் ஆகியவற்றை அறியலாம். பெருவழுதி, மாக்கோதை போன்ற சங்க கால அரசர்களின் பெயர் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. பட்டப்பெயரையும் தமிழ்நாட்டு அரசர்கள் தம் காசுகளில் பொறித்துள்ளனர். பகாப்பிடுகு, கங்கைகொண்டசோழன் போன்ற விருதுப்பெயர்கள் உள்ள காசுகளும் கிடைத்துள்ளன. இந்தோ-கிரேக்க அரசர்கள் வெளியிட்ட காசுகளில் தந்தையின் பெயரோடு தம் பெயரையும் பொறித்துள்ளதால் அரசர்கள் குல வழிப்பட்டியலைத் தெளிவாக அறியமுடிந்துள்ளது.

இலக்கியங்கள் தரும் தகவல்கள் சில காசு இயல் ஆய்வில் வெளிப்படும் விவரங்களை உறுதிச் செய்கின்றன. சங்க இலக்கியங்கள் உரோம் நாட்டுடன் ஏற்பட்ட நெருங்கிய வணிக உறவினை விவரிக்கின்றன. தமிழ் நாட்டில் கிடைத்துள்ள உரோமானியக் காசுப் புதையல்கள் பல இக்கூற்றை உறுதிச் செய்கின்றன.

காசு ஆய்வின் மூலம் சில புதிய மன்னர்கள் தெரியவந்துள்ளனர். இப்பெயர்கள் இலக்கியம் கல்வெட்டு போன்ற சான்றுகளில் காணப்படவில்லை. சாதவாகனர்களுக்கு முன்னோடி அரசகுல மரபைச் சார்ந்த 'சத' என்ற அரசர்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களே.[2] வட்டமண்ணு (ஆந்திரப் பிரதேசம்) அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட இவர்களின் காசுகளால் இவ் அரசர்கள் பற்றிய விவரங்கள் தெரிந்தன.

காசுகளில் பொறிக்கப்பட்டுள்ள கடவுள் உருவங்களைக் கொண்டு அக்கால அரசர்கள், மக்கள் ஆகியோரின் சமய நிலைகளை அறியவும் காசு இயல் ஆய்வு உதவும். அரசர்கள் வெளியிட்ட காசுகளில் கடவுள் உருவங்கள் இருப்பதைக்கொண்டு அக்காலத்தில் வணங்கப்பட்ட முக்கிய கடவுள்கள், சமய வளர்ச்சிக்கு அளித்த முக்கியத்துவம், மற்றும் அக்காலச் சமயம் தொடர்பான செய்திகளையும் அறியலாம். மேலும், கடவுள் உருவங்களோடு சிற்ப உருவங்களையும் ஒப்பிட்டு அக்காலக் கடவுள் உருவங்களின் இயல்புகளையும் அறியலாம். அக்கால அரசுகளின் சமயப்பொறை போன்றவற்றையும் அறிய துணை புரியும்.

## காசு இயல் ஆய்வு நெறிகள்

காசுகளில் காணப்படும் உருவங்கள், எழுத்துகள் போன்ற வற்றை ஆய்வது காசு இயல் ஆய்வில் சிறப்பாகக் கருதப்படவேண்டியது என்ற கருத்து அண்மைக்காலம் வரை நிலவியுள்ளது. காசுகளில் பொறிக்கப்பட்ட பல உருவங்கள், சின்னங்கள், அவை சார்ந்த அரசகுலங்கள், அவற்றைப் பயன்படுத்திய பிற அரச குலங்கள் போன்றவற்றை ஆய்வது ஒருவகை. காசுகளில் காணப்படும் எழுத்து வகைகள், சொல்லாட்சி போன்றவற்றை ஆய்வு செய்தல் மற்றொரு வகை. இவ்வகை ஆய்வுகளால் காசுகளை வெளியிட்டோர், வெளியிட்ட காலம், மற்றும் அக்கால எழுத்தியல், மொழியியல் போன்றவற்றை அறிந்து கொள்ள இயலும்.

இந்நிலைகளைத் தாண்டி தற்காலக் காசு ஆய்வுகள் புதிய ஆய்வுத் தன்மைகள், கருதுகோள்கள் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளன.

சமகாலக் கல்வெட்டுகள், இலக்கியங்களில் தரப்பட்டுள்ள காசு பற்றிய சொற்களோடு, காசுகளை இணைத்தும் பொருத்தியும் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறையில் கண்டெடுக்கப்படும் காசுகளின் வரலாற்றுத் தன்மைகளை அறிய இயலும். காசுகளின் உண்மைப் பெயர்களை அறிவதால் அக்காலப் பொருளாதார நிலைகளில், காசுகளின் மதிப்பு, அக்காலப் பொருள்களின் விலை வீதங்கள் போன்றவற்றை அறியலாம். அறிவியல் தொழில் நுட்பத்தோடு இணைந்து பலவகையிலும் காசு இயல் ஆய்வுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அக்காலத் தொழில் நுட்பம் போன்ற பல செய்திகளை அறியலாம்.

அரசர் பெயர் மற்றும் வெளியிட்ட காலம், காசு உருவாக்கப் பட்ட அச்சிடும் சாலை ஆகிய அனைத்துச் செய்திகளோ அல்லது இவற்றில் ஏதேனுமொன்றோ காசுகளில் இடம் பெற்றிருக்கலாம். இவ்விவரங்களிலிருந்து காசுகளை வெளியிட்டோர், எவ் ஆண்டில் வெளியிடப்பெற்றது, வெளியிடப்பட்ட இடம் போன்ற செய்திகளை அறியலாம். தமிழ் நாட்டின் பண்டைய காசுகள் பலவற்றில் இச்செய்திகள் ஏதொன்றும் இடம் பெற்றிராதவகையில் மேற்கண்ட விவரங்களை அறிவது மிகக் கடினம். பெருவழுதி, மாக்கோதை போன்ற சங்க கால அரசர் பெயர்கள் காசுகளில் காணப்பட்ட போதும் வரலாற்றுச் சான்றுகளில் காணப்படும் அரசர் பெயர்களோடு தொடர்பு படுத்த இயலுவதில்லை. ஆயினும் சில உத்திகளைப் பயன்படுத்தி வெளியிட்டோர் போன்ற செய்திகளை அறியமுடியும்.

பல காசுகளில் வெளியிட்டவர்களின் முழுப்பெயர் இல்லாமல் பட்டப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இச் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிட்ட அரசர்களோடு தொடர்புபடுத்த பல சமயங்களில் இயலுவதில்லை. இதனாலும் அக்காசுகளை வெளியிட்டோர் யார் என்று அறிவது கடினமாகிறது. விருதுகளை ஏற்ற மன்னர்களின் விவரங்கள் தெரிந்தால் வெளியிட்ட மன்னர்களை அறிவது சுலபம். பல மன்னர்கள் ஒரே விருதை ஏற்றுக்கொண்டாலும் வெளியிட்டோரை அடையாளம் காண்பது கடினமாகிவிடும். பல்லவ மன்னர்களில் பலரும் விடேல் விடுகு என்ற பட்டப்பெயரை வைத்துக் கொண்டதால் அக்காசுகளை வெளியிட்டவர் பல்லவ மன்னரென்றாலும், அவர்களுள் இன்னார் என்று குறிப்பிட இயலவில்லை. மாறாக, கங்கைகொண்டசோழ என்ற பொறிப்புடைய காசுகளை வெளியிட்டவர் முதலாம் இராசேந்திர சோழன் என்று உறுதியாகக் குறிக்கலாம்.

சில காசுகளில் வெளியிட்டோரின் பெயர் சுருக்கெழுத்தில் அதாவது ஒன்று அல்லது இரண்டு எழுத்துகளில் குறிப்பிடப் பெற்றிருக்கும். இடப்பற்றாக்குறை காரணமாக இவ்வாறு பொறிக்கப் படுவதுண்டு. இம்முறை பண்டைய உரோமானியக் காசுகளில் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தென் இந்தியக் காசுகளில் இம்முறை விசய நகர அரசர்கள் வெளியிட்ட காசுகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது இவ்வகைக் காசுகளில் குறிப்பெழுத்துகளின் விரிவு சரியாகத் தெரியவில்லையெனில் வெளியிட்டவர்களைக் கண்டறிவது இயலாது.

காசுகள் கண்டெடுக்கப்பட்ட பகுதி தெரிந்தால் காசுகளை அப்பகுதியோடு தொடர்புபடுத்தலாம். தமிழகத்தில் கிடைத்த சங்க காலக் காசுகள் இவ்வாறு இட அடிப்படையிலேயே அரச குலங்களோடு தொடர்புபடுத்தப்பட்டன. காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்த சதுர வடிவக் காசுகளில் பெரும்பாலானவை சங்கச் சோழர்கள் வெளியிட்டவை என்று இம்முறையிலேயே கருதப்படுகிறது. ஆயினும் இம்முறையிலும் சில குறைபாடுகள் உள்ளன. எல்லாவிடத்தும் இம்முறையைப் பயன்படுத்த இயலாது கரூரில், உரோமானியர் காசுகள் பலவும் கிடைத்துள்ளன. இங்கு இவர்களின் ஆட்சி இருந்ததற்கு உறுதியான சான்றுகள் ஏதுமில்லை. இக்காசுகள் வணிகத்தின்பால் கொண்டுவரப்பட்டவை என்பது தெளிவு. எனவே காசுகள் மூலம் அறியப்பட்ட இவ்வகைச் செய்திகள் பிற சான்றுகள் மூலம் உறுதிச் செய்யப்படவேண்டும்.

காசுகளில் காணப்படும் சின்னங்கள், உருவங்கள் பலவும் அக்கால அரச, மற்றும் வணிகர்களின் முக்கிய குறியீடுகளாவன. இவற்றை ஏன் ஏற்றுக்கொண்டனர் என்று ஆய்வது பண்பாட்டின் சில தன்மைகளை அறிவதற்கும் விளக்குவதற்கும் வாய்ப்பாக அமையும்.

காசு இயல் ஆய்வின் மற்றொரு தன்மை அக்காசுகளை முறைப்படி வகைப்படுத்துதல். இப்பணி சற்றுக் கடினமானது என்றாலும் காசு இயல் ஆய்வினை வரலாற்று நோக்கில் இட்டுச் செல்லும். பல ஆய்வாளர்கள் காசுகளைக் கண்டுபிடித்து வெளியிடுவதோடு நின்றுவிடுகின்றனர். அக்காசுகளை வகைப்படுத்த முயலுவதில்லை; வகைப்படுத்தினாலும் முறையான வகைப்பாடாக இருப்பதில்லை. காசுகளில் காணப்படும் சின்னங்கள், உருவங்கள் போன்றவற்றைக் கொண்டு காசுகளை வகைப்படுத்துவர். முத்திரைக் காசுகளில் உள்ள பல உருவங்களை, தியோபோல்ட் (1890), துர்காபிரசாத் (1934), டி.டி.கோசாம்பி (1981), பி.எல்.குப்தா, ஹார்டர்கர் (1985) ஆகியோர் வகைப்படுத்தியுள்ளனர். இக் காசுகளை வெளியிட்ட அரச குலங்களோடும் தொடர்புபடுத்தியுள்ளனர்.

வரலாற்று ஆய்வாளர்களில் சிலர் காசு வெளியீட்டை அக்கால அரசுருவாக்கத்தோடு தொடர்புபடுத்துவர் தென் இந்தியாவில் உரோமானியக்காசுகளும், முத்திரைக் காசுகளும் செலாவணியில் இருந்துள்ளன மேலும் உள்நாட்டுக் காசுகள் ஏதும் இப்பகுதியில் கிடைக்கவில்லை எனக் கருதுவார் இர்பான் ஹபீப் இவற்றால் தென்னிந்தியாவில் அரசுருவாக்கம் ஏற்படுவதில் தளர்ச்சி ஏற்பட்டதோ என ஐயுறுவர்[3] அரசு எனும் முறையான நிர்வாக அமைப்பு இருப்பின் காசு வெளியிடுவது இயலும் என்றாலும் இக்கருத்து எல்லாக் காலகட்டத்திற்கும் பொருந்துவதன்று முழுமையான அரசு ஏற்படாத நிலையிலும் வணிகர்கள் போன்றோர் காசுகளை வெளியிட்டுள்ளனர் மேலும் தென்னிந்தியாவில் காசுகளே கிடைக்கவில்லை என்ற இவரது கூற்றுச் சரியல்ல என்பது தெளிவு

காசுப் புழக்கத்தின் தன்மையையும் அதன் பரிமாணத்தையும் விரிவையும் அறிவதன் நோக்கம் காசின் புழக்க வீதத்தை அளந்தறிவதாகும் காசுகள் கிடைத்த இடங்களை அறிவதும் அவற்றை நில வரைபடத்தில் பொருத்திப்பார்ப்பதும் இத் தன்மைகளை அறிய உதவும் அக்கால இலக்கியம், கல்வெட்டுகள் தருகின்ற செய்திகளைக் கொண்டு புழக்கத்தில் இருந்த காசுகளின் மதிப்பை அறியலாம்

காசுகளின் வார்ப்பு முறை மற்றும் அது தொடர்பான வார்ப்பு நுணுக்கங்களையும் அறிவது காசு இயல் ஆய்வின் மற்றொரு பண்பாகும் காசுகளை அச்சடித்த முறை, காசு அச்சுகளைச் செய்த முறை, அவற்றுக்குத் தேவையான தொழில் நுணுக்கம் போன்றவற்றையும் தற்பொழுது ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர் பல அச்சுகள் மூலமாகக் காசுகளை அக்காலத்தில் உருவாக்கியிருக்கலாம் அச்சுக்கு அச்சு உருவங்கள் மாறுபட்டிருக்கலாம் இவற்றையும் ஆய்வதனால் காசு செய்வதற்குப் பயன்படுத்திய அச்சுகளின் தன்மை, நுணுக்கம் ஆகியவற்றை அறிய இயலும்

காசுகள் வார்க்கப் பயன்படுத்திய உலோக மூலங்களை அறிவதற்கான அறிவியல் தொழில் நுட்பம் காசு இயல் ஆய்வாளர்களுக்குக் கிடைத்துள்ளது இதன் மூலம் காசு ஆக்கம், பயன்படுத்திய உலோக மூலக்கூறுகள் ஆகியவற்றை முழுமையாக அறியலாம் இவ்வகை ஆய்வில் முக்கியமாக வேதியியல் மற்றும் பௌதிகவியலார் துணையோடு ஆய்வு நடத்தப்பெற்று முடிவு செய்யப்படும் காசுகள் ஆக்கப் பயன்பட்ட உலோகங்களையும் அவற்றின் தன்மைகளையும் அறிவியல் ஆய்வு பூர்வமாக அளந்தறியலாம் இரண்டு முறைகளில் உலோகத் தன்மைகளை

அறியலாம் முதல் வகை காசிலிருந்து சிறிதளவு உலோகத்தைப் பிரித்தெடுத்து அவற்றின் உலோகப் பொருள் கூறுகளை மதிப்பீடு செய்தல். மற்றொரு முறை காசுக்கு எவ்விதச் சிதைவுமின்றி உலோகக் கூறுகளை அறிதல். இம் மேனிலை அறிவியல் ஆய்வுக்கு உயர்ந்த அறிவியல் கருவிகளும் சிறந்த தொழில்நுட்பமும் தேவைப்படும். மேலும் இம்முறையும் வரலாற்று ஆய்வாளர்களுக்குப் பயன் அளிக்கக்கூடியதே. இவற்றின் மூலம் காசுகளை வெளியிட்டவர் அல்லது வெளியிட்ட இடம் மற்றும் பயன்பாட்டில் இருந்த பகுதி போன்ற பல வகைச் செய்திகளை அறியலாம்.

## குறிப்புகள்


1. Alexander Davidson, "On Some Roman Coins found at Nelore", ***Asiatic Researches,*** Vol.2, (1790),p.331

2. M. Kasturi Bai, "Sada: A New Dynasty Discovered at Vaddamanu, Guntur District in Coastal Andhra Pradesh", ***JNSI,*** 48 (1986), pp.14-23

3. Irfan Habib, "Hoards and History", ***JNSI,*** 50 (1988), p.50

# காசு இயல் ஆய்வு வரலாறு

## தொடக்கம்

தமிழகக் காசுகளை முறையாக ஆய்வு செய்யும் பணி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்கியது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. சர் வால்டர் எலியட், 1886இல் தென்னிந்தியக் காசுகள்[1] என்ற நூலை வெளியிட்டுக் காசு இயல் ஆய்வை முறையாகத் துவக்கி வைத்தார். தமிழகத்தின் தொன்மையான அரச குலங்களான சோழர், பாண்டியர் மற்றும் பல்லவ மன்னர்கள் வெளியிட்ட காசுகள் பலவற்றின் தெளிவான புகைப்படங்களோடு முக்கிய விளக்கங்களும் இந்நூலில் இடம்பெற்றன. எலியட்டின் இச்சிறிய நூல் காசு இயல் ஆய்வாளர்களுக்குத் துணைநூலாக இன்றுவரை பெரிதும் பேணப்பட்டு வருகிறது. வால்டர் எலியட்டின் நூல் மிகச் சிறந்த முன்னோடி நூல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆயினும் இந்நூல் வெளிவருவதற்கு 29 ஆண்டுகளுக்கு முன்பே, 1857-59களில் தம்முடைய காசு இயல் ஆய்வைத் துவக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (தம்முடைய கண்டுபிடிப்புகளைச் சென்னை இலக்கிய அறிவியல் கழகப் பருவ ஏட்டில் முதலில் எழுதினார்.) இக்கட்டுரைகள்தான் கால் நூற்றாண்டு கழித்து நூல் வடிவம் பெற்றன.

தென்னிந்தியாவில் காசு இயல் ஆய்வுகள், எலியட்டின் நூல் வெளிவருவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே துவங்கிவிட்டன. உரோமானியக் காசுகளும் முத்திரைக் காசுகள் சிலவும் அன்றைய சென்னை மாகாணத்தின் பகுதியான நெல்லூரில் (ஆந்திரப் பிரதேசம்) 1786ஆம் ஆண்டு வாக்கில் கண்டுபிடிக்கப்பட்டன. சில ஆண்டுகள் கழித்து (1790), இப்புதையலிலிருந்து கிடைத்த இரண்டு உரோமானியக் காசுகளைப் பற்றிய குறிப்பை அன்றைய ஆளுநரான அலெக்சாண்டர் டேவிட்சன் ஆசியவியல் கழகத்தின் (கல்கத்தா) பருவ ஏட்டில் வெளியிட்டார்.[2] இக்கண்டுபிடிப்பும், குறிப்பும் இந்தியக் காசு இயல் ஆய்வில் முதன்மையானது. இதுவே தென்னிந்தியக் காசு இயல் ஆய்வுகளின் தொடக்கமாகக் கருதப்படவேண்டும். ஐம்பது ஆண்டுகள் கழித்து, 1851இல், உரோமானியக் காசுகள் சிலவற்றைப்

பற்றி, கால்டுவெல் சிறு நூல் ஒன்றை எழுதினார்[3] சர் வால்டர் எலியட், 1857-59களில், சென்னை இலக்கிய அறிவியல் கழகத்தின் பருவ ஏடுகளில் தம்முடைய காசு இயல் ஆய்வுகளை வெளியிட்டார்[4] ஜி பிடெ (1874), சென்னை அருங்காட்சியகக் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் அருங்காட்சியகத்தின் கையிருப்பில் உள்ள பொற்காசுகளைப் பற்றிய பட்டியல் ஒன்றை வெளியிட்டார் மற்றொரு கட்டுரையில் (1883) தென்னாட்டை ஆண்ட கஜபதி, லிங்காயத்துகள், விசயநகர மற்றும் கம்பெனி அரசுகள் வெளியிட்ட பகோடா வகைக் காசுகளை ஆய்வு செய்திருந்தார்[5]

எலியட்டின் நூலைத் தொடர்ந்து, டப்நெல், தென்னிந்தியக் காசுகள் பற்றிய விவரங்களை (1887) வெளியிட்டார் இவரே தென்னிந்தியக் காசு சேகரிப்பாளர்களுக்கு உதவும் குறிப்புகள் பற்றிய சிறு நூலை (1889) எழுதிக் காசு ஆய்வு செய்வதில் நாட்டத்தை உண்டாக்கினார்[6] ஏறக்குறைய இதே கால கட்டத்தில் டிரேசி,[7] பாண்டியர் காசுகளை ஆய்வு செய்தார் திருநெல்வேலிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பாண்டிய மன்னர்களின் தொன்மையான காசுகளின் விவரங்களை லோவன்தால் (1888) அளித்தார்[8] இதே காலகட்டத்தில் டி எம் ரங்காச்சாரியும் டி தேசிகாச்சாரியும் இணைந்து தமிழகத்தில் கிடைத்த டேனிசு அரசு வெளியிட்ட காசுகளைப் பட்டியலிட்டனர்[9] உள்ட்சு, தென்னிந்தியச் செப்புக் காசுகளோடு (1892) பிற காசுகள் (1896) ஆய்வையும் இக்காலகட்டத்தில் மேற்கொண்டார்[10]

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் காசு ஆய்வாளர்கள் பலர் காசுகளைக் கண்டெடுப்பதிலும் காசு ஆய்வுகளை மேற்கொள்ளுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினர் வெளி நாட்டவரோடு இணைந்து நம் நாட்டவர் பலரும் இவ் ஆய்வில் ஈடுபட்டனர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சர் டி எம் ரங்காச்சாரியார், மற்றும் டி தேசிகாச்சாரியார் ஆகியோர் காசு ஆய்வில் 1889 ஆம் ஆண்டு முதலே ஈடுபட்டிருந்தனர் ஆயினும் முழுமையான ஆய்வுகள் 1910 ஆம் ஆண்டிலிருந்து வெளிவரத் துவங்கின திருச்சிராப்பள்ளியிலிருந்து தமிழில் வெளிவந்த தமிழியன் ஆன்டிகுவரி[11] என்ற பருவ ஏட்டில் டி தேசிகாச்சாரியார் தொடர்ந்து தம் ஆய்வுகளை வெளியிட்டார் இக்கட்டுரைகளைத் தொகுத்தும், புதிய கண்டுபிடிப்புகள், புதிய ஆய்வுகள் ஆகியவற்றை மேற்கொண்டு, 1933இல் தென் இந்தியக் காசுகள் என்ற நூலை வெளியிட்டார்[12] பாண்டியர், சோழர், பல்லவர், விசயநகர மற்றும் தமிழகத்தில் கிடைத்த வெளிநாட்டவர் காசுகளைப் பற்றிய கட்டுரைகள்

இந்நூலில் உள்ளன இக் காலகட்டத்தில், இவர்களோடு ஜேஎம் ஹின்டர்சன், லயொநெல் வைபெர்ட், விசி தேசிகாச்சாரியார் போன்றோர் காசு சேகரிப்பிலும், ஆய்விலும் ஈடுபட்டனர்

தேசிகாச்சாரியாரைத் தொடர்ந்து தமிழகக் காசு இயல் ஆய்வில் பெரும் சுணக்கம் ஏற்பட்டது சென்னை அருங்காட்சியகத்தில் காசு இயல் ஆய்வாளர் அமர்த்தப்பட்ட போதிலும் காசு இயல் ஆய்வு முறையாக மேற்கொள்ளப்படவில்லை தமிழகத்தில் புதையலாகக் கண்டெடுக்கப்படும் காசுகள் யாவும் சென்னை அருங்காட்சியகத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்ற சட்ட வரையறையினால் புதையல் காசுகள் யாவும் அருங்காட்சியகத்தை வந்தடைந்தன இக்காசுகள் சரிபார்க்கப்பட்டுப் பட்டியல் இடப்பட்டன; அக்காலகட்டத்தில் முறையான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை

காசு இயல் ஆய்வில் அதிக ஈடுபாடு கொண்டவர் டிஜி ஆராவமுதன் இவர் சில காலம் சென்னை அருங்காட்சியகத்தில் காசுகளின் பாதுகாவலராக இருந்தார் இவர் ரோமானிய மற்றும் தமிழ் நாட்டுக் காசுகளைப்பற்றிய தம் கருத்துக்களைத் தெரிவித்தார் இவரே, வெநீசியக் காசுகளின் பட்டியல் (1938) ஒன்றைத் தயாரித்தார் முத்திரைக் காசுகள் பற்றியும் (1948) தம் கருத்துகளை வெளிப்படுத்தினார்[13] தென் இந்தியக் காசுகளைப் பற்றியும் தமிழ் நாட்டுக் காசுகள் பற்றியும் நல்ல ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் எம்கெ கிருஷ்ணாவும் குறிப்பிடத்தக்கவர் இவர், மைசூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ள தமிழ் நாட்டைச் சார்ந்த காசுகள் பலவற்றைச் சிறப்பாக ஆராய்ந்துள்ளார் முத்திரைக்காசுகள், சோழர், பாண்டியர் காசுகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார் குறிப்பாக டைலரார் திருநெல்வேலிப் பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்ட பாண்டியர் காசுகளை விவரித்துள்ளார்[14]

## வளர்ச்சி

இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் பல நல்ல காசு இயல் ஆய்வுகள் வெளிவரத் துவங்கின அவற்றுள் முத்திரைக் காசுகள் பற்றிய ஆய்வுகள் முக்கியமானவை பிஎல்குப்தா,[15] தென்னிந்தியாவில் கிடைத்த முத்திரைக் காசுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிட்டுள்ளார் பின்னர் தமிழ் நாட்டில் கிடைத்த காசுகளோடு கேரளாவில் கிடைத்த முத்திரைக்காசுகளை ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்[16] முத்திரைக் காசுகளில் போடிநாயக்கனூர் புதையலில் கிடைத்த காசுகளில் காணப்படும் உருவங்கள், அவற்றின் தன்மை, வெளியிட்டவர்கள் யார் போன்ற பொருள்களையொட்டி விரிவான ஆய்வை டி டி கோசாம்பி மேற்கொண்டார்[17] ஏறக்குறைய

இதே கால கட்டத்தில் (1955) ஆர் வனஜா[18] தமிழ் நாட்டில் கிடைத்த முத்திரைக் காசுகளின் தன்மைகளை ஆய்ந்தார் இவ் ஆய்வுகளின் விளைவாகத் தமிழ் நாட்டில் கிடைத்த முத்திரைக் காசுகளில் ஒரு சில தமிழ் நாட்டு அரசுகள், குறிப்பாகப் பாண்டிய அரசு வெளியிட்டவை என்பது புலனாயிற்று

தமிழ் நாட்டுக் காசுகளை ஆய்வு செய்யும் ஆர்வம் 1960 களில் மீண்டும் ஏற்பட்டது சிஎச்பிதுல்ப், பாண்டியர் காசுகளை ஆய்ந்து 1966இல் நூல் வெளியிட்டார்[19] இவரே 1968இல் சோழர் காசுகள் பற்றி மற்றொரு நூல் வெளியிட்டார்[20] இவ்விரண்டு நூல்களும் இந்தியக் காசு இயல் கழகத்தாரால் வெளியிடப்பட்டன முதன் முதலாக, தமிழக அரச குலங்களான பாண்டியர், சோழர் வெளியிட்ட காசுகளைப் பற்றிய முழுமையான ஆய்வு நூல்கள் இவையாகும் சங்க காலப் பாண்டியர் வெளியிட்ட காசுகளும் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன அக்காலப் பொருளாதாரத்தில் காசுகளின் தன்மை பற்றிய விளக்கம் உள்ளது குறிப்பிடத்தக்கதாம்

கடந்த கால் நூற்றாண்டில் காசு இயல் ஆய்வு நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது புதிய காசுகள் கண்டுபிடிக்கப்பட்டு நூல்கள் பல வெளிவந்துள்ளன தென்னிந்திய காசுகள், வளர்ச்சி, அரச குலங்கள் வழி காசு ஆய்வு மற்றும் காசுகளின் மதிப்பு, அவற்றின் பொருளாதாரத் தன்மைகள் ஆகியன பற்றி ஆய்ந்தவர்களில் பி சட்டோபாத்யாய (1977) முதன்மையானவர் இவர் வெளியிட்ட தென்னிந்திய காசுகள் என்ற நூலில் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட தொன்மையான காசுகள் பற்றியும், சோழர், பாண்டியர் அரச குலங்கள் வெளியிட்ட பல காசுகளைப் பற்றியும் நீண்ட ஆய்வு தரப்பட்டுள்ளது[21]

சாதவாகனர் காசுகளில் உள்ள பெயர் பொறிப்பைப்பற்றி முதலில் ஆய்ந்தார் இரா நாகசாமி[22] தமிழ் நாட்டுக் காசுகள் பற்றிய நூல் ஒன்றைப் பல ஆண்டுகள் கழித்து வெளியிட்டார் இவரது நூலில் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட காசுகள் மற்றும் அவை பற்றிய ஓரளவு முழுமையான ஆய்வும் இடம் பெற்றுள்ளது பாணர் காசுகள், நாயக்க அரச குலங்கள் வெளியிட்ட காசுகள், வெளிநாட்டினர் காசுகள் ஆகியவற்றோடு, தமிழரின் காசு பரிமாற்றம் போன்றவற்றையும் ஆய்ந்துள்ளார்[23] அகழாய்வுகளிலும் கள மேற்பரப்பு ஆய்வுகளிலும் கிடைத்த பல புதிய காசுகளின் விவரங்களையும் அளித்துள்ளார்

தமிழ் நாட்டில் வெளிநாட்டுக் காசுகள் பல கிடைத்துள்ளன சென்னை அருங்காட்சியகத்தின் இருப்பில் உள்ள சீனக் காசுகள் (1971),

வெநீசியக் காசுகள் (1989) இலங்கைக் காசுகளை என் சங்கரநாராயணன் தொகுத்துள்ளார்[24] விசய நகர அரசர்களின் காசுகளும் தனி நூலாக (1994) இவரால் வெளியிடப்பட்டுள்ளது[25] சென்னை அருங்காட்சியகத்தின் இருப்பில் உள்ள உரோமானியர் காசுகள் (1994, 1998), சோழர் காசுகள் (1996), இந்தோ-சசானியர் காசுகள் (1997) பற்றி இரா சாந்தி சில கட்டுரைகள் வாயிலாக விவரம் அளித்துள்ளார்[26]

தமிழகத்தில் காசு இயல் ஆய்வு பலபடி முன்னேற்றங்களைக் கண்டுள்ளது காசு சேகரிப்போர் பலர் முன்னாளில் காசுகளைப் பரிசோதனைக்குட்படுத்த விரும்பவில்லை காசுகள் ஆய்வாளர்களுக்குக் கிடைப்பதும் மிக அரிதாகவே இருந்துள்ளது இந்நிலை கடந்த இருபது ஆண்டுகளில் மாறி, காசு சேகரிப்போர் தம்மிடம் உள்ள அரிய காசுகளைக் காசு ஆய்வாளர்களிடம் விரும்பி அளிக்கின்ற பாங்கு தற்போது உள்ளது காசு சேகரிப்போரே தம்மிடமுள்ள காசுகளைப்பற்றி நூல் எழுதும் தன்மையை இன்றைய காசு சேகரிப்பாளரிடம் காண்கின்றோம் இவ்வகையில் காசு ஆய்வுக்கு முக்கிய சான்றுகள் கிடைப்பது சற்று இலகுவாயுள்ளது இதே கால கட்டத்தில் காசுகளைக் கண்டுபிடித்து ஆய்வதில் ஆர்வம் காட்டியவர்கள் பலர் அவர்களுள் எஸ் இராமையா, தம் இருப்பில் உள்ள காசுகள் பலவற்றைப் பற்றி, குறிப்பாசக் களப்பிரர் காசுகள் (1973, 1980) பற்றி ஆராய்ந்துள்ளார்[27]

சங்ககால அரசுகளின் காசுகள் பல கண்டெடுக்கப் பட்டிருந்தாலும் அவற்றை முழுமையாகத் தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்தவர் இரா கிருஷ்ணமூர்த்தி அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டுக் காசுகள் பற்றிய பல புதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுத் தமிழ் நாட்டு காசு இயல் ஆய்வில் திருப்பத்தை ஏற்படுத்தியவர் காசுகள் பற்றிய இவரது முதல் நூல் (1986) சங்ககாலச் சோழ அரசர்கள் வெளியிட்ட காசுகள் பற்றியது அடுத்த ஆண்டு (1987) சங்க காலப் பாண்டிய அரசர்கள் வெளியிட்ட காசுகளைத் தொகுத்தளித்தார் சங்ககால மலையமான் குறுநில அரசர்கள் வெளியிட்ட காசுகளின் தொகுப்பை அடுத்து வெளியிட்டார் (1990) இம் மூன்று நூல்களும் தமிழில் எழுதப்பட்டவை[28] பின்னர் இத்தொகுப்பை ஒரே நூலாக ஆங்கிலத்தில் வெளியிட்டார்[29] இந் நூல்கள் யாவிலும் தம் இருப்பில் உள்ள காசுகளை விவரித்திருந்தார் சில இடங்களில் பிறர் காசுகளையும் ஒப்பிட்டுள்ளார் காசுகளின் நல்ல புகைப்படங்களும் வரைபடங்களும் இவரது நூல்களில் இடம் பெற்றுள்ளன தம் இருப்பில் உள்ள மத்திய தரைக்கடல் நாடுகள் காசுகள், பிற்கால உரோமானியர் காசுகள்,[30] பல்லவர் காசுகள்[31] ஆகியவற்றையும் பதிப்பித்துள்ளார்

தம் இருப்பில் உள்ள பல்லவர் காசுகளைப் பற்றிச் சிறு நூல் ஒன்றை, கே ஏ திருஞானசம்பந்தம் (1989) எழுதினார்[32] ஆறுமுக

சீதாராமன், தம் இருப்பில் உள்ள காசுகளையும் புதிய கண்டுபிடிப்பு களையும் தொகுத்து 1989 முதல் செய்திக் குறிப்புகளாகவும் சிறு கட்டுரைகளாகவும் வெளியிட்டார் இவற்றில் சங்க கால அரசர் காசுகள், உரோமானியர் காசுகள், சோழ, மராட்டியர், சேதுபதிகள் போன்ற தமிழகத்தை ஆண்ட அரசகுலங்களின் காசுகள் அடங்கும் இவற்றைத் தொகுத்துச் சிறு நூல்களாக (1994, 2002) பின்னர் வெளியிட்டார்[33] இவரோடு இணைந்து சங்கரன்ராமன், பல்லவர் காசுகள் (2002), மதுரை நாயக்கர் காசுகள் (2002) பற்றிச் சிறு நூல்கள் எழுதியுள்ளார்[34] வித்வான் ஐ இராமசாமி, கொங்கு நாட்டுப்பகுதியில் கிடைத்த தொன்மையான காசுகள் (1991, 1992), சேரர் காசுகள் பற்றி ஆய்ந்துள்ளார்[35]

தமிழ் நாட்டுக் காசுகள் அனைத்தையும் தொகுத்துத் தமிழில் நூல் எழுதினார் நடன காசிநாதன் இவர் வெளியிட்ட தமிழர் காசு இயல் (1995) நாகசாமியால் எழுதப்பட்ட ஆங்கில நூலைப் போன்றதே இந்நூலில் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் பலவும் தரப்பட்டுள்ளன தொல்லியல் அகழாய்வில் கிடைத்த காசுகள் பலவற்றின் தகவல்கள், விளக்கங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன[36] இவரே ஆண்டிப்பட்டிக் காசுகள் (1989), கண்டகோபாலன் மாடை (1991) அகழாய்வுகளில் கிடைத்த உரோமானியக் காசுகள்[37] பற்றியும் எழுதியுள்ளார்

உரோமானியக் காசுகள் பற்றிய ஆய்வுகள் கடந்த பத்தாண்டுகளில் அதிகமாக நடைபெற்றுள்ளன இக்காசுகள் கிடைத்த இடங்கள் மற்றும் காசுகள் பற்றிய தகவல்களைச் செவ்வனே அளித்துள்ளார் பால ஜெ டர்னர்[38] ரோமானியக் காசுகள் பற்றிய பல சிக்கல்களை, பீடர் பெர்கஸ்,[39] மக் டொவல்,[40] கே வி ராமன்[41] ஆகியோர் பல கட்டுரைகளில் ஆய்ந்துள்ளனர் பி விராதாகிருஷ்ணன்,[42] எஸ் சுரேஷ்[43] ஆகியோரும் ரோமானியக் காசுகள் பற்றிய ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர் இதே கால கட்டத்தில் ரோமானியக் காசுகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள் பலவற்றை டி சத்தியமூர்த்தி,[44] சாந்தலிங்கம்,[45] வேதாசலம்[46] ஆகியோர் விவரித்துள்ளனர்

தென்னிந்தியக் காசுகளைப்பற்றி விரிவாக ஆய்ந்து இரண்டு நூல்களை (1995,1998) எழுதியுள்ளார் மைக்கேல் மிசினர்[47] இவ்விரண்டு நூல்களிலும் வெளியிட்ட அரச குலங்கள் பற்றி வரலாற்றுக் குறிப்பு உண்டு இதுவரை கிடைத்த காசுகளை வகைப்படுத்தி, காசுகளின் தெளிவான புகைப்படங்களையும் அளித்துள்ளார் அண்மையில் கே கணேஷ் தமிழ் நாட்டுக் காசுகள்

பற்றி நூல் எழுதியுள்ளார். தமிழ் நாட்டில் 9-18 ஆம் நூற்றாண்டுகளில் புழக்கத்தில் இருந்த காசுகள் பற்றிய தொகுப்பு; நல்ல புகைப்படங்களோடு முக்கிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.[48]

## காசு இயல் ஆய்வில் நிறுவனங்கள்

காசு இயல் ஆய்வில் அருங்காட்சியகங்களும், ஆய்வுக் கழகங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சென்னை அருங்காட்சியகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே காசு இயல் ஆய்வில் ஈடுபட்டுள்ளது. தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்படும் புதையல்கள் யாவும் அருங்காட்சியகத்தை வந்தடையவேண்டும் என்ற சட்ட வரைவினால் நிறைய காசுகளை இவ் அருங்காட்சியகம் பெற்றது. இக்காசுகளைப் பராமரிக்கவும் ஆய்வு செய்யவும் காசு இயல் பிரிவுக்கென்றே தனிக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். ஜி. பிடே, எட்கர் தர்ஸ்டன், டிஜி. ஆராவமுதன், டி. பாலகிருஷ்ணன் நாயர், ஆர். வனஜா, பி. மோகன்தாஸ், என். சங்கரநாராயணன், ஆர். சாந்தி ஆகிய பலரும் இவ் அருங்காட்சியகத்தின் இருப்பில் உள்ள காசுகளை முறையாக ஆய்ந்துள்ளனர். தென் இந்தியாவில் தன் இருப்பில் அதிக வகையான இந்தியக் காசுகளைக் கொண்ட அருங்காட்சியமாகத் திகழும் இந் நிறுவனம் தமிழ் நாட்டு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. சென்னைக் கோட்டையில் அமைந்துள்ள அருங்காட்சியகம், மத்திய அரசின் தொல்பொருள் பரப்பு ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவ் அருங்காட்சியகத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி காசுகள் பலவும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்தியக் காசு இயல் ஆய்வில் முக்கியப் பங்கை இந்தியக் காசு இயல் ஆய்வு கழகம் (Numismatic Society of India) வகிக்கிறது. இக்கழகம் 1910 ஆம் ஆண்டு அலஹாபாத்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் முக்கிய ஊர்களில் கூடி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புது ஆய்வுகளை வெளிக்கொணர்ந்துள்ளது. இதன் தலைமையகம் தற்பொழுது வாரநாசியில் உள்ளது. ஒரு நூற்றாண்டு காலமாக இக் கழகமே இந்தியக் காசு இயல் பற்றிய முறையான ஆய்வை மேற்சொண்டிருந்தது. தமிழ் நாட்டைச் சார்ந்த பேராசிரியர்கள் டி.வி. மஹாலிங்கம், கே.வி.ராமன் மற்றும் இரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இதன் கருத்தரங்க மாநாடுகளில் தலைமை ஏற்றவர்கள். ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட 1939 இல் பருவ இதழ் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தியக் காசு ஆய்வாளர்கள் பலரது ஆய்வுக் கட்டுரைகள் இக் கழகத்தின் பருவ இதழில் வெளியிடப் பட்டன. தென்னிந்தியாவில் காணப்பட்ட முத்திரைக் காசுகள், உரோம காசு

புதையல்கள், சங்க காலக் காசுகள், சோழர், பாண்டியர் காசுகள், கல்வெட்டுகளில் காணப்படும் காசுகள் பற்றிய விளக்கங்கள், காசு அச்சடிக்கும் முறை போன்ற பல நோக்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன தமிழகத்தில் கிடைத்த சீனக் காசுகள் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் கட்டுரைகள் உள்ளன சோழர் காசுகள், பாண்டியர் காசுகள் என்ற சிறு நூல்களை வெளியிட்டுத் தமிழ்நாட்டுக் காசு இயல் ஆய்வுக்குத் துணை செய்துள்ளது

தமிழ் நாட்டுக் காசுகளைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ளவும், தமிழ் நாட்டுக் காசு ஆய்வாளர்கள் ஒன்று கூடி விவாதிப்பதற்கும் ஏதுவாக இந்தியக் காசு இயல் கழகத்தைப்போன்ற ஓர் அமைப்பின் முக்கியத்துவம் 1980களில் உணரப்பட்டது இக் கருத்துக்கு ஆக்கபூர்வமான அமைப்பு 1986 இல் தான் உருவாயிற்று இரா கிருஷ்ணமூர்த்தியைத் தலைவராகக் கொண்டு தமிழகக் காசு இயல் சங்கம் (Tamıl Nadu Numısmatic Society) தோற்றுவிக்கப் பட்டது இக்கழகம் ஆண்டுக் கருத்தரங்குகளை நடத்தியும் சில சிறப்பு நூல்களை வெளியிட்டும் தமிழ் நாட்டுக் காசு இயல் ஆய்வுப் பணியைத் தொடர்கிறது

ஏறக்குறைய இதே காலகட்டத்தில் தென் இந்தியக் காசு இயல் ஆய்வுக் கழகம் 1988 இல் தோற்றுவிக்கப்பட்டது (South Indian Numismatic Society). தென்னிந்தியக் காசுகளை ஆய்வதும், ஆய்வுக்குத் துணைபுரிவதும், ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்துதலும் இக் கழகத்தின் முக்கிய நோக்கங்களாவன ஒவ்வோராண்டும் ஒவ்வொரு மாநிலத்தில் கூடி, புதிய கண்டுபிடிப்புகள், பிற செய்திகளைக் கடந்த 13 ஆண்டுகளாக விவாதித்துள்ளது ஆய்வுக் கட்டுரைகளைப் பதிப்பிக்க ஆண்டு இதழ் ஆரம்பிக்கப்பட்டது இவ் இதழ் மூலம் புதிய கண்டுபிடிப்புகள், செய்திகள் வெளியிடப் படுகின்றன முத்திரைக் காசுகள், சாதவாகனர் காசுகள், உரோமானியர் காசுகள், சங்க காலக் காசுகள், கருநாடக ஆந்திரப் பகுதிகளில் கிடைத்த புதிய காசுகள் யாவும் ஆண்டு இதழ்களில் வெளியிடப் படுகின்றன தென்னிந்தியக் காசு இயல் ஆய்வை ஆரம்பித்து வைத்து மற்றவர்களுக்கு நல்ல முன்னோடியாக இக்கழகம் திகழ்கிறது

கடந்த 15 ஆண்டுகளில் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ளூர் காசு ஆய்வுக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன அவற்றுள் முதன்மையானது, சென்னைக் காசுக் கழகம் (Madras Coin Society) இக்கழகம் 1994 முதல் புதிய கண்டுபிடிப்புகளை ஒவ்வோராண்டும் முறையாக வெளியிடுகிறது மேலும் அவ்வப்போது கருத்தரங்குகள்,

காசுகள் கண்காட்சி நடத்தி மக்களிடம் பழங் காசுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது

தமிழ் நாட்டில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளை முறைப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது தமிழகத் தொல்லியல் கழகம் இக்கழகம் 1991இல் தஞ்சாவூரில் ஆரம்பிக்கப் பட்டது இக் கழகத்தின் ஆண்டு வெளியீடான ஆவணம் தமிழில் வெளியிடப்பெறுகிறது இப்பருவ ஏட்டில் தொல்லியல் சார்ந்த செய்திகள் அதிகம் இடம் பெற்றிருப்பினும் புதிய காசுகள் பற்றிய விவரங்களும் வெளியிடப்படுகின்றன

## புதிய கண்டுபிடிப்புகள்

காசு இயல் ஆய்வில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடம் உண்டு புதிய வகைக்காசுகளும் அவற்றின் தன்மைகளும் இதன் மூலம் வெளிப்படும் புதிய கண்டுபிடிப்புகள் அண்மைக் காலத்தில் பல்கிப் பெருகியுள்ளன சங்க காலத் தமிழ் அரசர்களின் காசுகள் கண்டுபிடிக்கப்பட்டபோதும் பெயர் பொறித்த காசுகள் 1968 வரை காணப்படவில்லை அவ் ஆண்டு ஆண்டிப்பட்டி புதையலில் கண்டெடுக்கப்பட்ட ஈயக் காசுகளில் 'அதின்னன் எதிரான் சேந்தன்' என்று பெயர் பொறிப்புக் காணப்பட்டது சங்க காலத் தமிழ் நாட்டுக் காசுகளில் எழுத்துப்பொறிப்போடுள்ள காசுகளில் இவற்றையே முதலாவதாகக் கருதவேண்டும்[49] பின்னர் எஸ்ராமையா 1973 இல் களப்பிரர் காசுகளில் அச்சுதவிகந்த, களபிர[50] என்ற பெயர் பொறிப்புகள் உள்ளன என்று தெரிவித்தார் இவரது கருத்துப்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட பல காசுகளில் பெயர் பொறிப்பு உள்ளது காசுகளைச் சரியாக ஆராயாமல் பொறிப்புள்ளது என்ற இவரது கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல இவர் வெளியிட்டுள்ள பல காசுகளில் எழுத்துப்பொறிப்பு உள்ளதாக இவர் தவறாகக் கருதுகிறார் இவர் இருப்பில் உள்ள காசுகள் தற்போது யாரிடம் உள்ளன என்றும் அறிய இயலவில்லை என்பதால் இவரது கூற்றைச் சரிபார்க்க முடியவில்லை

சங்க கால சேர அரசன் பெயர் பொறித்த காசுகளைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்தவர் இரா நாகசாமி இவர் 1987 ஆம் ஆண்டில் கொல்லிப்புறை என்ற சேர அரசன் பெயர் பொறித்த காசு பற்றிய தகவலை அறிவித்தார்[51] கரூரில் அமராவதி ஆற்றுப்படுகையில் கிடைத்த சேர அரசரின் தலையோடு மாக்கோதை என்ற பெயர் பொறித்த காசை இரா கிருஷ்ணமூர்த்தி 1990 இல் கண்டுபிடித்தார் இக்கண்டுபிடிப்பைப் பற்றி நாக்பூரில் நடைபெற்ற காசு ஆய்வியல்

கழகத்தின் ஆண்டு மாநாட்டில் வெளியிட்டார். பெயரோடு அரசரின் தலையுள்ள தமிழக அரசரின் காசு தமிழகத்தில் கிடைப்பது இதுவே முதல் தடவையாகும். இக்காசு உரோம நாட்டுத் திநாரோடு ஒத்துள்ளது என்பார் அவர்.[52] பின்னர் ஆறுமுகசீதாராமன் இதே போன்ற காசைக் கண்டுபிடித்தார்.[53] சேர அரசர்களில் குட்டுவன் கோதை என்ற பெயர் பொறித்த மற்றொரு காசு இரா.கிருஷ்ணமூர்த்தியால் 1994இல் கண்டெடுக்கப்பட்டது.[54] பாண்டிய அரசர்களில் பெருவழுதி அரசர் பெயர் பொறித்த காசுகளை 1985 ஆம் ஆண்டில் இரா. கிருஷ்ணமூர்த்தி கண்டெடுத்தார்.[55] கிரேக்க சிற்றரசர்களின் காசுகளும், கிரேக்கத் தீவு அரசர்கள் காசுகளும் இவரால் கண்டுபிடிக்கப்பட்டன.[56]

## குறிப்புகள்

1. Elliot, W., *Coins of Southern India,* London, 1885-86, Reprint Varanasi, 1970.
2. Alexander Davidson, "On Some RomanCoins found at Nelore", *Asiatic Researches,* Vol. 2, (1790) p. 331.
3. Caldwell, R., *Roman Imperial Aurei,* 1851.
4. Elliot, W., "Catalogue of Gold coins in the Government Central Museum, 1874; -----"Numismatic Gleanings", *MJLS.*, (New Sereies), vol.3, 1857-58; Vol.4, 1858-59.
5. G. Bidie., "The Pagoda or Varaha Coins of Southern India", *JASB.,* Vol.52, (1883), p.33.
6. Tufnell, R.H.C., "On a Collection of South Indian Coins", *JASB.*, iv., 1887, pp.157-60; plates vi-vii; Tufnell, R.H.C., *Hints to Coin Collectors in South India,* Madras, 1889.
7. Tracey, J.E., "Pandya Coins," *MJLS.,* 1887-88, pp.138-44.
8. Loventhal, E., *The Coins of Tinnevelly,* Madras, 1888.
9. Rangachariar, T.M., and Desikachari, T., "Indo-Danish Coins", *MJLS.,* 1888-89.
10. Hultzsch, E., "South Indian Copper Coins," *I.A,* xxi, 1892, pp.321-26; Hultzsch, E., "Micelleneous South Indian Coins," *IA.,* xxv, 1896, pp.317-23.
11. Desikachari, T., "Dravidian Kingdoms and List of Pandyan Coins," *TA.*, vol.I, No.ix, 1911, pp.1-16; Desikachari, T., "Pandiyan Coins," *TA.,* Vol. II, No. 1, 1913, pp.99-109 (pp.1-16); Desikachari, T., "The Cholas and their Coinage," *TA.,* Vol. II, No.2, 1914, pp.1-19; Desikachari, T., "Numismatics with speical relation to South India," *QJMS.,* III, I, 1913, pp.1-11; Desikachari, T., "South

Indian Epigraphy and Numismatics," *Proceedings of the Madras Literary Society,* 1916, p.33 ff.;

12. Desikachari, T., *South Indian Coins,* Trichinopoly, 1933.

13. T.G.Aravamudhan, *Catalogue of Venitian Coins in the Madras Government Musuem,* Chennai, 1938; T.G.Aravamudhan, "Punch Marked Coins," *JNSI.* vol.10, (1948).

14. *Annual Report of the Mysore Archaeological Department for the year 1935,* Ancient Coins from the Extreme South of India, pp.67-71.

15. P.L. Gupta, "A Bibliography of the Hoards of Punch-marked Coins of Ancient India," *JNSI.,* vol.17 (1955), pp.15-19.

16. P.L.Gupta, *The Early Coins from Kerala,* Government of Kerala, 1965.

17. D.D.Kosambi, "The Bodinayakanur Hoard," *JBBRAS.,* vol.26, ii, (1951), pp.214-218.

18. R. Vanaja, *The Madras Museum Collection of Punch-Marked Coins, A Study,* M.Litt., unpublished thesis, University of Madras, 1955.

19. Biddulph, C.H., *Coins of the Pandyas,* Numismatic Society of India, Varanasi, 1966.

20. Biddulph, C.H., *Coins of the Cholas,* Numismatic Society of India, Varanasi, 1968.

21. Chattopadhyaya, Brajadulal., *Coins and Curency Systems in South India,* New Delhi, 1977.

22. R. Nagasamy, "A Bilingual Coin of a Satavahana," *Seminar on Inscriptions,* Chennai, 1968, pp.200-202; R. Nagaswamy, "A Bilingual Coin of Vasisitiputra Siva Sri Pulamavi", *Journal of Archaeology of Andhra Pradesh,* vol.1., (1985) pp.105-113.

23. R. Nagasamy, *Tamil Coins-A Study,* Department of Archaeology, Chennai, 1981.

24. N. Sankaranarayana, "Three Hoards of Chinese Coins in Madras Government Museum", *JNSI,* vol.33(1971). pp.61-68.

25. N. Sankaranarayana, *Catalogue of Vijayanagar Coins in the Madras Government Museum,* Chennai, 1994.

26. *இரா. சாந்தி, "அருங்காட்சியக ரோமானிய நாணயங்களில் கட்டிடக் கலை", Special Bulletin, Madras Coin Society:*Coinex 94 Madras, 1994, pp.6-11; R.Shanthi, "A New Gold Coin of Rajendra Chola - I", *SSiC.,*

vol.6 (1996), PP.71-72; R. Shanthi, "Vallimalai Hoard of Indo Sassanian Silver Coins from Tamil Nadu", *SSIC.*, vol. 7, (1997) pp.73-76; R. Shanthi, "Consecratio Coins of Faustina from Tirukkoilur Hoard", *SSIC.*, vol.8, (1998), pp.40-43.

27. S. Ramayya, "The Kalabhras and their Coinage," *JNSI.* 35, 1973, pp.142-154; S Ramayya, "A Note on Kalabhra Kootran's Coins", *JNSI.*, 42 (1980), pp.18-20.

28. இரா. கிருஷ்ணமூர்த்தி, *சங்க காலச் சோழர் நாணயங்கள், 1986;* இரா. கிருஷ்ணமூர்த்தி, *பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், 1987;* இரா, கிருஷ்ணமூர்த்தி, *சங்ககால மலையமான் நாணயங்கள், 1990.*

29. R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins,* Chennai, 1997.

30. R. Krishnamurthy, *Late Roman Copper Coins from South India, Karur and Madurai,* Chennai, 1994; R. Krishnamurthy, *Non Roman Ancient Foreign Coins from Karur in India,* Chennai, 2000.

31. R. Krishnamurthy, "Coins of the Pallava King Mahendravarman I", JNSI., 50, (1988), pp.33-34; R. Krishnamurthy, "Some Unpublished Rare Coins of Pallavas", *JNSI.,* 50, (1988), pp.35-36; R. Krishnamurthy, "Pallava Coin with Lion Symbol", *JNSI.*, 51, (1989), pp.90-92; R. Krishnamurthy, "Two More Pallava Coins with Legends", *JNSI.*, 52, (1991), pp.62-63.

32. K.A. Thirugnana Sampandan, *Kanchi Pallava Coins,* Erode, 1989.

33. ஆறுமுகசீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி-1, தஞ்சாவூர், 1994; ஆறுமுகசீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி-2, தஞ்சாவூர், 2000; ஆறுமுகசீதாராமன், *தமிழகக் காசுகள்,* தஞ்சாவூர், 2002; ஆறுமுகசீதாராமன், *தஞ்சாவூர் நாயக்கர் காசுகள்,* தஞ்சாவூர்,2002.

34. ஆறுமுகசீதாராமன், சங்கரன்ராமன், *பல்லவர் காசுகள்,* தஞ்சாவூர், 2002; ஆறுமுகசீதாராமன், சங்கரன்ராமன், *மதுரை நாயக்கர் காசுகள்,* தஞ்சாவூர், 2002.

35. I. Ramasamy, "Ancient Chera coin found", in *JNSI,* vol.53, (1991), pp.48-50; I. Ramasamy, "Sangam Age Bow fish Coin", *JNSI,* vol.54, (1992), pp.48-50.

36. நடன காசிநாதன், *தமிழர் காசு இயல்,* சென்னை, 1995.

37. Natana Kasinathan, "Andipatti Coins-A Re appraisal", *Art Panorama of Tamils,* Chennai, 1992; Natana Kasinathan, "Gandagopalan Madai", *SSIC.*, vol.1 (1991), pp.87-90; Natana Kasinathan, "Roman Coins from

Alagankulam Excavations", *SSIC,* vol.3 (1993), pp.47-50; Natana Kasinathan, "Coins from Alagankulam and Padaividu Excavations", *SSIC,* vol.v (1995), pp.85-88.

38. Paula J. Turner, *Roman Coins from India,* London, 1989.
39. Peter Berghaus, "Roman Coins from India and their Imitations", *Coinage, Trade and Economy,* ed. A.K.Jha, Nasik, 1991, pp.108-121.
40. Mac Dowall, "Indian Imports of Roman Silver Coins", *Coinage, Trade and Economy,* ed. A.K.Jha, Nasik, 1991, pp.145-163.
41. K.V. Raman, "Roman Coins from Tamil Nadu", *SSIC,* vol.2, (1992), pp.19-34.
42. P.V. Radhakrishnan, *Roman Gold & Silver Coins from India,* Nasik, 1999.
43. S.Suresh, *Roman Antiquities in Tamil Nadu,* Chennai.
44. T.Satyamurthy, *Catalogue of Roman Gold Coins,* Thiruvanantapuram, 1992.
45. C.Santalingam, "Roman Coins from Kambam Valley in Tamil Nadu", *SSIC,* vol.7, (1997), pp.57-60.
46. V.Vedachalam and C.Santalingam, "Discovery of Roman Coins from Nattampatti in Tamil Nadu", *SSIC,* vol.9, (1999), pp.53-64.
47. Michael Mitchiner, *Coin Circulation in Southernmost India,* Nasik, 1995; Michael Mitchiner, *The Coinage and History of Southern India,* 2 parts, London, 1998.
48. K. Ganesh, *The Coins of Tamil Nadu,* Bangalore, 2002.
49. *இக்காசுக் கண்டுபிடிப்பைப் பற்றி, பி.என். மோகன்தாஸ் இந்து நாளேட்டில் விவரம் அளித்திருந்தார்.* P.N. Mohandas, "New Find of Coins with Tamil-Brahmi characters of great Numismatic value", *The Hindu,* 7 January, 1968.
50. S. Ramayya, "The Kalabhras and their Coinage," *JNSI,* 35, (1973), pp.142-154.
51. *தினமணி, நவம்பர், 15, 1987.*
52. R. Krishnamurthy, "Makkotai Coins", *SSIC,* vol.2. (1992), pp.89-93.
53. *"சங்ககாலச் சேரமான் மாக்கோதையின் வெள்ளிக்காசு", தினமணி, 24-11-90.*
54. *The Hindu,* 1984, May, 24.
55. R. Krishnamurthy, "Sangam Period Pandya coins with Tamil-Brahmi Legends", *JNSI,* 47, (1985) pp.45-47.
56. R. Krishnamurthy, *Non-Roman Ancient Foreign Coins from Karur in India,* Chennai, 2000.

# சங்க இலக்கியத்தில் காசு

பண்டைய தமிழகத்தில் பொருளாதார நடவடிக்கைகள் பண்டமாற்று, காசு ஆகிய இரண்டு வகைகளிலும் நடைபெற்றன பண்டமாற்று முறை மிகத் தொன்மையானது என்றாலும் காசுகள் புழக்கத்தில் வந்த பின்னரும் நீண்ட காலமாக அம்முறை வழக்கில் இருந்துள்ளது சங்க கால அரசர்கள் வெளியிட்ட காசுகளோடு, தமிழ் நாட்டின் அருகமைந்த பகுதிகளின் காசுகளும் வட நாட்டுக் காசுகளும் தமிழ் நாட்டில் கிடைக்கின்றன உரோமானியக் காசுகளும் தமிழ் நாட்டின் பகுதிகளில் கிடைக்கின்றன இக்காசுகள் பற்றித் தமிழ் நாட்டின் மிகத் தொன்மையான சங்க இலக்கியத்தில் தெளிவான குறிப்பேதும் இலலை ஆயினும் பொதுவாக, காசு பற்றிய சில விவரங்கள் உள்ளன இவ் விவரங்கள் காசு இயல் ஆய்வுக்குப் பயன்படும் அவ்வகையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் காசு பரிமாற்றம் பற்றிய செய்திகளையும் பொருளியல் நடவடிக்கைகளுக்கு அவை பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும் அறிவதே இப்பகுதியின் நோக்கம்

## முன் ஆய்வுகள்

சங்க இலக்கியங்களில் காணப்படும் காசு சொற்களில் காணம் வகைச் சொற்களை ஆய்ந்த டி வி மஹாலிங்கம், சிறிய தங்கக் காசுகளே சங்க காலத்தில் காணம் என வழங்கப்படலாயிற்று என்றார்[1] சங்க இலக்கியத்தில் காசுகளைக் குறித்துக் காணப்படும் பல சொற்களை ஆய்ந்து விரிவான விளக்கம் அளித்துள்ளார் இரா கிருஷ்ணமூர்த்தி[2] இவரது கருத்துப்படி, 1 பொற்காசு, 2 கலன், 3 மணி என்ற பொருள்களில் காசு எனும் சொல் கையாளப்பட்டு வந்துள்ளது ("பண்டைத் தமிழ் மகளிர் காசுகளை மேகலையோடு சேர்த்து அணிந்திருக்கின்றனர், காசுகளை ஒருவகை அணிகலனாகக் கையாண்டிருக்கின்றனர்") என்பதாகக் குறிப்பிடுவர் மேலும் இக்காசுகள் 1 குமிழம் பழம், 2 வேப்பம் பழம், 3 கொன்றைப்பூ மொட்டு, 4 உகா மரக் கனி, 5 நெல்லிக்கனி ஆகிய வடிவங்களில் இருந்தன அவை உருண்டை வடிவத்தோடு, பொன்னிறத்தில் இருந்தன பளிங்குக் காசுகள் என்றொரு வகை இருந்ததாகவும்

குறிப்பிடுவர்.[3] இவரைத் தொடர்ந்து காசு பற்றி ஆய்ந்த நடன காசிநாதன்,[4] சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் காசு பொன்னாக இருக்கலாம் என்றும் அவை உருவ அமைப்பில் வேப்பம் பழம் போன்றும் உகாப் பழம் போன்றும் மஞ்சள் நிறம் உடையவையாகவும் இருந்தன என்றும் குறிப்பிடுவர். இலக்கியச் சொற்களுக்கு நேரான பொருளிலேயே இவ் விளக்கங்கள் உள்ளன என்பது தெளிவு. காசு என்ற சொல் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது என்று யாரும் தெளிவுபடுத்தவில்லை.

இக் கருத்துகளுக்கு மாறுபட்ட கோணத்தில் கே.ராஜன், சங்க இலக்கியத்தில் காணப்படும் மணி, காசு, காணம் ஆகிய மூன்று சொற்களை விரிவாக ஆய்ந்துள்ளார். இவரது கருத்துப்படி, மணி என்ற சொல் ஆபரணக் கற்களைக் குறித்தது. காசு எனும் சொல் நாணயம் என்ற பொருளில் வழங்கப்படவில்லை; துளையுடைய ஒரு ஆபரணமாக வழங்கப்பட்டுள்ளது. காணம் மட்டுமே காசாகப் (நாணயமாக) பயன்படுத்தப்பட்டுள்ளது.[5]

**காசு**

சங்க இலக்கியங்களில் காசு, பொன், காணம் என்ற மூன்று சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் காசு என்பது பெண்களின் இடையில் அணியும் ஆபரணமாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ் இடையணியில் பல காசுகள் இருந்தன என்பது பல் காசு நிரைத்த,[6] பொலம் செய் பல் காசு,[7] பொலங் காசு நிரைத்த[8] என்ற தொடர்களால் குறிப்பிடப்பெறுகின்றது. இவ் வரிகளில் பயன்படுத்தப்பட்ட பொலம் என்ற சொல்லுக்குப் பொன் எனப் பொருள் கொண்டு இக்காசுகள் யாவும் பொன்னால் ஆனவை என்பர். இக்காசுகளை ஆக்கியோர் குற்றமற்ற கம்மியன் (பொற் கொல்லர்) என்ற குறிப்பால் (ஆகு இல் கம்மியன் மாசு அறப் புனைந்த பொலம் செய் பல் காசு அணிந்த)[9] இவை பொன்னால் ஆனவை எனக் கருதலாம்.

தங்கமல்லாத பொருள்களிலும் சங்க காலக் காசுகள் இருந்துள்ளன என்பதை இரண்டு சான்றுகளால் அறியலாம். இவை இரண்டு வகை ஆபரணக் கற்களால் செய்யப்பட்டவை என்று அகநானூறு குறிப்பிடும். இவற்றில் ஒரு காசு மணிக்காசு[10] (மணிக் காசு அன்ன மால் நிற இருங்கனி) எனப்பட்டது. இக்காசு ஆபரணக் கல்லால் (ரத்தினக் கல்) ஆக்கப்பட்டது. மலையிலிருந்து மணி பெறப்படுவது (மாமலை பாய்ந்த காமரு மணியும்) என்று புறநானூறு ஒரு பாடலில் தெரிவிக்கிறது.[11] நீல வண்ணமுடைய பழத்தைக்

குறிப்பதற்காக இம் மணிக்காசு உவமை சொல்லப்பட்டுள்ளது. மற்றொரு வகைக் காசு பளிங்கின் துளைக் காசு[12] (அறு நூல் பளிங்கின் துளைக் காசு கடுப்ப) எனப்பட்டது. இக்காசு பளிங்கு போன்ற கல்லால் ஆனது மட்டுமல்ல இக்காசில் துளையும் உள்ளது.

இவை தவிர, காசின் வடிவமைப்பைப்பற்றியும் சில குறிப்புகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. பொற்காசு ஒன்றில் புது நூலை நுழைப்பது, வேப்பம் பழத்தைக் கிளி கொத்திக்கொண்டுள்ளது போலுள்ளது என்று குறுந்தொகைப் பாடல்[13] விவரிக்கும். இதிலிருந்து அப் பொற்காசு கோள வடிவோடும் துளையோடும் இருந்துள்ளது என அறியலாம். மற்றோரிடத்தில் செல்வச் சிறுவர்களின் கால் ஆபரணம் விவரிக்கப்பட்டுள்ளது. இவ் அணி தவளை வாய் போன்று பிளந்தும், ஒலி எழுப்பும் தன்மையையும் பெற்று, கொன்றை மரத்தின் குருந்தைப் போன்றுள்ளது[14] (செல்வச் சிறார் சீறடிப் பொலிந்த தவளை வா அய பொலம் செய் கிண்கிணிக் காசின் அன்ன போது ஈன் கொன்றை குருந்தொடு). இரண்டு விவரங்கள், அதாவது கோள வடிவமும் பிளவுபட்ட தன்மையும் இக் காசுகளில் இருந்ததென தெளிவாகிறது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் காசு என்ற சொல் அணிகலன் என்ற வகையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு. இது பெண்கள் அணியும் இடை அணிகலனாகவும், செல்வச் சிறுவர்கள் அணியும் கால் அணிகலனாகவும் சொல்லப்பட்டுள்ளது. இவ் அணிகலன் பொன், ஆபரணக் கல் ஆகியவற்றால் ஆனது. மேலும் இக் காசுகளில் நூல் கோர்ப்பதற்கான துளை உண்டு. மேலும் அவை பிளவுபட்டும் உள்ளன. சிறுவர்கள் அணிந்த ஆபரணத்தைக் கிண்கிணிக் காசு என்பதால், அவை ஒலியெழுப்பும் வண்ணம் மணி அல்லது சிறு கற்களை உள்ளே பெற்றிருக்க வேண்டும். இவைகளை நோக்கும்போது சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்ட காசு ஆபரணங்களைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு. மேலும் இக்காசுகள் வணிக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதாகக் குறிப்பேதுமில்லை.

## பொன், காணம்

பதிற்றுப்பத்தில் பொன், காணம் என்ற இரண்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாற்பது நூறாயிரம் பொன் (4,00,000) காப்பியாற்றுக் காப்பியனாருக்குக் கொடையாக அளித்தான் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்.[15] ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்க்கு அணிகலன் செய்து

கொள்வதற்காக ஒன்பது கா பொன்னும் நூறாயிரம் (1,00,000) காணமும் வழங்கினான்.[16] மற்றோரிடத்தில் பரணர்க்கு உம்பர்க்காட்டு வாரி (வருவாய்) கொடையாகக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனால் அளிக்கப்பட்டது.[17] வருவாயின் மொத்த மதிப்பு எவ்வளவு என்றோ காசு வகையில் அதன் மதிப்போ சொல்லப்படவில்லை.

பொன்னைக் குறிப்பிடும்போது கா, பொன் என்று பத்துப்பாட்டு குறித்தல் நோக்குதற்பாலது. கா என்ற சொல் ஒரு எடையைக் குறித்தது[18] என்று தொல்காப்பிய ஆதாரத்தால் குறிப்பர். பரணர்க்கு ஒன்பது கா பொன்னோடு நூறாயிரம் (1,00,000) காணமும் கொடுக்கப்பட்டதால் இவ்விடத்தில் ஒரு பொன்னின் மதிப்பு காணத்தைவிட அதிகமாக, பொன் மாற்று அதிகம் உள்ள உலோகத்தைக் குறித்தது எனலாம்.

**காணம்**

பல நூறு காணம் கொடையாக வழங்கப்பட்டதாகப் பதிற்றுப்பத்துப் பதிகத்திலிருந்து அறிகிறோம். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், நூறாயிரம் காணம் கொடையாகக் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்க்கு அளித்தான்.[19] கபிலர்க்கு, செல்வக்கடுங்கோ வாழியாதன், நூறாயிரம் (1,00,000) காணமும்,[21] இளஞ்சேரல் இரும்பொறை, பெருங்குன்றூர் கிழார்க்கு முப்பத்தீராயிரம் (32,000) காணமும் கொடையளித்துள்ளனர்.[22] காணம் பொற்காசு (?) எனக் கருதப்படுகிறது. இச்சொல் பதிகத்தில் வந்துள்ளது நோக்கற்பாலது. பதிற்றுப்பத்தைப் பிற்காலத்தில் தொகுப்பித்தோர் எழுதிய குறிப்புகளே பதிகம் எனப்பட்டது. எனவே இவ்வகையில் பதிகத்தில் சொல்லப்பட்ட கருத்துகள் பிற்காலக் கருத்துகளாக இருக்க வாய்ப்புண்டு. சங்கம் மருவிய கால இலக்கியமான மணிமேகலையிலும் காணம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[23]

காணம் அக்காலத்தில் காசாக விளங்கியது என்பதில் ஐயமில்லை. காணம் எவ் உலோகத்தால் ஆனது என்பது இலக்கியச் சான்றுகளில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. காணம் அதிக எண்ணிக்கையில் சொல்லப்பட்டிருப்பது ஒரு முக்கிய சான்றாகும். இதனால் இவை செப்புக் காசுகளாக இருக்க வாய்ப்புண்டு. பிற்காலத்தில் இவை பொன் காசுகளாகக் குறிப்பிடப்பெறுகின்றன. வரகுண பாண்டியனின் கல்வெட்டுகள் காணத்தைப் பொற்காசு என்று அறிவிக்கும்[24] (அமைத்த பொன் ஐந்நூற்று ஐந்து காணம்). எனவே, காணம் என்பது 9ஆம் நூற்றாண்டில் பொற்காசாக நிலவி

வந்துள்ளது. ஆயினும் சங்க காலத்தில் காணம் பொற்காசாக இருந்தது என்பதற்கு மேலும் தக்க சான்றுகள் தேவைப்படும். முன்னரே குறிப்பிட்டதைப் போன்று, பொன்னிலும் மாற்று, மதிப்புக் குறைந்ததாகக் காணம் இருந்துள்ளது. அணிகலன் செய்வதற்குப் பொன்னும் பிற செயல்களுக்குக் காணமும் ஒருவருக்கே கொடுக்கப்பட்டதிலிருந்து இதனை நாம் அறியலாம்.

வணிக நடவடிக்கைகள் காணப்படும் இடங்களில் பொதுவாகக் காசு பயன்படுத்தப்படவில்லை. மாறாகப் பொன் பயன்படுத்தப்பட்டுள்ளது. யவனரோடு பண்டப் பரிமாற்றம் பற்றிக் குறிப்பிடும்போது யவனர்கள் பொன் கொடுத்து மிளகை வாங்கினர் (பொன்னொடு வந்து கறியொடு பெயரும்) என்றுள்ள குறிப்பு நோக்குதற்பாலது.[25] யவனர் பொன்னாகக் கொடுத்தவை யவன நாட்டுக் காசாகலாம். அவ்வாறெனில் (பொன்) காசையும் பொன்னாக மதித்தனரோ என ஐயுறலாம். மற்றோரிடத்தில் இடைப்பெண் ஒருத்தி பசும் பொன் பெறாமல் ஆவினம் வாங்குவாள் (நெய் விலை கட்டிப் பசும் பொன் கொள்ளாள்) என்றுள்ளது.[26] இச் சான்றுகளின் அடிப்படையில் வணிக நடவடிக்கைகளில் பொன் பயன்படுத்தப் பட்டது என அறிந்தாலும் அவற்றின் முழுத் தன்மை தெளிவாகத் தெரிந்திலது.

இதுவரை நமக்குக் கிடைத்த சான்றுகளையொட்டி நாணயப் பரிவர்த்தனைக்குக் காசு என்ற சொல் பயன் படுத்தப்பட்டது எனக் குறிப்பிட இயலாது. ஆயினும் சில நூற்றாண்டுகள் கழித்துக் காசு என்ற சொல்லை நாணயம் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளனர். இம் மாற்றம் திடீரென்று ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. மேலும் சங்க காலத்தில் தமிழ் அரசர்களின் காசுகள் மட்டுமல்லாது பிற பகுதிக் காசுகளும், வணிகர்களிடையே, புழக்கத்தில் இருந்தன என்பது தெளிவு. இவற்றை எவ்வாறு அழைத்தனர் என்பதை அறிய இயலவில்லை. இனி நடைபெறும் ஆய்வுகளால் தெளிவு பிறக்கலாம்.

## குறிப்புகள்

1. T.V. Mahalingam, Presidential Address, 1973, *Sixty Years of the Numismatic Society of India 1910-1971*, History and Presidential Addresess, 1973, p.504.
2. இரா. கிருஷ்ணமூர்த்தி, *சங்க காலச் சோழர் நாணயங்கள்,* பக்.11-15.
3. மேலது, ப.13.
4. நடன காசிநாதன், *தமிழர் காசு இயல்,* ப.18.

5 K Rajan, "Manı, Kacu, Kanam-An Explanatıon", *SSIC*, 10(2000) pp 114-116

6 *திருமுருகாற்றுப்படை*, வரி 16 (பல் காசு நிரைத்த), *அகநானூறு*, 75 (பல்காசு நிரைத்த)

7 *புறநானூறு*, 353 (பொலம் செய் பல் காசு)

8 *அகநானூறு*, 269 (பொலங் காசு நிரைத்த)

9 *புறநானூறு*, 353

10 *அகநானூறு*, 293

11 *புறநானூறு*, 218

12 *அகநானூறு*, 315

13 *குறுந்தொகை*, 67

14 மேலது, 148

15 *பதிற்றுப்பத்து*, பதிகம், 4

16 மேலது, பதிகம், 6

17 மேலது, பதிகம், 5

18 மேலது, ப158

19 மேலது, பதிகம், 6

20 மேலது, பதிகம், 7

21 மேலது, பதிகம், 8

22 மேலது, பதிகம், 9

23 *மணிமேகலை*, 16-10

24 *Epıgraphıa Indıca*, vol 32, No 41, pp 337-338

25 *அகநானூறு*, 149

26 *பெரும்பாணாற்றுப்படை*, 164

# முன்னோடிக் காசுகள்

மோரியப் பேரரசு நிறுவப்படுவதற்கு முன்பிருந்தே முத்திரைக் காசுகள் வெளியிடப்பட்டு வழக்கில் இருந்துள்ளன. இவை தமிழ் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து காசு புழக்கம் ஏற்பட்டது என்ற கருத்தே பொதுவாக நிலவியுள்ளது. இதுவரை நடத்தப்பெற்ற கள ஆய்வுகளிலும் அகழாய்வுகளிலும் கண்டெடுக்கப் பட்ட காசுகளில் இவையே மிகப் பழமையானவையாகத் தோன்றுகின்றன. இக் காசுகளின் வடிவமைப்பைப் பின்பற்றிப் பண்டைய தமிழ் நாட்டு அரசுகளும் இவ் வகைக் காசுகளை வெளியிட்டன.

முத்திரைக் காசுகள் புழக்கத்திற்கு வருமுன்பே ஒரு வகையான காசுகள் தமிழ் நாட்டுப் பகுதியில் வழக்கில் இருந்துள்ளதாகத் தெரிகிறது. தட்டை மற்றும் கோள வடிவுடைய இக் காசுகளை முன்னோடிக் காசுகள் எனலாம். இவற்றைக் குளிகைக் காசுகள் அல்லது குளிகன் என்றும் அழைக்கலாம். முறையான காசுகள் புழக்கத்திற்கு வருமுன்பு தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் குளிகன்கள் வழக்கில் இருந்துள்ளன என்று கருதலாம். தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் இக் குளிகைகள் வெளியிடப்பட்டன. இவை கோயமுத்தூர் (பேரூர், வெள்ளலூர்), கரூர் (அமராவதி ஆற்றுப் படுகை), மதுரை (வைகை ஆற்றுப் படுகை), அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குளிகைக் காசுகளை முதலில் அடையாளம் கண்டவர் வால்டர் எலியட். இவர் 1886 இல் வெளியிட்ட தம்நூலில் செப்புக் குளிகன் ஒன்றைக் குறிப்பிட்டு இவை தமிழ் நாட்டுப் பகுதிகளில் சாதாரணமாகக் கிடைப்பவை என்று குறிப்பிட்டுள்ளார். பின்னர் பிதுல்ப் இவ் வகைக் குளிகைக் காசுகள் தமிழகத்தின் பகுதிகளில் கிடைப்பதை உறுதிச் செய்துள்ளார். மிசினரும் குளிகைக் காசுகள் பலவற்றை விவரித்துள்ளார். தங்கம், வெள்ளி, செம்பு பிற உலோகங்களிலான குளிகைகள் பலவற்றை வித்வான் ஐ. இராமசாமி நொய்யலாற்றில் 1991-92ஆம் ஆண்டுகளில் கண்டெடுத்தார். இரா.கிருஷ்ணமூர்த்தியும் குளிகைகள் பலவற்றைக் கரூரிலும், அம்பாசமுத்திரத்திலும் கண்டெடுத்துள்ளார்.

தங்கக் குளிகைகள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. இவற்றில் சிலவற்றைப் பிதுல்ப் குறிப்பிடுவார். இவற்றில் ஒரு காசில், முன்பக்கத்தில் தெளிவில்லாத உருவம் உள்ளது. பின்பக்கத்தில் உருவங்கள் ஏதுமில்லை. இவை பல எடை அளவுகளில் உள்ளன.[1] தங்கக் குளிகைகள் நான்கு நொய்யல் ஆற்றில் கிடைத்ததென வித்வான் ஐ.இராமசாமி குறிப்பிட்டுள்ளார். இவை புளியம் பழ வடிவில் உருண்டையாகவும், சற்றேறக்குறைய 06-12 மி.மீ. அளவும் 4 கிராம் எடையும் உள்ளன. இதன் ஒரு புறத்தில் மீன், புலி ஆகிய உருவங்களின் மீது வில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறத்தில் உருவம் ஒன்றுமில்லாமல் கரடு முரடாக உள்ளது.[2] இக்காசு மிகத் தொன்மையானது; ஏறக்குறைய கி.மு.500 ஆம் ஆண்டளவில் வெளியிடப்பெற்றது. வில் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதால் இக்காசு சேரர் வெளியிட்டது என்பர்.

மற்ற மூன்று காசுகள் ஒவ்வொன்றும் 1 செ.மீ. நீளமும் அரை செ.மீ. அகலத்தோடு அரை வட்ட வடிவில் உள்ளன. இவை 1.50 கிராம் எடை உடையன. இவற்றின் முன்புறம் அம்பு பூட்டிய வில்லும் வாலை உயர்த்திய நிலையில் உள்ள மீன் உருவங்களும் உள்ளன. பின்புறத்தில் உருவம் ஏதுமில்லை. இவை கி.மு. 300 ஆண்டு வாக்கில் வெளியிடப்பட்டன என்பர்.[3] இக்காசுகளின் தெளிவான புகைப்படங்கள் வெளியிடப்படவில்லை. இப் படங்களில் அவர் குறிப்பிடும் உருவங்களைத் தெளிவாக அடையாளம் காண இயலவில்லை. மேலும் இக்காசுகளை மிகத் தொன்மையாகக் கருதுவதற்குத் தக்க சான்றுகள் ஏதும் இதுவரை கிட்டவில்லை. எனவே இவரது கருத்துகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டுவன.

வெள்ளிக் குளிகைகள் பல ஊர்களில் கிடைத்துள்ளன. இவை பேரூர், கரூர் ஆகிய ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் கோள வடிவில் உள்ளன. சில காசுகளின் ஒரு பக்கத்தைச் சுத்தியால் தட்டிப் பட்டையாக்கியுள்ளனர். பட்டையான பகுதியில் சில உருவங்கள் உள்ளன. சிலவற்றில் சங்கு வடிவக் கீற்று உருவங்கள் உள்ளன. சிலவற்றில் இவ் உருவங்கள் தெளிவாக இல்லை. இவ் வெள்ளிக் காசுகளை ஆய்வு செய்த மிசினர் இவற்றில் வெள்ளியின் மதிப்பு 92-95 விழுக்காடுகள் உள்ளன என்பர்.

நொய்யல் ஆற்றுப் பகுதியில், குறிப்பாகப் பேரூர், வெள்ளலூர்ப் பகுதிகளில் கண்டெடுத்ததாகச் சில வெள்ளிக் குளிகைகளைக் குறிப்பர். இவை உருண்டையாகவும் ஒரு புறத்தில் வரிக்கோடுகளுடனும் உள்ளன என்பர். தட்டையான சில குளிகைகளில் முன்புறத்தில் நின்றவாறுள்ள திமில் உள்ள காளை,

மீன் உருவங்கள்பொறிக்கப்பட்டுள்ளன பின்புறத்தில் சிப்பி ஓட்டு வரிக் கோடுகள் பொறிக்கப்பட்டுள்ளன[4]

கரூர்-அமராவதி ஆற்றுப்படுகையில் சுமார் 90 வெள்ளி குளிகைகளைக் கண்டெடுத்துள்ளார் இரா கிருஷ்ணமூர்த்தி[5] இக்காசுகள் தட்டையாக உள்ளன இவை செவ்வகம், சதுரம், வட்டம், நீள்வட்டம் ஆகிய வடிவங்களில் உள்ளன இவை 1.5 - 2.9 கி வரை எடையுள்ளன இக்காசுகள் வட இந்திய கார்ஷாபண எடையை ஒத்திருக்கவில்லை என்பார் கிருஷ்ணமூர்த்தி

பிற உலோகங்களிலான குளிகைக் காசுகள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன இக் காசுகளில் செம்பு, பித்தளை, எலக்ட்ரம் (Electrum) ஆகிய உலோகக் காசுகள் அடங்கும்

செம்புக் குளிகைகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் புழக்கத்தில் இருந்துள்ளன இவை நொய்யல் ஆறு, கரூர், மதுரை, அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன இவைகள் நீள் வட்டம், அவரை விதை வடிவுகளில் உள்ளன சில கோள வடிவிலும், சில தட்டை வில்லை போன்றும் உள்ளன இரண்டு செப்புக் குளிகைகளைப் பிதுல்ப் விவரிக்கிறார் இவற்றில் ஒரு வகையில் முன்புறத்தில் 3 அல்லது 4 தெளிவில்லாத உருவங்களும் பின்புறத்தில் 1 அல்லது 2 தெளிவில்லாத உருவங்களும் உள்ளன இரண்டாம் வகையில் முன்புறத்தில் தெளிவில்லாத உருவம் ஒன்றுள்ளது பின்புறத்தில் ஒன்றுமில்லை அவரை விதை வடிவுடைய காசுகள் 0 5-10 மி மீ வரை அகலம் உடையன இவற்றின் எடை 0 47-2 27 கிராம் வரை மாறுபடுகிறது கோள வடிவிலான குளிகைகள் 7-8 மி மீ வரை வேறுபடுகிறது இவற்றின் எடை 0 75-2 60 கிராம் வரை மாறுபடுகிறது தட்டையாக உள்ள செம்பு குளிகைகள் 8-11 மி மீ வரை உள்ளன இவற்றின் எடை 1 92-4 7 கிராம் வரை உள்ளன இவற்றில் தெளிவில்லாத பல உருவங்கள் உள்ளன[6]

பித்தளைக் காசுகளும் பேரூர், நொய்யல் ஆற்றில் கிடைத்துள்ளன இக்காசுகள் 7 மி மீ விட்டம் உடையன இவற்றின் எடை 0 78-0 81 கிராம் வரை உள்ளன இவற்றில் சிலவற்றில் சங்கு வரிக் கோடுகள் உள்ளன சிலவற்றில் எவ்வித உருவமும் இல்லை

செப்புக் குளிகைகள் பிற்காலத்தைச் சார்ந்தன என்று கருதப்படுகிறது இவை கி.மு.2-1-வரை புழக்கத்தில் இருந்தன சேரர்கள் முறையாகக் காசு அச்சிட ஆரம்பித்ததையொட்டி இவ்வகைக் காசுகள் வெளியிடும் வழக்கம் நின்றுபோயிற்று

இக்காசுகளை விரிவாக ஆராய்ந்த மிசினர், இவற்றில் எந்த அரசின் பெயரோ அல்லது சரியான எடையளவோ இல்லை என்பதை அறிந்தார். இவற்றின் மதிப்பை உறுதிச் செய்து எந்த நிறுவனமும் தம் இலச்சினையைப் பொறிக்கவில்லை. இதனால் இவற்றை முறையான காசுகள் என்று கருத இயலாது என்றார். எனவே இவற்றை முன்னோடிக் காசுகள் (Proto coins) என்று கருத வேண்டும் என்றார்.[7] இவ்வகைக் காசுகள் ஏறத்தாழ கி.மு. 3-2 ஆம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்திருக்க வேண்டும். இக்குளிகைகள் சில சங்க காலக் காசுகளோடு கிடைத்துள்ளன. எனவே இவை சங்க காலத்திலேயே வெளியிடப்பட்டன என்றார்.

கொங்குப் பகுதியில் வெள்ளிக் குளிகைகள் கிடைப்பதை யொட்டி இவை யாவும் அசோகர் காலத்திற்குப் பின்பு வெளியிடப் பட்டன (3-2 கி.மு.) என்பார். இக்காசுகளை அப்பகுதியை ஆண்ட உள்ளூர் அரசுகளே வெளியிட்டன என்பார். குறிப்பாகப் பேரூர்-வெள்ளலூர்ப் பகுதியில் கிடைத்த வெள்ளிக் குளிகைகளை அக்கால வேள் அரசு (கொங்கு நாட்டு வேளிர்) வெளியிட்டது என்கிறார். இப்பகுதியைக் கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் வேள் அரசர்கள் ஆட்சி செய்ததாக இவர் குறிப்பிடுவது மீண்டும் ஆய்வதற்குரியது. இக்காசுகளில் ஏதோன்றிலும் வேள் என்ற அரச குலப்பெயர் பொறிக்கப்படவில்லை என்பதும் கருதத்தக்கது.

இக் குளிகைகள் மிகத் தொன்மையானவை என்று கருதத்தக்க உறுதியான சான்றுகள் ஏதும் தற்பொழுது கிடைக்கவில்லை. இவை முன்னோடிக் காசுகள் என்ற வகையில் மீண்டும் நுணுகி ஆராயப்பட வேண்டுவன.

## குறிப்புகள்

1. C.H. Biddulph, *Coins of the Pandyas,* (1996). pp.19,41. pl.
2. Vidvan I. Ramasamy "Ancient Chera Coin Found (Globule)", *JNSI,* 53 (1991), pp.64-65.
3. Vidvan I. Ramasamy, "Sangam Age Bow Fish Coin (Globule) and Some Roman Coins Found at Kongu", *JNSI,* 54 (1992) pp.48-50.
4. Michael Mitchiner, *The Coinage and History of Southern India*, part 2, p.67.
5. R. Krishnamurthy, "Coin Circulation in Ancient Tamil Region,c.400 BC - c.600 AD.", *JNSI,* 58 (1996), p.4.
6. Michael Mitchiner, *முன் குறித்த நூல்,* pp.65-68.
7. *மேலது,* p.67.

# பாண்டியர் காசுகள்

சங்க காலப் பாண்டிய அரசர்கள் பல வகையான காசுகளை வெளியிட்டுள்ளனர். கடந்த 15 ஆண்டுகளில் நடைபெற்ற காசு இயல் ஆய்வின் பயனாகப் பாண்டியர் காசுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனால் பாண்டியர் காசுகள் பற்றிய அரிய பல தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. வடநாட்டு அரசுகள் வெளியிட்ட முத்திரைக் காசுகளைப் பின்பற்றி, பாண்டியர்களும் அவ்வகைக் காசுகளை வெளியிட்டுள்ளனர். இவையே பாண்டிய நாட்டுப் பகுதியில் செலாவணியில் இருந்த தொன்மையான காசுகள். இவை தவிர முழு அச்சில் பொறிக்கப்பெற்ற காசுகளையும் வெளியிட்டுள்ளனர்.

பாண்டியர் காசுகள் மதுரை வைகை ஆற்றுப் படுகையில் அதிக எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இரட்டை மீன் வடிவத்தை ஒருபக்கமும், யானை மற்றும் மங்கலச் சின்னங்கள் எட்டும் (அஷ்டமங்கலம்) உடைய பாண்டியர் காசுகள் வைகை ஆற்றுப் படுகையில் அதிக எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டன என்று கே.வி. இராமன் 1972இல் தெரிவித்தார். இங்குக் கிடைத்த சில காசுகளின் படங்களையும் அவர் தம் நூலில் வெளியிட்டுள்ளார்.[1] திருநெல்வேலி மாவட்டப் பகுதிகள்,[2] ராமநாதபுரம்,[3] தாமிரபரணி ஆற்றுப் படுகை,[4] கரூர்,[5] அழகன் குளம்,[6] கும்பகோணம்[7] ஆகிய ஊர்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வட இலங்கையில்[8] சில ஊர்களிலும் பாண்டியர் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இக்காசுகள் பெரும்பாலும் சதுர வடிவுடையவை. சில வட்டமாக உள்ளன. மிகக் குறைந்த எடையுள்ள காசுகள் 0.50 கிராமும், அதிக அளவு எடையுள்ளவை 10.60 கிராமும் உள்ளன. பொதுவாகப் பாண்டியர் காசுகளின் பின்புறத்தில் கோட்டுருவத்தில் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். பாண்டியர்களின் குலச் சின்னமாக மீன் கருதப்படுவதால் இச் சின்னம் உள்ள காசுகள் யாவற்றையும் பாண்டியர் வெளியிட்டனர் எனக் கருதுகிறோம். இவற்றில் உள்ள உருவங்களைக்கொண்டு காசுகள் வகைப்படுத்தப் படுகின்றன. இருந்தபோதிலும் இக் காசுகளை வெளியிட்ட அரசர்களை அடையாளம் காணத் தற்பொழுது இயலாது. இதுவரை

கிடைத்த தமிழ்நாட்டுக் காசுகளை ஆராய்ந்தால் பாண்டியர் காசுகளில் அதிக வகைகளைக் காண்கிறோம்.

### முத்திரைக் காசுகள் (கி.மு.200–001)

இந்தியாவில் காணப்படும் தொன்மையான காசுகள் முத்திரைக் காசுகள் வகையைச் சார்ந்தவை. மௌரியப் பேரரசு காலத்திற்குச் சற்று முன்பிருந்து இக்காசுகள் புழக்கத்தில் வந்தன. இவை போன்றே தமிழ் நாட்டிலும், குறிப்பாகப் பாண்டிய நாட்டிலும் வெளியிடப்பட்டன என்று பல ஆண்டுகளுக்கு முன்பே கருதினார் லோவென்தால்.[9] போடிநாயக்கனூர் புதையலில் கிடைத்த முத்திரைக் காசுகளை ஆய்ந்த டி.டி.கோசாம்பி பெரும்பாலான காசுகளின் (1124 காசுகள்) முன்புறத்தில் ஐந்து குறிகளும் பின்புறத்தில் மீன் சின்னமும் உள்ளதைக் கண்டார். மௌரியர் காசுகளில் உள்ள உருவங்களுக்கும் இக் காசுகளில் உள்ள உருவங்களுக்கும் சில வேறுபாடுகள் உள்ளதை அறிந்து இக் காசுகளை மௌரியப் பேரரசு வெளியிடவில்லை என்றும் அப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் எழுந்த உள்ளூர் அரசுகள் வெளியிட்டன என்றும் அனுமானித்தார்.[10] ஆனால் டி.ஜி. ஆராவமுதன், 1944இல் இக்காசுகள் பாண்டியர் வெளியீடாக இருக்கலாம் என்று அனுமானித்தார்.[11] பின்னர் ஆர். வனஜா,[12] டி.வி. மஹாலிங்கம்[13] பின்புறத்தில் உள்ள மீன் சின்னத்தைக் கொண்டு இக்காசுகளைப் பாண்டியர்கள் வெளியிட்டிருக்கலாம் என்று கருதினர். இரா. கிருஷ்ணமூர்த்தி தம் இருப்பில் உள்ள முத்திரைக் காசுகளை ஆய்ந்து அவை பாண்டியர் வெளியீடுகள் என்பதை அறிந்தார்.[14] மைகல் மிசினர்,[15] பாண்டியப் பகுதியில் செலாவணி ஆவதற்காகப் பாண்டியரால் இடப்பட்டதே பின்புறத்தில் உள்ள மீன் உருவம் என்றார்.

பாண்டியர் வெளியீடுகள் எனக் கருதத்தக்க முத்திரைக் காசுகள் போடிநாயக்கனூர் (மதுரை மாவட்டம்), மதுரை (வைகை ஆற்றுப் படுகை),[16] திருநெல்வேலி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இக்காசுகள் வெள்ளியில் வெளியிடப்பட்டன. காலப்போக்கில் செம்பிலும் வெளியிடப்பட்டன. இவை சதுரம் (11-11 மி.மீ) அல்லது செவ்வக (13-15 மி.மீ.) வடிவில், 1.98-2.79 கிராம் வரை எடையுள்ளன. போடிநாயக்கனூரில் கிடைத்த காசுகள் 1.5 கிராம் எடையுடையன. சில காசுகள் மிகக் குறைந்த (0.99) எடையுள்ளன. இதனால் இவை அரை கார்ஷாபண வகையைச் சார்ந்தவை எனக் கருதப்படுகின்றன. பல காசுகளில் உள்ள குறிகள் முழுமையாக இல்லை. ஆயினும் பலவற்றின் முழு உருவங்களை அறிவதில் எவ்விதச் சிரமமும் இல்லை. இக்காசுகளின் பின்புறத்தில் மீன் குறி கோட்டுருவில் உள்ளது.

இக்காசுகள் கி.மு.2ஆம் நூற்றாண்டில் வெளியிடப் பட்டிருக்கலாம். கிருஷ்ணமூர்த்தியின் இருப்பில் உள்ள முத்திரைக் காசுகளை ஆய்ந்த பி.எல்.குப்தா, அவை மௌரியப் பேரரசின் கடைசிக் கால கட்டத்தில், கி.மு. 187இல் வெளியிடப்பட்டன என்று கருதுகிறார்.[17]

பாண்டியர்களால் வெளியிடப்பட்ட வெள்ளிக்காசுகளில் சில மௌரியரின் கார்ஷாபண எடையமைப்பில் (2.4-2.75 கி) உள்ளன. சில காசுகள் கார்ஷாபணத்தைவிட குறைந்த எடையமைப்பில் உள்ளன (1.40 கி). இவற்றை அரை கார்ஷாபணம் என்று கருதுவர். போடிநாயக்கனூரில் கிடைத்த 1124 காசுகள் இவ் வகையைச் சார்ந்தவை. இவற்றின் முன்புறத்தில் 5 உருவங்கள் உள்ளன. இவற்றில் சூரியன் எல்லாக் காசுகளிலும் உள்ளது. பிற உருவங்கள் மாறி மாறி உள்ளன. எல்லாக் காசுகளின் பின்புறத்திலும் மீன் உருவம் கோட்டுருவத்தில் உள்ளது. இக் காசுகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

> (கீழே உள்ள வகைப்பாட்டில் தரப்பட்டுள்ள விவரங்களின் வரிசை: வரிசை எண், காசின் முன் பக்கத்தில் உள்ள உருவங்கள். சாய்கோட்டை (/) அடுத்துப் பின் பக்கத்தில் உள்ள உருவங்கள். இவற்றில் சாதாரணமாகக் காணப்படும் கோட்டுருவ மீன்உருவம் தரப்படவில்லை, வேறுபட்ட உருவங்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் நூல் பெயர் குறிப்பெழுத்திலும், அந்நூலில் தரப்பட்ட எண், அடுத்து எடை, கிராமிலும் தரப்பட்டுள்ளன. நீள அளவுகள் சேர்க்கப்படவில்லை. குறிப்பெழுத்துக்களும் அவற்றுக்கு நேரான நூல்களும் வருமாறு: கி : R. Krishnamurthy, Sangam Age Tamil Coins; மி : Michael Mitchiner, The Coinage and History of Southern India, Part Two, Tamilnadu-Kerala; த.தொசா2 (2002) : ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி-2; த.கா.(2002) : ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள்.

1. சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், (இவற்றில் மூன்று அம்பு முனைகளும் மூன்று டாரின்களும் உள்ளன), முயலைக் கவ்விய நாய், நான்காகப் பகுக்கப்பட்ட தொட்டி, அதனுள் மீன், டாரின்கள் (கோட்டுருவத்தில் மாட்டுத் தலை), வாத்து. /- (கி 2, 2.46).

2. சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், தொட்டிக்குள் இரண்டு மீன்கள், டாரின், வட்டத்திற்குள் மீன்கள். /- (கி 3, 2.43).

3 சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், முயலைக் கவ்விய நாய், மரக் கிளை, ஊர்வன (?) வாத்து /- (கி 5, 279)

4 சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், டாரின் குறிகள், தொட்டிக்குள் நான்கு மீன்கள், ஒரு கோலில் கோர்த்த மூன்று வட்டங்கள் (caduceus) /- (கி 6, 220)

5 சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள் ஸ்தூபம் (?), மரம், கோடரி பொருத்திய திரிசூலம் /- (கி 1, 140)

6 சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், முயலைக் கவ்விய நாய், தொட்டிக்குள் நான்கு மீன்கள், டாரின் /- (கி 4, 198)

முத்திரைக் காசுகளில் ஒரு செப்புக் காசு கண்டெடுக்கப் பட்டுள்ளது இக் காசு குறைந்த எடையுடையது வெள்ளிக் காசுகளில் (வகை 5) காணப்படும் உருவங்களே இக் காசிலும் உள்ளன

7 சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள் (இவற்றில் மூன்று அம்பு முனைகளும் மூன்று டாரின்களும்), ஸ்தூபம், மரம், கோடரி பொருத்திய திரிசூலம் /- (கி 7, 120)

## பெயர் உள்ள காசுகள் (கி.மு. 200–)

பாண்டிய அரசர்கள் பெயர் பொறித்த காசுகளையும் வெளியிட்டுள்ளனர் பெருவழுதி என்ற பாண்டிய அரசர் பெயர் பொறித்த காசுகள் மட்டுமே கிடைத்துள்ளன[18] இவை யாவும் சதுர வடிவுள்ள செப்புக் காசுகள் ஒரு காசு மட்டும் ஒழுங்கற்ற 6 பக்கங்களை உடையது இக் காசுகளின் எடை 290-550 கி வரை மாறுபடுகின்றன இவற்றில் காணப்படும் உருவங்கள் யாவும் ஒரே அச்சைக் கொண்டு உருவாக்கப்பட்டவை இக்காசுகளில் பொதுவாக இடப்புறம் நின்றவாறுள்ள குதிரையும் அதன் முன்புறத்தில் ஒன்று அல்லது இரண்டு ஆமையுள்ள தொட்டியும் உள்ளன சில காசுகளில் திரிசூலம் உள்ளது காசின் ஒரு பகுதியில் தமிழ் பிராமி எழுத்தில் பெருவழுதி என்ற பெயர் உள்ளது சில காசுகளில் இப்பெயர் சற்று மாறியும் காணப்படுகிறது இக்காசுகளில் ஒன்றில் (வகை 9) மட்டும் பெருவழுதி பெருவழுதி என்று இரண்டு முறை பெயர் உள்ளது இக். காசுகளின் பின்புறத்தில் கோட்டுருவத்தில் மீன் உள்ளது ஒரு காசில் (வகை 11) இரட்டை மீன் சின்னம் பின்புறத்தில் உள்ளது

8 இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை, அதன் முன்பு இரண்டு ஆமைகள் உள்ள தொட்டி, குதிரையின் மேற்புறத்தில் டாரின்கள், இவைகளின் மேல் தமிழ் பிராமி எழுத்தில், பெருவழுதி /- (த கா (2002) : 4, 55)

9. இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை, அதன் முன்பு இரண்டு மீன்கள் உள்ள தொட்டி, இவைகளின் மேல் தமிழ் பிராமி எழுத்தில், பெருவழுதி பெருவழுதி. /- (கி 8, 4.10).

10. இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை, அதன் முன்பு இரண்டு மீன்கள் (?) உள்ள தொட்டி, இவைகளின் மேல் தமிழ் பிராமி எழுத்தில், பெருவழுதி. /- (கி 10, 11, 3.25-3.90).

11. இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை, அதன் முன்பு இரண்டு மீன்கள் (?) உள்ள தொட்டி, இவைகளின் மேல் தமிழ் பிராமி எழுத்தில், பெருவழுதி. /- (பின்புறம்) இரண்டு மீன்கள். (கி 9, 2.90)

பெருவழுதி என்ற பெயரில் சங்ககாலப் பாண்டிய அரசர்கள் இருந்துள்ளனர். எனவே இக்காசுகளை அவர்களே வெளியிட்டனர் என்று கருதலாம். ஆயினும் யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. இக்காசுகள் கி.மு.200 இல் வெளியிடப்பட்டிருக்கலாம்.

இக்காசுகளில், முக்கியமாக, இரு தடவை பெயர் பொறிக்கப் பட்ட காசுகளை ஆய்ந்த ஐராவதம் மஹாதேவன், பெருவழுதி என்று தமிழிலும், பெருவழுதிச என்று பிராகிருதத்திலும் உள்ளன என்பர்.[19] கே.ஜி. கிருஷ்ணன் இரு மொழிப் பொறிப்பு இல்லையென்றும் தமிழிலேயே இரண்டு தடவை பெயர் உள்ளது என்றும் இரு தடவை பெயர் பொறித்ததன் நோக்கம் தெரிந்திலது என்பர்.[20] இக்காசில் இரு தடவை ஒரே பெயர் பொறிக்கப்பட்டிருப்பது குறித்துக் குழப்பம் ஏதுமில்லை தந்தை பெயரோடு மகன் தன் பெயரைச் சேர்த்துச் சொல்லும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. அவ்வகையில் முதல் பெருவழுதியைத் தந்தை என்றும் இரண்டாம் பெருவழுதியை மகன் என்றும் கொள்ளலாம். அவ்வகையில் இக்காசை வெளியிட்டவன் பெருவழுதியின் மகனான பெருவழுதி என்பவனாகும்.

## பெயர் பொறிப்பில்லாக் காசுகள்

பாண்டியர் காசுகளில் இவ்வகைக் காசுகளே அதிகம் கிடைத்துள்ளன. இக் காசுகளை எல்லாக் காலத்திலும் வெளியிட்டுள்ளனர். இவற்றில் பல உருவங்கள் உள்ளன. ஆயினும் பெயர் ஏதும் இல்லை. இதனால் இவற்றை வெளியிட்ட அரசர்களை எளிதாக அடையாளம் காண இயலவில்லை. இக் காககளை முற்காலக் காசுகள், இடைக்காலக் காசுகள், பிற்காலக் காசுகள் என்று மூன்று கால கட்டமாகப் பிரிக்கலாம். இக்காசுகள் யாவும் செப்புக் காசுகள். தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்களிலான காசுகள் இதுவரை கிடைக்கவில்லை. சில காசுகளைத் தவிர அனைத்தும் சதுரமானவை.

## முற்காலக் காசுகள் (கி.மு.200–கி.மு.001)

### பல உருவக் காசுகள்

இக்காலத்தில் வெளியிடப்பட்ட காசுகளில் முத்திரைக் காசுகளைப் போன்றே பல உருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இதனால் இக்காசுகளை முற்காலக் காசுகள் வகையில் சேர்க்கலாம். யானை, காளை, வேலியிட்ட மரம், மீன், ஆமை உள்ள தொட்டி, குன்றம், டாரின்கள் ஆகிய உருவங்கள் உள்ளன. இவற்றில் யானை, காளை ஆகியவை பெரும்பாலும் கோட்டுருவில் உள்ளன. வலதுபுறம் நின்றவாறு யானை அமைக்கப்பட்டுள்ளது. குன்றம், சிலவற்றில் ஆறு முகடுள்ளவாறும் சிலவற்றில் மூன்று முகடுள்ளவாறும் உள்ளது. இதோடு சதுரக் கட்டத்தில் வட்டப் புள்ளி உருவம் காணப்படுகிறது. இவ் உருவத்தை லிங்கம் என கிருஷ்ணமூர்த்தி கருதுவர். வேலியிட்ட மரத்தோடு உடுக்கை (?), மீன்/ஆமைத் தொட்டி உள்ளன. தொட்டி சிலவற்றில் சதுரமாகவும் சிலவற்றில் செவ்வகமாகவும் உள்ளது. இவற்றில் உள்ள உருவத்தை மீன் என்று மிசினரும், ஆமை என்று கிருஷ்ணமூர்த்தியும் அடையாளம் காண்பர். சில காசுகளில் காளையும் கோட்டுருவில் உள்ளது. வலதுபுறம் நோக்கி நின்றவாறு காளை உருவம் உள்ளது. இதோடு மும் முகடுள்ள குன்றம், கோவில் போன்ற உருவங்கள் உள்ளன.

இக்காலக் காசுகள் பலவற்றில் முழு உருவமாக யானை அமைக்கப்பட்டுள்ளது (வகைகள் 32-39). இக்காசுகள் சற்றுப் பிற்காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம். இக்காசுகளில் முக்கோணக் கொடிமரம், மும்முகடுள்ள குன்றம், கோவில், பிறை சுமந்த மும்முகடுள்ள குன்றம், வேள்வி யூபம், வேலியிட்ட மரம், குதிரை ஆகிய உருவங்களும் உள்ளன. இக்காலக் காசுகளில் வட்டக் காசுகள் (வகைகள் 37-39) சிலவும் அடங்கும். இவற்றில் வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், மீன்கள் உள்ள தொட்டி, டாரின்கள், சதுரக் கட்டத்தில் வட்டப் புள்ளி ஆகிய உருவங்கள் உள்ளன. இக்காசுகளின் பின்புறத்தில் கோட்டுருவத்தில் மீன் உருவம் உள்ளது. இவற்றில் உள்ள உருவங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

### கோட்டுருவில் உள்ளவை

12. யானையின் கீழே இரண்டு ஆமையுள்ள தொட்டி, வலது விளிம்பில் ஆறுமுகடுள்ள குன்றம், மேல்புறத்தில் கோட்டுருவத்தில் மீன். /- (கி 23, 10.60).

13. ஆமையுள்ள வட்டத்தொட்டியைச் சுற்றி நான்குபுறத்திலும் யானை, காளை, சங்கு, ஆறு முகடுள்ள குன்றம், யானையும் காளையும் கோட்டுருவத்தில் உள்ளன. /- (கி 28, 10.20).

14 மேற்புறத்தில் நான்கு ஆமையுள்ள தொட்டி, மும் முகடுள்ள குன்றம், இவற்றின் கீழே யானை, வேலியிட்ட மரம் /- (கி 19,20; 8 20-9 10)

15 கொடிமரம், யானை, நான்கு மீன்கள் உள்ள தொட்டி, மேல் விளிம்பில் உள்ள உருவங்கள் தெளிவில்லை /(பின்புறம்) இரட்டை மீன் (மி 136, 8 00)

16 மேற்புறத்தில் வேலியிட்ட மரத்தின் அடிப்பகுதி (?), அதன் கீழே புள்ளிக் கூட்டம், அதன் முன்பு யானை, இவற்றின் கீழே நான்கு ஆமைகள் உள்ள தொட்டி /- (கி 22, 7 40)

17 மீன் தொட்டி, கோட்டுருவில் மீன், யானை, மும் முகடுள்ள குன்றம் /- (மி 137, 6 70)

18 வலதுபுறம் நின்றவாறு காளை, மேற்புறத்தில் மும் முகடுள்ள குன்றம், காளை, இவற்றின் கீழே தூண்களால் அமைந்த கோவில் (?), தொட்டியில் பிளந்த வாயுடன் முதலை (?), வளைந்தோடும் நதி /- (கி 30, 6 0)

19 யானை, நான்கு ஆமையுள்ள தொட்டி, வேலியிட்ட மரம் (?)/- (கி 18, 5 50)

20 யானை, டாரின்கள், இவற்றின் கீழே இரண்டு ஆமைகள் உள்ள தொட்டி, வேலியிட்ட மரம் /- (கி 21, 4 30)

21 வேலியிட்ட மரம், உடுக்கை, பூந்தொட்டி /- (மி 138, 3 22)

22 யானையின் கீழே மீன்கள் உள்ள தொட்டி /- (மி 139, 3 2)

23 ஐந்து முகடுள்ள குன்றம், மேலே மரம், சில டாரின் குறிகள் /- (கி 73, 74 , 1 40-3 10)

24 குன்றம், சதுரக் கட்டத்தில் வட்டப் புள்ளி, மீன் தொட்டி, மரம் /- (மி 140, 2 67)

25 கோட்டுருவில் மீன், மரம், நான்கு மீன்கள் உள்ள தொட்டி, சதுரக் கட்டத்தில் வட்டப் புள்ளி /- (மி 141, 2 33)

26 கீழ்ப் பகுதியில் மும் முகடுள்ள குன்றம், மேற்புறத்தில் டாரின்கள் அதன் மேலே வட்டப்புள்ளியைச் சுற்றிச் சதுரம் (லிங்கம் ?), இவற்றின் இடப்புறத்தில் ஓர் ஆமையுள்ள தொட்டி /- (கி 24, 2 00)

27 மீன் தொட்டி, சதுரக் கட்டத்தில் புள்ளி சில காசுகளில் தெளிவில்லாத உருவங்கள் சில / (பின்புறம்) உருவம் ஏதும் இல்லை (மி 144, 146, 147, 1.38-1 76)

28. வேலியிட்ட மரம், ஆமைத் தொட்டி, இவைகளின் மேல் டாரின், கோட்டுருவில் மீன், சதுரக் கட்டத்தில் வட்டப் புள்ளி (லிங்கம் ?). /- (கி 25, 1.60).

29. குன்றம், கோட்டுருவில் மீன், மீன் தொட்டி, யானை. /- (மி 143, 1.49).

30. மும்முகடுள்ள குன்றத்தின் ஒரு பகுதி, ஆமைத் தொட்டி. /- (கி 26, 0.80).

31. சதுரத்தொட்டியில் ஆமை. /- (கி 27, 0.50).

முழு உருவம் உள்ளவை

32. கீழ்ப்புறத்தில் முக்கோணக் கொடிமரம், யானை, அம்புகள்(?), இவைகளின் மேற்புறத்தே, மும் முகடுள்ள குன்றம், தூண்களால் அமைக்கப்பட்ட கோயில், பிறை சுமந்த மும் முகடுள்ள குன்றம். /- (கி 29, 6.8).

33. குதிரை, அதன் முன்புறம் வேள்வி யூபம், மேற்புறத்தில் வேலியிட்ட மரம், மும் முகடுள்ள குன்றம். /- (கி 12-14, 5.70-6.70).

34. கீழ்ப்புறத்தில் முக்கோணக் கொடிமரம், யானை, மீன் தொட்டி, இவைகளின் மேலே, மும் முகடுள்ள குன்றம், தூண்களால் அமைக்கப்பட்ட கோயில், பிறை சுமந்த மும் முகடுள்ள குன்றம். /- இவ் வகைக் காசுகள் வட இலங்கையில் கிடைத்துள்ளன. (மி 154, 6.5).

35. ஆமையுள்ள தொட்டி, இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை, மேலும் கீழும் டாரின்கள். /- (கி 17, 3.40).

36. வேள்வி யூபம், இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை, இவற்றின் மேற்புறத்தில் சூரியன், வேலியிட்ட மரம். /- (கி 16, 4.60).

வட்டக் காசுகள்

37. வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், நான்கு மீன்கள் உள்ள தொட்டி, டாரின்கள். பின்புறத்தில் ஒன்றுமில்லை. இக் காசு ஓரச்சில் இடப்பட்டதாகக் கருதுகிறார் மிசினர். /- (மி 135, 2.43).

38. சதுரக் கட்டத்தில் ஒரு வட்டப் புள்ளி, மீன் தொட்டி, குன்றம். /- (மி 145, 1.76).

39. சதுரக் கட்டத்தில் ஒரு வட்டப் புள்ளி. இக்காசின் பின்புறத்திலும் இதே உருவம் உள்ளது. /- (மி 152, 153; 0.47-0.50).

## இடைக்காலக் காசுகள் (கி.பி 001–100)

இக்காசுகளில் பல உருவங்கள் இருந்தாலும் அவற்றில் ஓர் உருவம் மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. வலப்புறம் நின்றவாறுள்ள யானை மற்ற உருவங்களை விட பெரியதாக அமைக்கப்பட்டுள்ளது. காளை, குதிரை போன்ற உருவங்களும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. காளை, குதிரை உருவங்கள் வலப்புறம் நின்றவாறு அமைக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் இடப்புறம் நோக்கியவாறு காளையின் உருவம் உள்ளது. வேலியிட்ட மரம், ஆறு முகடுள்ள குன்றம், நதி, மீன்கள், டாரின்கள் உள்ளன. வேலியிட்ட மரம், ஆறு கதிர்கள் உருவங்கள் த்னித்தும் அமைக்கப்பட்டுள்ளன (வகைகள் 58-63). இவையாவும் முத்திரைக் காசுகளில் உள்ள வடிவங்களிலிருந்து சற்றே மாறுபட்டிருப்பினும் முத்திரைக் காசுகளின் பாணியைப் பிரதிபலிக்கின்றன. இவற்றோடு கோடரி, கும்பம், ஸ்ரீவத்சம், கொடிமரம், சூரியன், சந்திரன் ஆகிய உருவங்களும் உள்ளன. அதிக எடையுள்ள காசுகளும் (15.60), மிகக் குறைந்த எடையுள்ள (00.58) காசுகளும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் பின்புறத்தில் கோட்டுருவமாக மீன் உருவம் உள்ளது. இக் காசுகளில் உள்ள உருவங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**பல உருவம் உள்ளவை**

40. வேலியிட்ட மரத்தின் வலப்புறத்தில் ஆறு முகடுள்ள குன்றம், மரத்தை நோக்கியவாறு காளை, இடது புறத்தில் மீன்கள் உள்ள தொட்டி, அதன் மேல் மரத்தை நோக்கியவாறு குதிரை, மேலே வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள். /- (மி 155-159) 10.00-15.6; கி 31, 32; 11.30-11.80).

41. காளை, கும்பம், வேலியிட்ட மரம் அதன் கீழே ஆறு முகடுள்ள குன்றம் (?). இவற்றின் மேலே ஆட்கள் இருவர், சூரியன், சந்திரன். /- (கி 38, 12.20).

42. முன் வகையில் உள்ள உருவங்களின் கீழே மீன்களுள்ள நதி. /- (கி 33, 11.80).

43. காளை, ஆறு முகடுள்ள குன்றம், மேற்புறத்தில் கிளைகள், நதி. /- (கி 37, 10.20).

44. யானையின் கீழே மீன்களுள்ள நதி, வேலியிட்ட மரம், ஆறு முகடுள்ள குன்றம், அதன்மீது கொடிமரம் அல்லது வேல். /- (கி 40,41; 9.4-10.20).

45. காளை, ஆறு முகடுள்ள குன்றம், வேலியிட்ட மரம், மேற்புறத்தில் நதி, இரண்டு ஆமைகள். காளையின் கீழும் குன்றத்தைச் சுற்றிலும் டாரின்கள். /- (கி 36, 8.90).

46. வலப்புறம் நின்றவாறுள்ள குதிரை, ஒரு கும்பம். இவற்றின் மேற்புறத்தில் வலப்புறம் நின்றவாறுள்ள காளை. /- (கி 49, 8.5).

47. காளை, ஆறு முகடுள்ள குன்றம், மரம், மேற்புறத்தில் நதி, அதன் மேலே வேலியிட்ட மரம். /- (கி 35, 8.30).

48. யானையின் கீழே நதி (?), வேலியிட்ட மரம், மும்முகடுள்ள குன்றம், அதன் மேல் கோடரி. /- (கி 42, 43; 8.1-8.3).

49. மேற்புறத்தில் வேலியிட்ட மரம், ஆறு முகடுள்ள குன்றம், இவற்றின் கீழே காளை, சில டாரின் குறிகள். /- (கி 34, 5.20).

50. காளையின் முன்பு வேலியிட்ட மரம். இவற்றின் கீழே ஆறுமுகடுள்ள குன்றம், மேற்புறத்தில் சில டாரின் குறிகள். /- (கி 39, 3.40).

51. மேற்புறத்தில் டாரின் குறிகள் பல, ஸ்ரீவத்சம், இவற்றின் கீழே காளை. /- (கி 48, 3.30).

52. காளை, கும்பம். /- (கி 45, 2.08).

53. வலப்புறம் நின்றவாறுள்ள திமில் உள்ள காளை, மரம். /- (மி 166, 2.3).

54. திமில் உள்ள காளை, வேலியிட்ட மரம். /- (கி 167, 1.03).

55. காளை, கும்பம், கத்தி. /- (கி 46, 1.30).

56. காளை, வேலியிட்ட மரம். /- (கி. 47, 0.8).

57. குதிரை, பிறை. /- (மி 170, 0.58).

**தனி உருவம் உள்ளவை**

58. திமில் உள்ள காளை-தனியாக. /- (மி 165, 2.69).

59. வட்டத்தைச் சுற்றி வெளிப்படும் மூன்று அம்புகளும் அவற்றின் இடையே மூன்று டாரின்கள். /- (கி 77, 1.7).

60. வேலியிட்ட மரம் - தனியாக. /- (கி 75, மி 161; 1.2-1.3 கி).

61. முன் வகையைப் போன்ற உருவங்கள் (இவ் உருவங்களைச் சக்கரம், அதைச் சுற்றிலும் சுடர் என்று மிசினர் கருதுகிறார்). /- (மி 171, 0.82).

62. வேலியிட்ட மரம் - தனியாக. /- (மி 160, 0.80).

63. இடப்புறம் நின்றவாறுள்ள காளை-தனியாக. /- (கி44, 0.5 கி).

**பிற்காலக் காசுகள் (கி.பி.100–200)**

இக்காலத்தில் கிடைத்த காசுகளில் யானை உருவம் உள்ள காசுகளே அதிகம் உள்ளன. இவற்றில் யானை உருவம்

முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. இவற்றில் வலப்புறம் நின்றவாறுள்ள யானை உருவம் பெரும்பாலான காசுகளில் உள்ளது. சிலவற்றில் இடப்புறம் நின்றவாறுள்ளது. இவ் வகைக் காசுகள் மிகச் சிலவே. யானையோடு திரிசூலமும் பல காசுகளில் காணப்படுகிறது. இக்காலக் காசுகளின் மேற்புறத்தில் மங்கல உருவங்கள் ஏழு காணப்படுகின்றன. இவை யாவும் மிகச் சிறிய உருவங்கள். இச் சிறிய உருவங்களைச் சரியாக அடையாளம் காண இயலவில்லை. இவ் உருவங்களாவன: 1. வேலியிட்ட மரம், 2. உடுக்கை, 3. பூரண கும்பம், 4. பிறை, 5. ஸ்ரீவத்சம், 6. சங்கு, 7. சக்கரம். இவ் உருவங்கள் சிறு வேறுபாடுகளோடு காசுகள் சிலவற்றில் உள்ளன. இக்காசுகள் எல்லாவற்றிலும் பின்புறத்தில் கோட்டுருவமாக மீன் உருவம் உள்ளது.

64. யானை (வலப்புறம்), திரிசூலம், ஓராள்(?). மேற்புறத்தில் வேலியிட்ட மரம், உடுக்கை, பூரணகும்பம், பிறை, ஸ்ரீவத்சம், சங்கு, சக்கரம். /- (கி 54, 11.60).

65. வகை 64இல் உள்ள உருவங்கள். சூலத்தின் நடுவில் கோடரி உள்ளது. /- (கி 52, 9.70).

66. யானை (வலப்புறம்), திரிசூலம், கொடிமரம், மேற்புறத்தில் வேலியிட்ட மரம் (?), சங்கு, கும்பம், சக்கரம். /- (கி 59, 8.70).

67. யானை (வலப்புறம்), திரிசூலம், கொடி, இவற்றின் மேலே பிற உருவங்கள் (மங்கலக் குறிகள் ?). /- (மி 174-178, 6.7-8.5).

68. யானை (வலப்புறம்), அதன் மேல் அங்குசம் (?) ஏந்திய ஓராள். மேல் விளிம்பில் ஸ்ரீவத்சம். /- (கி 65, 8.5).

69. யானை (வலப்புறம்), மேலே கொடி. /- (மி 173, 7.1).

70. யானை (வலப்புறம்), முன்பகுதி மட்டுமே உள்ளது. யானையின் முன்புறத்தில் குடையோடு ஓராள் (?). யானையின் கழுத்து, முதுகு இவற்றின் மேல் அமர்ந்த நிலையில் ஆள்கள். /- (கி 66, 62, 63;4.2-6.8).

71. யானை (வலப்புறம்), திரிசூலம். காசின் மேற்புற விளிம்பில் தெளிவில்லாத சில உருவங்கள். /- இவை வட இலங்கையில் கண்டெடுக்கப்பட்டவை. (மி 180-183, 5.4-6.8).

72. வகை 64இல் உள்ளவாறு. /- எடை குறைந்த காசுகள். (கி 53, 55-58; 5.60-6.50).

73. யானை (வலப்புறம்), திரிசூலம், காசின் மேல்விளிம்பில் சிறு வடிவங்கள். /- (மி 184, 4.4-6.00).

74. யானை (வலப்புறம்) கோடரி பொருத்திய சூலம். மேலே வேலியிட்ட மரம், சக்கரம். /- (கி 60, 5.60).

75. யானை (வலப்புறம்), வேல், திரிசூலம், மேற்புறத்தில் சூரியன், பிறை, கும்பம், சக்கரம், ஸ்ரீவத்சம், குடை, தெளிவில்லாத உருவம். /- (பின்புறம்) கோட்டுருவத்தில் மீன். இடப்புறத்தில் வேலியிட்ட மரம். (த.தொ.சா.2 (2002) : 1, 4.8).

76. யானை (வலப்புறம்), கொடிமரம், குடையோடு ஓராள். /- (கி 67, 4.0).

77. யானை (வலப்புறம்), வேல், திரிசூலம் (?) மேற்புறத்தில் பிறை, கும்பம், ஸ்ரீவத்சம். /- (கி 61, 3.4).

78. யானை (வலப்புறம்), மேற்புறத்தில் குடை, சக்கரம். /- (கி 64, 3.2).

79. யானை (வலப்புறம்), கொடிமரம், இவற்றில் சில காசுகள் வட இலங்கையில் கண்டெடுக்கப்பட்டவை. /- (மி 188,189; 1.6-2.8).

80. யானை (வலப்புறம்), அதன் முன்பு தெளிவில்லாத சில உருவங்கள். /- (மி 190, 2.3).

81. யானை (வலப்புறம்), காசின் மேல்புற விளிம்பில் தெளிவில்லாத குறிகள். அவற்றுள் சில தமிழ் பிராமி (?) எழுத்து வடிவைப்போல் உள்ளன எனக் கருதுகிறார் கிருஷ்ணமூர்த்தி.[20] இவற்றில் சுவஸ்திகம், விளக்கு, கும்பம் போன்ற உருவங்களும் உள்ளன. யானையின் முன்புறத்தில் உள்ள உருவங்கள் சில தெளிவில்லாமல் உள்ளன. /- (பின்புறம்) வளைவான கோட்டுக்குக்கீழே கோட்டுருவத்தில் மீன். (கி 69,70; 1.7-1.9).

82. யானை (இடப்புறம்), அதன் முன்பு டாரின்கள். /- (மி 163, 2.12)

83. யானை (இடப்புறம்), மேல்புற விளிம்பில் தெளிவில்லாத சில உருவங்கள். அவற்றுள் சில குறிகள் தமிழ் பிராமி (?) எழுத்து வடிவைப்போல் உள்ளன எனக் கருதுகிறார் கிருஷ்ணமூர்த்தி.[21] இவற்றில் சில சுவஸ்திகம், கும்பம் போன்ற உருவங்களும் உள்ளன. /- (பின்புறம்) வளைவான கோட்டுக்குக்கீழே கோட்டுருவத்தில் மீன். (கி 71, 2.1).

84. யானை (இடப்புறம்), வேலியிட்ட மரம். இவற்றின் கீழே சுவஸ்திகம், டாரின், கும்பம். /- (கி 72, 2.1).

**ஈயக் காசுகள் (கி.பி.100–300)**

சங்க கால இறுதியில் ஈயக்காசுகளைப் பாண்டியர்கள் வெளியிட்டனர் என்று கருதப்படுகிறது. பொருளாதார முடக்கம்,

காசு வெளியிட உலோகம் கிடைக்காமை போன்ற இடர்ப்பாடுகளால் இக்காலத் தமிழ் நாட்டு அரசுகள் யாவும் ஈயக் காசுகளை வெளியிட ஆரம்பித்தன. இவை வட்டம், செவ்வக வடிவில் உள்ளன. இக்காசுகளில் பொதுவாகத் திமில் உள்ள காளை சில காசுகளிலும், கோடரி பொருத்திய சூலம் சில காசுகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பின்புறத்தில் மீன் உருவம் உள்ளது. இவைகள் குறைந்த எடை உள்ளவை. இக்காசுகள் கி.பி.300க்கு முன்பு வெளியிடப்பட்டிருக்கலாம்.

85. வலதுபுறம் நின்றவாறுள்ள காளை. /- (மி 198, 2.3 வட்டக்காசு).

86. காளை (வலப்புறம்) மேலே பிறை. /- (மி 199, 1.80 சதுரக் காசு).

87. காளை (வலப்புறம்) சுவஸ்திகம். /- (மி 200, 1.20 சதுரக் காசு).

88. கோடரி பொருத்திய சூலம். /- (பின்புறம்) ஒன்றுமில்லை. (மி 203, 1.25).

## தலை பொறிக்கப்பட்ட காசுகள்

அரசரின் தலை உருவம் பொறித்த காசுகளைப் பாண்டியர் வெளியிட்டனர் என்று கிருஷ்ணமூர்த்தி கருதுவார். இரண்டு சதுர வடிவச் செப்புக் காசுகள் அவர் இருப்பில் உள்ளன. இக் காசுகளின் முன்புறத்தில் அரசரின்தலை உள்ளது. இத்துடன் தெளிவில்லாத பல உருவங்கள் (?) உள்ளன. இக்காசுகளில் பெயர் இல்லை. பின்புறத்தில் தொட்டிக்குள் நான்கு ஆமைகள் ஒரு காசிலும் இவற்றோடு வேலியிட்ட மரம் மற்றொரு காசிலும் உள்ளன. இக்காசுகளின் பின்புறத்தில் மீன் உருவம் இல்லை என்றாலும் இக்காசுகளைப் பாண்டியர் வெளியீடுகள் என்று கருதுகிறார்.

89. வலப்புறம் நோக்கிய தலை, மகுடம் அணிந்தவாறுள்ளது. இவை யாவும் புள்ளி வட்டத்தினுள். /- (பின்புறம்) ஐந்து ஆமைகள் உள்ள செவ்வகத் தொட்டி. (கி 50,51, 3.90-4.50).

பாண்டியர் காசுகளுக்கும் வட இந்திய அரசர்கள் வெளியிட்ட காசுகளுக்கும் தொடர்பு உள்ளதென்பார் கிருஷ்ணமூர்த்தி. வேதகால யாக வேள்வியினைச் சங்க கால அரசர்களும் செய்துள்ளனர். இதனைக் குறிக்கவே இக்காசுகளில் வேதகால வேள்வி தொடர்பான குதிரை, யாக குண்டம், யாகத்தம்பம், நந்திபாதம், கும்பம், யானை ஆகிய உருவங்களைப் பொறித்தனர். மேலும் இக்குறிகள் வட இந்திய அரசர்கள், இனக்குழுக்கள் வெளியிட்ட காசுகளிலும் உள்ளன. குறிப்பாக, யௌதேயர்கள் வெளியிட்ட காசுகளில் இக்குறிகள் உள்ளன.

இக்காசுகளின் சில வகைகளில் (வகைகள் 18, 32, 34) தூண்களால் அமைக்கப்பட்ட கோவில் உள்ளது. இக்கோவிலோடு, பிறை சுமந்த மும்முகடுள்ள குன்றம், சொகவுரா செப்பேட்டில் காணப்படும் உருவங்களை ஒத்துள்ளது குறிப்பிடத்தக்கதாம். இச்செப்பேடு அசோகர் காலத்திற்கு முந்தியதாகலாம். மேலும் இவ்வடிவங்களுடைய காசுகள் இலங்கை கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வடிவங்களைத் தாங்கிய பாண்டியர் காசுகளும் ஏறக்குறைய இதே காலகட்டத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் (200 கி.மு.). தமிழ்நாட்டோடு வட இந்தியா, மற்றும், இலங்கையோடு இக்காலகட்டத்தில் ஏற்பட்ட வணிகத் தொடர்புகளை இக்காசுகள் உறுதி செய்கின்றன.

## குறிப்புகள்

1 K.V. Raman, *Some Aspects of Pandyan History in the Light of Recent Discoveries, ப.51, படம்* vi-b; P. Shanmugam, "Two Pandya Coins from Madurai", *SSIC.*, vol. 2 pp. 93-98; *பொதுவாக எட்டு மங்கல உருவங்கள் என்றாலும் ஏழு சிறு உருவங்களே மேல்புறத்தில் காணப்படுகின்றன. பார்க்க வகைகள் 64-67.*

2. E. Loventhal, *Coins of Tinnevelly*, Vellore; *அ. இராகவன், கோ நகர் - கொற்கை, பக். 113-115.*

3. Michael Mitchiner, *The Coinage and History of Southern India,* Part II: Tamil Nadu and Kerala, *பக். 85, 86.*

4. *ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள், ப.5.*

5. R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins*, p. x.; *ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி-2, ப.1.*

6. *நடன காசிநாதன், தமிழர் காசு இயல், பக்.21, 151.*

7. Michael Mitchiner, *முன் குறித்த நூல், ப.88.*

8. *மேலது;* P. Pushparatnam, *Ancient Coins of Sri Lankan Tamil Rulers*, p.70.

9. E. Loventhal, *முன் குறித்த நூல்.*

10. D.D. Kosambi, "The Bodinayakanur Hoard", *JBBRAS*, 26 (1951), pp.25-27; ---*Indian Numismatics*, New Delhi, 1981, pp.123-127.

11. T.G. Aravamudhan, "A Pandya Issue of Punch Marked Purana", *JNSI.*, vol.6 (1994) pp.1-4.

12. R. Vanaja, "The Coin-Collection of the Government Museum, Madras", *JNSI.*, 23, p.476.

13. T.V. Mahalingam, Presidential Address, 49th Session, (1970), *Sixty Years of the Numismatic Society of India 1910-1971- History and Presidential Addressess-1973, p.504.*

14. R. Krishnamurthy, "Some Unpublihsed Silver Punch Marked Coins of the Pandyas", *JNSI*, vol.50, pp.25-27.

15. Michael Mitchiner, *முன் குறித்த நூல், ப.84.*

16. R. Krishnamurthy, *முன் குறித்த நூல், ப.X; ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி-2, ப.1.*

17. R. Krishnamurthy, *முன் குறித்த நூல், ப.19.*

18. *மேலது; பக். 20-23; ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள், ப.5.*

19. Iravatham Mahadevan, *Early Tamil Epigraphy, From the earliest Times to the Sixth Century A.D.*, pp..63, 121.

20. K.G. Krishnan, *Inscriptions of the Early Pandyas* (from c. 300 BC -984 A.D.), p.1.

# சேரர் காசுகள்

சங்க காலச் சேர அரசர்கள் தமிழகத்திற்கு மேற்கே அமைந்த பகுதிகளை ஆண்டனர். இன்றைய கேரளத்தின் ஒருபகுதி இவர்கள் ஆட்சியில் இருந்தது. இவர்களில் ஒரு பிரிவினர் கொங்குப் பகுதியை ஆட்சி செய்தனர். இவர்கள் வெளியிட்ட காசுகள் ஏதும் தமிழ் நாட்டில், 1987 ஆம் ஆண்டுவரை காணப்படவில்லை. முன்பக்கம் யானையோடும் எட்டு மங்கலக் குறிகளைக் கொண்ட காசுகள் சேரர் காசுகள் என்று 1981இல் நாகசாமி அனுமானித்தார்.[1] தம் இருப்பில் உள்ள காசுகள் சிலவற்றை 1987இல் வெளியிட்டு அவை சேரர் வெளியீடுகள் என்றார் கிருஷ்ணமூர்த்தி.[2] அதே ஆண்டின் பிற்பகுதியில் அமராவதி ஆற்றில் கிடைத்த சேர அரசன் கொல் இரும்பொறையின் காசைக் கண்டுபிடித்து நாகசாமி வெளியிட்டார்.[3] இக் கண்டுபிடிப்புகளைத் தொடரந்து சேரர் காசுகள் பல வெளிவந்தன. இக்காசுகள் பெரும்பாலும் கரூர்-அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்தவை.[4] சில காசுகள் தஞ்சாவூர், மதுரை, திருக்கோயிலூர், மடிகேரி (கருநாடகம்) ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன.[5]

செம்பு, வெள்ளி, ஈயம் ஆகிய உலோகங்களில் காசுகளை வெளியிட்டனர். காசுகள் பெரும்பாலும் சதுர அல்லது செவ்வக வடிவுடையவை. வட்டக் காசுகள் சிலவற்றையும் இவர்கள் வெளியிட்டுள்ளனர். இவைகளில் மிகச் சிறிய காசுகள் ஒரு கிராமுக்கும் குறைந்த எடை உள்ளவை (வகை 78). இக்காசுகள் 1-8 கிராம் வரை எடையுள்ளன. பெரிய காசுகள் 12 கிராம் வரை எடையுள்ளன.

## முத்திரைக் காசுகள் (கி.மு.1–கி.பி.2)

பண்டைய தமிழ் நாட்டில் வட இந்திய முத்திரைக் காசுகள் செலாவணியில் இருந்துள்ளதைத் தொடர்ந்து சேரநாட்டிலும் அவை புழக்கத்தில் இருந்துள்ளன. சேர நாடு மற்றும் அதையொட்டிய பகுதிகளில், கரூர் (அமராவதி ஆறு), பேரூர் (நொய்யல் ஆறு), சாவடிபாளையம் (கோயமுத்தூர் மாவட்டம்), பாலக்காடு (கேரளா) ஆகிய ஊர்களில் இக்காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[6]

இக்காசுகளோடு தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட முத்திரைக் காசுகளும் புழக்கத்தில் இருந்துள்ளன. இக்காசுகளைச் செய்வதற்கான காசு அச்சுகள் சிலவும் தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளமை இக்கருத்துக்குத் துணைபுரியும்.

முத்திரைக் காசுகளை இதுவரை சேரர்கள் வெளியிடவில்லை என்று கருதினர். ஆயினும் சேர அரசர்களின் குறியான அம்பு பூட்டிய வில் உள்ள இரண்டு வெள்ளிக் காசுகள் அண்மையில் (1994), கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[7] இவை ஏறக்குறைய கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்திருக்கலாம். இவற்றில் ஒருகாசு சதுரமானது. அதன் முனைகள் வெட்டப்பட்டதால் ஆறு பக்கம் போன்றுள்ளது. இக்காசுகளில் கீழ்க்கண்டவாறு உருவங்கள் உள்ளன.

(கீழே உள்ள வகைப்பாட்டில் தரப்பட்டுள்ள விவரங்களின் வரிசை : வரிசை எண், காசின் முன் பக்கத்தில் உள்ள உருவங்கள். சாய்கோட்டை (/) அடுத்துப் பின்புறத்தில் உள்ள உருவங்கள். இவற்றில் சாதாரணமாகக் காணப்படும் அம்பு பூட்டிய வில் உருவம் தரப்படவில்லை. வேறுபட்ட உருவங்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் நூல் பெயர் குறிப்பெழுத்திலும், அந்நூலில் தரப்பட்ட எண், அடுத்து எடை, கிராமிலும் தரப்பட்டுள்ளன. நீள அளவுகள் சேர்க்கப்படவில்லை. குறிப்பெழுத்துகளும் அவற்றுக்கு நேரான நூல்களும் வருமாறு: கி: R. Krishnamurthy, Sangam Age Tamil Coins, 1997, மி : Michael Mitchiner, The Coinage and History of Southern India, part Two, 1998; த.தொ.சா.1 (1994) : ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 1; த.தொ.சா.2 (2000) : ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 2; த.கா. (2002) : ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள் (2002); பி.வி.2000 : P. Vijayaraghavan, SSIC., Vol. 10, pp.28-31; சங். (1999) : சங்கரன் ராமன், தமிழ் நாட்டு நாணயங்கள், ப.23; நா. (1995) : R. Nagaswamy, Roman Karur, 1995; கரு : M.T. Karunakaran, Madras Coin Sociey, Special Bulletin, 7, 2000, p.13.)

1. சூரியன் (?) ஆறு முகடுள்ள குன்றம், ஸ்தூபத்திற்குள் லிங்கம் (?),தொட்டிக்குள் மீன், தெளிவில்லாத உருவம் ஆகிய ஐந்து உருவங்கள் உள்ளன. / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அதன் மேற்புறத்தில் பிறை. இக்காசை ஆய்ந்த மிசினர், முன்னுள்ள மூன்று குறிகள் வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள்,

ஆற்றில் 2 மீன்கள் என்று மாறுபட்டு ஐந்தாவது குறி தெளிவில்லை என்பார் மேலும் இக் காசு வட இந்திய மௌரியப் பேரரசு வெளியீடு என்றும் பின்புறத்தில் அம்பு பூட்டிய வில் குறி இட்டுச் சேரர்கள் செலாவணியில் விட்டனர் என்பார் (த தொ சா 1 (1994) 10, 305, மி ப 72)

2 நீள் வட்ட வடிவம் சூரியன், சதுரத்தொட்டி, நீண்ட தடியில் கோர்த்த மூன்று வட்டங்கள், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், அம்பு பூட்டிய வில் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில் (பி வி (2000), 254)

## பெயர் பொறிப்புள்ள காசுகள்

அரசரின் பெயர் பொறித்த காசுகளையும் வெளியிட்டுள்ளனர் ஐந்து வகைக் காசுகள் இதுவரை கிடைத்துள்ளன இவற்றில் 2 வெள்ளிக் காசுகள், மற்ற 3உம் செப்புக் காசுகள் அரசரின் பெயரோடு அவர் தலையும் இக்காசுகளில் பொறிக்கப்பட்டுள்ளது செப்புக் காசுகளில் பெயரோடு, நின்றவாறுள்ள ஓராள் உருவம் உள்ளது இக்காசுகளின் பின்புறத்தில் எவ்வித வடிவமும் இல்லை

3 அரசரின் மொட்டைத் தலை உருவம் (வலப்புறம் நோக்கியவாறுள்ளது) மேற்புறத்தில் தமிழ் பிராமி எழுத்தில் மாக்கோதை என்ற பெயர் (கி 164-171, மி 32-33, 160-230, த தொ சா 1 (1994) 14)

4 அரசரின் மொட்டைத் தலை உருவம் (வலதுபக்கம் நோக்கியவாறுள்ளது) மேற்புறத்தில் தமிழ் பிராமி எழுத்தில் குட்டுவன் கோதை என்ற பெயர் குட்டுவன் கோதை என்ற சேர அரசரால் வெளியிடப்பெற்றது என்றாலும் சரியாக அடையாளம் காண இயலவில்லை (கி 172, மி 34, 200-230)

மூன்று வகைச் (5-7) செப்புக் காசுகளில் பெயரோடு நின்றவாறுள்ள ஓராள் உள்ளான் விளிம்பையொட்டிப் பெயர் உள்ளது இம் மூன்றும் வட்டக் காசுகள்

5 வாயிலின் நடுவில் நின்றவாறுள்ள ஓராள் அருகே மரக்கிளை விளிம்பையொட்டித் தமிழ் பிராமி எழுத்தில் கொல் ஈப்புறை (கொல்லிப்புறை) என்ற பெயர் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், ஆமையுள்ள நதி, ஆறு முகடுள்ள குன்றம், தொட்டி, டாரின் (நா (1995), பக்9-10, கி 174, 670)

6. வாயிலின் நடுவில் நின்றவாறுள்ள ஓராள். அருகே மரக்கிளை, மூன்று மீன்கள். விளிம்பையொட்டித் தமிழ் பிராமி எழுத்தில் கொல் ஈரும்புறை (கொல்லிரும்புறை) என்ற பெயர். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், ஆமையுள்ள நதி, ஆறு முகடுள்ள குன்றம், நான்கு மீன்கள் உள்ள தொட்டி. (த.தொ.சா.1 (1994) : 13, 8.20).

7. வாயிலின் நடுவில் நின்றவாறுள்ள ஓராள். அருகே மரக்கிளை, விளிம்பில் தமிழ் பிராமி எழுத்தில் கொல் ஈரும்புறை(ய்) (கொல்லிரும்புறை) என்ற பெயர். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், ஆமையுள்ள நதி, ஆறு முகடுள்ள குன்றம், தொட்டி, டாரின். (கி. 173, 3.90).

இக்காசுகளை வெளியிட்ட சேர அரசர்களைச் சரியாக அடையாளம் காண்பது தற்பொழுது இயலாது. இக்காசுகளில் கொல் ஈப்புறை, கொல் ஈரும்புறைய் என்று பெயர்கள் இருந்தாலும் அவற்றை வெளியிட்டவர் கொல்லிப்புறை என்ற சேர அரசர் என்று அனுமானித்துள்ளனர். இப்பெயருள்ள சேர அரசர் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றனர். கொல்லி மலையை வெற்றிக் கொண்டதன் நினைவாக இக்காசுகள் சேர அரசனால் வெளியிடப்பட்டது என்று கருதுகிறார் நாகசாமி.[8] இக்கருத்தை யொட்டி இக்காசை வெளியிட்ட அரசன் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்று அனுமானிக்கிறார் பத்மாவதி.[9]

## முற்காலக் காசுகள் (கி.மு.1)

### பல உருவம் உள்ளவை: கோட்டுருவ யானை

இவ்வகைக் காசுகள் யாவும் சதுரமான செப்புக் காசுகள். இவற்றின் முன்புறத்தில் பல உருவங்கள் உள்ளன. இவை யாவும் முத்திரைக் காசுகளில் உள்ளவை போன்று அருகருகே கோட்டுருவத்தில், சிறியதாகவும் சம அளவிலும் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றில் சிறிய காசுகள் 1.50 கிராம், பெரிய காசுகள் 12.30 கிராம் வரை எடையுள்ளன. இவற்றில் யானை, மும் முகடுள்ள குன்றம், அம்பு பூட்டிய வில், மீன்கள், நதி ஆகிய உருவங்கள் உள்ளன. இவற்றில் உள்ள யானை பெரும்பாலும் கோட்டுருவில் உள்ளது. இவ் உருவங்கள் ஒவ்வொரு வகையிலும் இடம் மாற்றி அமைக்கப் பட்டுள்ளன. எல்லாக் காசுகளிலும் அம்பு பூட்டிய வில் பின்புறத்தில் உள்ளது. சில காசுகளில் பின்புறத்தில் (13-15) ஒன்றுமில்லை. இக்காசுகளில் கீழ்க்கண்டவாறு உருவங்கள் உள்ளன:

8. அம்பு பூட்டிய வில், யானை, கோடரி, மீன்கள், நதி. இக்காசு மிக அதிக எடையுள்ள வகையைச் சார்ந்தது. / (கி. 85, 12.30).

9. வகை 8இல் உள்ளவாறு. அமைவிடம் மாறியுள்ளது. / வகை 8ஐ விட சற்றுக் குறைவான எடையுடையவை. இக்காசுகளே இக்காலக் காசுகள் வடிவமைப்பில் சிறந்தவை எனக் கருதுகிறார் மிசினர். (கி. 88, 86, 83, 84, 6.20-7.70; மி. 35-39, 4.71-6.10).

10. யானை, ஆறு முகடுள்ள குன்றம், இவற்றின் மேலே அம்பு பூட்டிய வில், நதி (?). /- (கி. 92,93, 5.20-07.20).

11. அம்பு பூட்டிய வில், மும் முகடுள்ள குன்றம், யானை, டாரின்கள். / (கி. 80,81, 1.50-02.10).

12. அம்பு பூட்டிய வில், மும் முகடுள்ள குன்றம் (?), கோடரி / (கி. 82, 01.70).

13. அம்பு பூட்டிய வில், யானை, கோடரி, டாரின்கள் /- (கி. 89,08.20).

14. அம்பு பூட்டிய வில், யானை, கோடரி, மீன்கள், மும் முகடுள்ள குன்றம் / (கி. 90,91, 6.10-07.40).

15. அம்பு பூட்டிய வில், யானை, கோடரி, நதி, மூன்று வளைகோடுகள் (?). / (கி. 87, 07.20).

## முழு உருவில் யானை, பிற உருவங்கள் (16–28)

இவ்வகைக் காசுகளில் யானை உருவம் முழுவடிவமாக உள்ளது. இக் காசுகளிலும் வேலியிட்ட மரம், ஆறு முகடுள்ள குன்றம், அங்குசம் ஆகிய பல உருவங்கள் உள்ளன. பெரும்பாலும் எல்லா உருவங்களும் சம அளவில் அமைக்கப்பட்டுள்ளன. பின்புறத்தில் அம்பு பூட்டிய வில் பல காசுகளில் காணப்பட்டாலும் (17,19-22,24,25,27,28) மற்ற காசுகளில் அங்குசம் படுக்கை வசத்தில் உள்ளது. இவற்றில் அதிக எடையுள்ள காசுகள் 11.00 கிராம் எடையுடையவை. குறைந்த எடைக் காசுகள் 1.44 கிராம் உள்ளன. கீழ்க்கண்ட உருவங்கள் உள்ளன.

16. யானை (வலப்புறம்) வேலியிட்ட மரம், மேல் விளிம்பையொட்டி ஸ்ரீவத்சம், சங்கு, ஐந்து இதழ் மலர். /(பின்புறம்) அம்பு பூட்டிய வில். அதன் கீழே அங்குசம். அம்பின் இருபக்கமும் டாரின்கள். இக்காசு அதிக எடையுள்ளது. (கி. 100, 11.00).

17. ஆறு முகடுள்ள குன்றம், யானை, ஆமை (?), டாரின். / (கி. 94, 08.10)

18. வேலியிட்ட மரம், யானை (வலப்புறம்), வளைந்தோடும் நதி, மேற்புறத்தில் படுக்கை வசத்தில் அங்குசம், மேல் விளிம்பில் பிறை சுமந்த மும் முகடுள்ள குன்றம், கொடி, சங்கு, கோடரி(?), ஐந்து இதழ் மலர். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். அதன் கீழே அங்குசம். அம்பின் இருபக்கமும் டாரின்கள் (கி. 95-99, 7.30-08.90; த.கா. (2002) : 2-1).

19. தெளிவில்லாத குறி, யானை (வலப்புறம்), நான்கு மீன்கள் உள்ள தொட்டி, வேலியிட்ட மரம். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (மி. 40, 8.49).

20. வேலியிட்ட மரம், யானை (வலப்புறம்), கும்பம், யானையின் கீழே மீன்கள் உள்ள நதி, மேல் விளிம்பில் முக்கோணக் கொடி, பிறை சுமந்த மும் முகடுள்ள குன்றம். / (பின்புறம் நாணேற்றப் பட்ட வில், உள் பக்கத்தில் டாரின்கள். இவையாவும் வட்டப் புள்ளியால் அமைக்கப்பட்ட சதுரத்தினுள் உள்ளன. (கி. 105, 109, 7.30-07.70).

21. வேலியிட்ட மரம், ஆறு முகடுள்ள குன்றம், டாரின், யானை, 2 மீன்கள், அங்குசம், மும் முகடுள்ள குன்றம். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், டாரின், இவற்றைச் சுற்றிப் புள்ளி, கோடு இவைகளால் ஆன வட்டம். (மி. 42,43, 6.26-7.40).

22. தும்பிக்கையை உயர்த்தியுள்ள யானை (வலதுபுறம்), கீழே மீன்கள் உள்ள வளைந்தோடும் நதி, மேற்புறத்தில் மீன்கள் உள்ள தொட்டி, மும் முகடுள்ள குன்றம் (?). யானையின் பின்னால் மரம். / (பின்புறம்) கோடு, புள்ளி ஆகியவைகளால் ஆன வட்டத்திற்குள் நாணேற்றப்பட்ட வில். (கி. 112, 07.40).

23. யானை (வலதுபுறம்), கோடரி பொருந்திய சூலம், மேல் விளிம்பில் ஆறு முகடுள்ள குன்றம், முக்கோணக் கொடி. / (பின்புறம்) புள்ளியால் ஆன சதுரத்திற்குள் அம்பு பொருந்திய வில், அங்குசம். (கி. 101-104, 106, 4.60-07.10).

24. வகை 20இல் உள்ளவாறு. / (பின்புறம்) மீன்கள் உள்ள வட்ட நதிக்குள் நாணேற்றப்பட்ட வில். (கி. 107,108,110,111, 3.80-06.20).

25. அம்பு பூட்டிய வில், யானை (வலதுபுறம்), மீன், கோடரி. / (மி. 41, 5.13).

26. நான்கு மீன்களுள்ள தொட்டி, யானை (வலப்புறம்), சூலம் (?), கீழ் விளிம்பில் படுக்கை வசத்தில் வேலியிட்ட மரம் (?),

இவைகளுக்கு மேலே நான்கு மீன்களுள்ள சதுரத் தொட்டி. / (கி. 113-117, 3.20-5.00).

27. மீன்கள் 2/4, அங்குசம், யானை (வலப்புறம்), தெளிவில்லாத உருவம். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம். (மி. 44, 3.24).

28. யானை (தலைகீழ்), நதியில் மீன்கள், மும்முகடுள்ள குன்றம், அம்பு பூட்டிய வில், மீன்கள்-4, கோடரி. / (மி. 45-50, 1.44-2.13).

## இடைக்காலக் காசுகள் (கி.பி.1)

இக்காலக் காசுகள் யாவிலும் யானை உருவம் பெரிதாக அமைக்கப்பட்டு முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் யானை, திமில் உள்ள காளை, குதிரை, வேலியிட்ட மரம், ஸ்ரீவத்சம் ஆகிய உருவங்களே பெரிதும் உள்ளன. இக்கால கட்டத்தில் வெளியிடப் பெற்ற காசுகள் முற்காலக் காசுகளை விடக் குறைந்த எடையுடையவை. இவற்றில் அதிக எடையுள்ள காசுகள் 3.66 கிராமும், குறைந்த எடையுள்ளவை 0.76 கிராமும் உள்ளன. பெரும்பாலான காசுகளின் பின்புறத்தில் அம்பு பூட்டிய வில் மட்டுமே உள்ளது. சிலவற்றில் அங்குசமும் உள்ளது (29, 38, 39, 40, 43). இக்காசுகளில் உள்ள உருவங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

29. யானை (வலதுபுறம்), காளை (வலதுபுறம்). இவைகள் ஒரு மேடையின் மீது நின்றுள்ளன. / (பின்புறம்) அம்புபூட்டிய வில், அங்குசம் (மி 52, 3.66).

30. யானை (வலதுபுறம்). புள்ளியிட்ட வட்டங்கள் இரண்டினுள் இவை உள்ளன. / அம்பு பூட்டிய வில். இவை புள்ளி வட்டத்தினுள் உள்ளன. (மி. 59-61, 1.33-2.42).

31. யானை (வலதுபுறம்). / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (மி. 54-57, 1.52 - 2.34; கி. 155-157, 1.10-01.90).

32. புள்ளி வட்டத்தின் நடுவே யானை (வலதுபுறம்), தும்பிக்கையை உயர்த்திய நிலையில் உள்ளது. / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (கி. 159, 1.40).

33. யானை (வலதுபுறம்). / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். இவை புள்ளி வட்டத்தினுள் உள்ளன. (மி. 58, 1.26).

34. வட்டத்திற்குள் யானை (வலதுபுறம்). / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (கி. 158, 1.00).

35. யானை (இடப்புறம்). புள்ளியிட்ட வட்டத்தினுள் உள்ளது. / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். இவை புள்ளி வட்டத்தினுள் உள்ளன. (மி. 62, 1.76).

36. திமில் உள்ள காளை (வலதுபுறம்). / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (மி. 53, 4.11).

37. திமில் உள்ள காளை (வலதுபுறம்). / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். அம்பின் இருபுறமும் சுவஸ்திகம். (கி. 160, 161, 1.50-2.80).

38. காளை (வலப்புறம்), மேலே பிறை, கீழே கலப்பை. / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம். (த.தொ.சா.2 (2002) : 2.1, 1.75).

39. குதிரை (வலப்புறம்),கோடரி பொருத்திய சூலம், மேலே டாரின் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம். (த.தொ.சா.2 (2002):2.2.1.35).

40. குதிரை (வலதுபுறம்). மேற்புறத்தில் வஜ்ராயுதம் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம். (கி 152, 1.10).

41. ஸ்ரீவத்சம், பின்புறத்தில் அம்பு பூட்டிய வில். (மி. 64, 1.61).

42. வேலியிட்ட மரம், / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (கி. 162, 1.50).

43. வட்டப்புள்ளியைச் சுற்றி நான்கு மலர் மொட்டுகள். அவற்றிடையே டாரின்கள். / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம். (கி. 163, 1.10).

44. முக்கோணக்கொடி (இந்திரத் துவஜம்), / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், வட்டப்புள்ளிகளுக்கு நடுவில். (த.கா. (2002) : 2.3, 0.85).

45. வேலியிட்ட மரம், / (பின்புறம்) அம்பு பூட்டிய வில். (மி. 63, 0.76).

### பிற்காலக் காசுகள் (கி.பி.1–2)

இக்காசுகளில் சில உருவங்கள் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளன. முக்கியமாக யானை இக்காலகட்டத்தில் சேரர்களின் சின்னமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இக்காலக் காசுகளில் யானை

உருவம் உள்ள காசுகளே அதிகம் உள்ளன காசின் மேற்புற விளிம்பில் சிறு உருவங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன இக்கால கட்டத்தில் அம்பு பூட்டிய வில் மட்டுமே உடைய காசுகள் மிகக் குறைந்தே காணப்படுகின்றன (58, 59, 65, 71) மற்ற காசுகள் யாவிலும் அம்பு பூட்டிய வில்லோடு அங்குசமும் உள்ளது காசின் எடை மற்றும் உருவங்களை அவற்றை அமைக்கும் முறையில் தேக்கம் தோன்றியுள்ளதாகத் தெரிகிறது காசுகளின் எடையில் மேலும் வீழ்ச்சி காணப்படுகிறது குறைந்த எடையோடு சிறிய காசுகள் இக்காலத்தில் அதிகமாகப் புழங்கின

46 யானை (வலப்புறம்), / (பின்புறம்) மரம், மேல்புற விளிம்பில் முக்கோணக்கொடி (கி, 136, 138, 5 70-7 50)

47 யானை (வலப்புறம்), ஈட்டி, சூலம் மேல்புற விளிம்பில் சிறிய அளவில் சில உருவங்கள் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம் இவை யாவும் புள்ளி வட்டத்தின் நடுவே உள்ளன (மி, 70, 6 30)

48 யானை (வலப்புறம்), ஈட்டி, சூலம் மேல்புற விளிம்பில் சிறிய அளவில் சில உருவங்கள் /- (மி, 67-609, 4 43-5 67)

49 யானை (வலப்புறம்), கொடிமரம், குன்றம் மேல்புற விளிம்பில் சிறிய அளவில் சில உருவங்கள் /- (மி, 65-66, 3 53-5 62)

50 யானை(வலப்புறம்), கோடரி பொருத்திய சூலம், மேல்விளிம்பில் முக்கோணக் கொடிமரம் /- (கி 118-121, 123, 3 20-5 30)

51 யானை (வலப்புறம்) வேல், சூலம், மேல்புற விளிம்பையொட்டி நட்சத்திரம், சக்கரம், ஸ்ரீவத்சம், சங்கு /- (கி 124-128, 130, 132, 2 40-5 20, த கா (2000)·2 2)

52 யானை (வலப்புறம்), ஈட்டி (?), மேற்புறத்தில் சுவஸ்திகம், ஸ்ரீவத்சம், தெளிவில்லாத சில உருவங்கள் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம், உள்ளே டாரின்கள் இவை யாவும் ஒரு வட்டத்திற்குள் உள்ளன (கி, 133-136, 2 60-4 80)

53 யானை (வலப்புறம்), தெளிவில்லாத நான்கு உருவங்கள் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், இருபக்கமும் சுவஸ்திகம் (சங் (1999) : பக் 23)

54 யானை (வலப்புறம்), கொடிமரம் (?) இவற்றில் ஒன்று வட்டக் காசு (கி, 139, 05 6) மற்றது சதுரக் காசு / (பின்புறம்) அம்பு வில் (கி 140, 4 60)

55 யானை (வலப்புறம்), சூலம், மேற்புறத்தில் சிறிய அளவில் சில உருவங்கள் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், அங்குசம், சூரியன், சநதிரன் இவை யாவும் ஒரு வட்டத்தினுள் (மி 73-76, 2 30-4 36)

56 யானை (வலப்புறம்), மேல்புறம் ஸ்ரீவத்சம் /- (கி, 122, 4 10)

57 யானை (வலப்புறம்), சூலம், மேற்புறத்தில் சில உருவங்கள் /- (மி, 80-82, 103-190, மி71-72, 3 34-3 68)

58 யானை (வலப்புறம்) கோடரி பொருத்திய சூலம், மேற்புறத்தே சுவஸ்திகம், சூரியன், ஸ்ரீவத்சம், காளை /- (கி, 128, 3 10)

59 யானை (வலப்புறம்), / (பின்புறம்) மரம், மேல்புற விளிம்பையொட்டி முக்கோணக் கொடி பின்புறத்தில் நாணேற்றிய வில் (கி 137, 2 80)

60 யானை (வலப்புறம்), கொடி மேற்புறத்தில் சில உருவங்கள் /- (மி 78-79, 2 49-2 52)

61 யானை (வலப்புறம்), சூலம், மேற்புறத்தில் சில உருவங்கள் / (பின்புறம்) அம்பு பூட்டிய வில், செங்கோல் இவை யாவும் ஒரு வட்டத்தினுள் (மி 77, 162)

62 யானை (இடப்புறம்), அதன் முன்பு சூலம் / (பின்புறம்) மரம் மேல் விளிம்பில் ஸ்ரீவத்சம், சூரியன், சங்கு (கி 129,131,2 10-3 50)

63 யானை (இடப்புறம்), அதன் முன் சூலம் மேற்புறத்தில் சில உருவங்கள் /- (மி 83-87, 157-193)

64 காளை (வலப்புறம்), சூலம், மேற்புற விளிம்பில் தெளிவில்லாத உருவங்கள் /- (கி 141, 5 00)

65 பின்னங் கால்களில் அமர்ந்தவாறுள்ள சிங்கம் அதன் இடப்புறம் ஒரு கொடி மரம், வலப்புறத்தில் தூண் மேல் நிறுத்தப்பட்ட சக்கரம் /- (கி 142, 160)

66 குதிரை (வலப்புறம்) பின்புறத்தில் அம்பு பூட்டிய வில் /- (மி 88-90, 155-183)

67 குதிரை (வலப்புறம்), தொட்டி, மேற்புறம் வளைந்த மரக்கிளை /- (கி 147-150, 00 8-160)

68 குதிரை (வலப்புறம்), கொடி மேற்புறத்தில் சிறிய உருவங்கள் /- (மி 91, 153)

69. குதிரை (வலப்புறம்) மேலே நீள்வட்டம். /- (மி. 93, 1.36).

70. குதிரை (வலப்புறம்), மேடை. /- (மி. 92, 1.12).

71. குதிரை (வலதுபுறம்) மேற்புறத்தில் வஜ்ராயுதம் / (பின்புறம்) அம்பு பூட்டிய இரண்டு வில்கள், அங்குசம். (கி. 154, 1.00).

72. குதிரை(வலதுபுறம்), மேற்புறத்தில் வஜ்ராயுதம். / (பின்புறம்) வட்டத்திற்குள் அம்பு பூட்டிய வில். (மி. 95, 0.59; கி. 153, 0,60).

73. குதிரை (வலப்புறம்). மேற்புறத்தில் சக்கரம் (?). / (பின்புறம்) வட்டத்திற்குள் அம்புபூட்டிய வில், அங்குசம். (கி. 145, 0.60).

74. குதிரை (வலப்புறம்). மேற்புறத்தில் சக்கரம் (?). /- (கி. 144, 0.40).

75. குதிரை (இடப்புறம்). தொட்டி. /- (கி. 146, 1.00).

76. குதிரை (இடப்புறம்). கொடிமரம். மேற்புறத்தில் சக்கரம். /- (கி. 143, 00.80).

77. குதிரை (இடப்புறம்). கொடிமரம். மேற்புறத்தில் ஸ்ரீவத்சம், சக்கரம். /- (கி. 151, 0.80).

78. குதிரை (இடப்புறம்). /- (கரு. (2000):2, 0.12).

79. சதுரத் தொட்டி, கீழே படுக்கை வசத்தில் மீன். /- (த.கா. (2002) : 2.4, 1.2).

### ஈயக் காசுகள்

இக்காசுகள் சிலவே கிடைக்கின்றன. பொருளாதார முடக்கம் ஏற்பட்டதால் இக்காசுகளை வெளியிட்டதாகக் கருதப்படுகிறது.

80. யானை (வலப்புறம்). மேற்புறத்தில் ஆறு முகடுள்ள குன்றம், கொடி. / (பின்புறம்) புள்ளிச் சதுரத்தின் நடுவே அம்பு பூட்டிய வில், அங்குசம். (கி. 175, 4.30).

81. குதிரை (வலப்புறம்). / (பின்புறம்) புள்ளிச் சதுரத்தின் நடுவே அம்பு பூட்டிய வில், அங்குசம். (மி. 100, 0.94).

## குறிப்புகள்

1. R. Nagaswamy, *Tamil Coins-A Study*, p.9. இக்காசுகள் யாவும் பாண்டியரால் வெளியிடப்பட்டவை என்பது தெளிவு. இவற்றின் பின்புறத்தில் பாண்டியர் இலச்சினையான மீன் உருவம் கோட்டுருவில் உள்ளது.

2 R. Krishnamurthy,. "Sangam period Chera Coins", *JNSI.*, vol.49, pp.36-38.

3 R. Nagaswamy, "Kollipurai : An Inscribed Tamil Coin of First Century A D.", D.W. Mac Dowall, Savita Sharma, and Sanjay Garg (eds.). *Indian Numismatics, History, Art and Culture*, Essays in Honour of Dr. Parameswari Lal Gupta, pp.187-191.

4 R Nagaswamy, *Roman Karur*, pp.9-13; R. Krishnamurthy, "Makkotai Coins", *SSIC*, 2, (1992), pp.89-93.

5 ஆறுமுகசீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்*, தொகுதி 1, ப15; ஆறுமுகசீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்*, தொகுதி 2, ப2; ஆறுமுகசீதாராமன், *தமிழகக் காசுகள்*, ப3 Michael Mitchiner, *The Coinage and History of Southern India*, part Two, p.72; M.T. Karunakaran, "Smallest Coin Known so far of Sangam Age Cheras", *Madras Coin Society, Special Bulletin*, vol 7, p.13.

6 Michael Mitchiner, *முன் குறித்த நூல்*, ப13

7 ஆறுமுகசீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்*, தொகுதி 1, (1994) ப15; P. Vijayaraghavan, "A Punch marked Chera Silver Coin from Karur", *SSIC.*, vol. 10. (2000). pp.28-31.; P. Vijayaraghavan, "A Further Note on the Silver Punchmarked Chera Coin from Karur", *SSIC.*, vol.11, (2001). pp.60-61.

8 R. Nagaswamy, *முன் குறித்த நூல்*, ப10

9 ஆ பத்மாவதி, "கொல்லிப்புறை காசு-ஓர் ஆய்வு", *கல்வெட்டு*, 53 (சனவரி 2000), பக்22-26

# சோழர் காசுகள்

சோழ அரசர்கள் செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களில் காசுகளை வெளியிட்டனர். இக்காசுகள் சதுரம், செவ்வக வடிவுடையவை. வட்டக் காசுகள் சிலவற்றையும் இவர்கள் வெளியிட்டுள்ளனர். இக்காசுகளின் பின்புறத்தில் முன்னங்காலை உயர்த்தியவாறுள்ள புலி உருவம் உள்ளது. இக்காசுகளில் முழு உருவமாகப் புலி பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பாகும். கரூர்-அமராவதி ஆற்றுப் படுகை, மதுரை-வைகை ஆற்றுப் படுகை, அரியலூர் ஆகிய இடங்களில் சோழர் காசுகள் கிடைத்துள்ளன.[1] சில காசுகள் காவிரிப்பூம்பட்டினக் களஆய்விலும், அகழாய்வுகளிலும் கிடைத்துள்ளன.[2] காவிரிப்பூம்பட்டினத்தில் மணிக்கிராமம், வாணகிரி ஆகிய இடங்களில் கிடைத்த காசுகளில் யானையும் பின்புறத்தில் புலியும் உள்ளன (சதுரம், செம்பு, 1.07, 0.76 கி.) தாய்லாந்து நாட்டில் குவான் லுக் பத் (Khuan Luk Pat) என்ற இடத்தில் நடைபெற்ற அகழாய்வில் ரதம் பூட்டிய குதிரையுள்ள சோழர் காசுகள் கிடைத்துள்ளன.[3]

### *முற்காலக் காசுகள் (கி.மு.2–1)*

இதுகாறும் கிடைத்த சோழர் காசுகளில் முத்திரைக் காசுகள் ஏதும் இல்லை. ஆயினும் முத்திரைக் காசுகளைப்போல பல உருவங்கள் அருகருகே அமைக்கப்பட்டுள்ள காசுகள் கிடைத்துள்ளன. இவற்றின் முன்புறத்தில் யானை, வேலியிட்டமரம், ஆறு முகடுள்ள குன்றம், நதி, காளை, மீன்கள் போன்ற முத்திரைக் காசுகளில் காணப்படும் உருவங்கள் உள்ளன. அவ் உருவங்களில் எந்த உருவத்தையும் முதன்மைப்படுத்தவில்லை. இதனால் இக் காசுகள் முத்திரைக் காசுகள் பாணியைப் பின்பற்றி வெளியிடப்பட்டன எனக் கருதலாம். இக்காசுகளில் சிலவற்றில் வேலியிட்ட மரம் தனியாக உள்ளது. இவை சற்றுப் பிற்காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம். பின்புறத்தில் புலி உருவம் எல்லாக் காசுகளிலும் உள்ளது. இவற்றில் காணப்படும் உருவங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

*(கீழே உள்ள வகைப்பாட்டில் தரப்பட்டுள்ள விவரங்களின் வரிசை: வரிசை எண், காசின் முன்புறம் உள்ள உருவங்கள். சாய்கோட்டை (/) அடுத்துப் (பின்புறம்) பின்புறத்தில் உள்ள உருவங்கள். இவற்றில் சாதாரணமாகக் காணப்படும் வலப்புறம் நின்றவாறுள்ள புலி உருவம் தரப்படவில்லை. வேறுபட்ட உருவங்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் நூல் பெயர் குறிப்பெழுத்திலும், அந்நூலில் தரப்பட்ட எண், அடுத்து எடை, கிராமிலும் தரப்பட்டுள்ளன. நீள அளவுகள் சேர்க்கப்படவில்லை. குறிப்பெழுத்துகளும் அவற்றுக்கு நேரான நூல்களும் வருமாறு : கி :* R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins*, 1997. *மி* : Michael Mitchiner, *The Coinage and History of Southern India*, part Two, 1998; *த.தொ.சா.1* (1994): *ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 1;* த.தொ.சா.2 *(2000) : ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 2;* த.கா *(2002) : ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள்).*

*1.* *யானை (வலப்புறம்), அதன் பின்புறத்தில் வேலியிட்ட மரம். யானையின் மேலே நான்கு மீன்களுள்ள சதுரத் தொட்டி. இவற்றின் கீழே மீன்களுள்ள வளைந்தோடும் நதி. மேற்புற விளிம்பின் அருகே ஆறு முகடுள்ள குன்றம் (?). (பின்புறம்) வலப்புறம் நின்றவாறுள்ள புலி. இவ் உருவம் தனி அச்சால் இடப்பட்டுள்ளது. (கி 176,* 07.10).

*2.* *யானை (வலப்புறம்), வேலியிட்ட மரம், ஆறு முகடுள்ள குன்றம். இவற்றின் கீழே மீன்களுள்ள வளைந்தோடும் நதி, மேல்புற விளிம்பில் பிறை (?) வடிவத்தைச் சுற்றி டாரின்கள், ஸ்ரீவத்சம், டாரின்கள் சூழ்ந்த சூரியன். (பின்புறம்) டாரின்களால் அமைக்கப்பட்ட சதுரக் கட்டத்தின் நடுவில், வலப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 177, 178,* 3.00-07.50).

*3.* *தும்பிக்கையை உயர்த்திய யானை (இடதுபுறம்), அதன் முன்பு குடை, வேலியிட்ட மரம். யானையின் கீழே ஆறு முகடுள்ள குன்றம். (பின்புறம்) வலப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி 188,* 07.70).

*4.* *தும்பிக்கையை உயர்த்திய யானை (இடதுபுறம்), அதன் முன்பு வேலியிட்ட மரம். யானையின் கீழே ஆறு முகடுள்ள குன்றம், மீன்கள் உள்ள நதி. (பின்புறம்) வலப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி 189,* 04.50).

5. காளை (இடப்புறம்), அதன் முன்பு குடை, வேலியிட்ட மரம். காளையின் கீழே ஆறு முகடுள்ள குன்றம். (பின்புறம்) வலப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 190, 04.60).

6. யானை (வலப்புறம்), வேலியிட்ட மரம், மீன்கள் உள்ள நதி. (பின்புறம்) முன்னங் காலை உயர்த்தி வலப்புறம் நின்றவாறுள்ள புலி. இக்காசில் முன்புற - பின்புற வில்லைகள் இரண்டும் தனித் தனியாகச் செய்யப்பட்டு ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டுள்ளன[4]. (கி. 179, 14.00).

7. வேலியிட்ட மரம், இருபக்கத்திலும் டாரின்கள். (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி, 191, 192, 00.90).

8. யானை (வலப்புறம்), அதன் மேல் குடை. (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 204, 02.80).

9. யானை (வலப்புறம்), (பின்புறம்) வலப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 205, 02.20).

10. யானை (வலப்புறம்), மேலே சிறிய உருவங்களாகக் குடை, ஈட்டி விளக்கு, கொடி. இவையாவும் புள்ளிக்கட்டத்தினுள். (பின்புறம்) புலி, மேலே சக்கரம். (த.தொ.சா.2(2002) : 3.1, 1.15).

11. யானை (வலப்புறம்), கீழே நந்திபாதம், (பின்புறம்) புலி. (த.தொ.சா.1 (1994) : 11, 1.70).

12. எட்டு சிறு உருவங்கள் (தெளிவில்லை), (பின்புறம்) புலி, வில் (?), மீன் (?). (த.தொ.சா.2 (2002) : 3.2, 1.00).

13. யானை (வலப்புறம்), அதன் மேலே சுவஸ்திகம். (பின்புறம்) முன்னங் காலை உயர்த்தி இடதுபுறம் நின்றவாறுள்ள புலி. (கி. 194, 00.50).

14. வேலியிட்ட மரம், அங்குசம், குன்றம், யானை (இடப்புறம்). (பின்புறம்) வலப்புறம் நின்றவாறுள்ள புலி. (மி. 104, 4.59).

15. யானை (இடப்புறம்), மேலே குடை. (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி, அதன் முன் வேலியிட்ட மரம். (கி. 203, 02.30).

16. யானை (இடப்புறம்), மேலே குடை. யானையின் பின்புறத்தில் இடப்புறம் நின்றவாறுள்ள குதிரை. (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 195, 197, 198, 00.80-01.50).

17. யானை (இடப்புறம்), பின்புறத்தில் நின்றவாறுள்ள குதிரை. இவற்றின் மேலே ஸ்ரீவத்சம், குடை (பின்புறம்) முன்னங் காலை உயர்த்தி இடப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி 196, 01.00).

18. யானை (இடப்புறம்), மேலே குடை. (பின்புறம்) இடப்புறம் பாய்ந்தவாறுள்ள புலி. (கி, 200, 202, 1.10-1.40).

19. யானை (இடப்புறம்), மேலே சூரியன், குடை, ஆமை. யானையின் பின்புறத்தில் வேலியிட்ட மரம். (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 207, 01.80).

20. யானை (இடப்புறம்), மேலே சூரியன், குடை. (பின்புறம்) இடதுபுறம் நின்றவாறுள்ள புலி. (கி. 206, 03.30).

21. யானை (இடப்புறம்), மேற்புறத்தில் சங்கு (?), சூரியன். /- (கி 201, 00.60).

22. குதிரை (வலப்புறம்), அதன் பின்புறத்தில் வேலியிட்ட மரம் (?) (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி. (கி. 193, 01.00).

## இடைக்காலக் காசுகள் (கி.பி.1-2)

இக்காலக் காசுகள் யாவிலும் யானை முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. யானை உருவம் வலப்பக்கம் நின்றவாறு சில காசுகளிலும், இடப்பக்கம் நின்றவாறு சில காசுகளிலும் பொறிக்கப் பட்டுள்ளது. சில வகைகளில் குதிரை பூட்டிய ரதம் போன்ற சில உருவங்கள் உள்ளன. திமில் உள்ள காளை உருவங்களும் சிலவற்றில் உள்ளன. பின்புறத்தில் முன்னங்காலை உயர்த்திய புலி உருவம் உள்ளது.

23. யானை (வலப்புறம்), குதிரை பூட்டிய ரதம். யானையின் மீதுள்ள குடை, குதிரை, ரதம் ஆகிய உருவங்கள் சிலவற்றில் தெளிவில்லாமல் உள்ளன. (பின்புறம்) இடப்புறம் பாய்ந்தவாறுள்ள புலி. இவ்வகைக் காசுகளில் ஒன்று தாய்லாந்து நாட்டு அகழாய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. (கி. 180-187, 3.50-05.60).

24. யானை (வலப்புறம்), மேலே குடை . (பின்புறம்) முன்னங்காலை உயர்த்திய புலி. (மி, 109, 04.15; கி. 208, 4.90 கி.; த.கா.(2002) : 3, 2.55).

25. யானை (வலப்புறம்), கொடி. (பின்புறம்) முன்னங்காலை உயர்த்திய புலி. (மி 110-112, 2.67-3.00).

26. யானை(வலப்புறம்). (பின்புறம்) இடதுபுறம் நின்றவாறுள்ள புலி. (மி. 113, 1.66).

27. யானை (இடப்புறம்), மேலே குடை. யானையின் முன்புறத்தில் வேலியிட்ட மரம். (பின்புறம்) இடதுபுறம் நின்றவாறுள்ள புலி. (கி, 209, 210, 1.50-02.60).

28. யானை (இடப்புறம்), அதன் பின்னால் இடதுபுறம் நின்றவாறுள்ள குதிரை. (பின்புறம்) இடதுபுறம் நின்றவாறுள்ள புலி. (மி. 105, 1.53).

29. யானை (இடப்புறம்), அதன்முன்புறத்தே தூண், மேற்புறத்தே ஸ்ரீவத்சம், குடை இவையாவும் புள்ளி வட்டத்திற்குள். (பின்புறம்) இடதுபுறம் நின்றவாறுள்ள புலி, கொடி (?). (கி. 211, 212, 213, 1.00-3.00).

30. யானை (இடப்புறம்), மேலே பூந்தொட்டி (?), குடை . (பின்புறம்) இடதுபுறம் நின்றவாறுள்ள புலி. (மி 114-118, 0.69-1.19).

31. யானை (இடப்புறம்), (பின்புறம்) இடப்புறம் நின்றவாறுள்ள புலி, அதன்முன்பு வேலியிட்ட மரம். (மி. 106, 2.15).

32. திமில் உள்ள காளை (வலப்புறம்), சுற்றிலும் டாரின்கள். (பின்புறம்) கோட்டுருவில் புலி. (இடப்புறம்). (மி. 108, 1.61).

### பிற்கால வட்டக் காசுகள் (கி.பி.3)

33. யானை (இடதுபுறம்), கொடி, மேற்புறத்தில் குடை, விளிம்பையொட்டிச் சிறு உருவங்கள். /- (மி 119-122, 1.96-3.46).

34. யானை (இடதுபுறம்), மேலே சிறு உருவங்கள். இவை யாவும் புள்ளி வட்டத்தினுள்ளே. /- (மி. 123-125, 0.54-1.13).

### ஈயக் காசுகள்

வட்ட வடிவ ஈயக் காசுகளையும் சோழர்கள் வெளியிட்டுள்ளனர். இக்காசுகளில் உருவங்கள் தெளிவில்லாமல் உள்ளன. (8.60-12.50).

35. யானை (இடப்புறம்) அதன் முன்பு தூண் (?). பின்புறம்) இடதுபக்கம் நின்றவாறுள்ள புலி. (கி 214-217, 8.60-12.50).

36. வேலியிட்ட மரம். (பின்புறம்) இடதுபக்கம் நின்றவாறுள்ள புலி. (126, 1.17).

## குறிப்புகள்

1. R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins*, p. x.; *ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி *1, ப.16; ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி *2, ப.3; ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள், ப.4*

2. K.V. Raman, "Numismatography of Tamilnadu", *JNSI*, 49, p.205.; K.V. Soundara Rajan, *Kaveripattinam Excavations 1963-73*, Archeological Survey of India, p.121.

3. P. Shanmugam, "Two Coins of Tamil Origin from Thailand", *SSIC*, 4, pp.95-101.

4. R. Krishnamurthy, *முன் குறித்த நூல், ப.129.*

# சிற்றரசர் காசுகள்

## மலையமான் காசுகள்

சங்க காலத் தமிழகத்தின் சில பகுதிகளைச் சிற்றரசர்கள் ஆண்டனர். அவர்களில் மலையமான்கள் திருக்கோவலூர் பகுதியை ஆண்டனர். இவர்கள் வெளியிட்ட காசுகள் திருக்கோவலூருக்கு அருகே ஓடும் தென்பெண்ணை ஆற்றுப்படுகையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தம் இருப்பில் உள்ள மலையமான் காசுகளை ஆய்வு செய்து 1990 இல் நூலாக வெளியிட்டார் இரா. கிருஷ்ணமூர்த்தி.[1] மலையமான் அரசர் வெளியிட்ட காசுகளில் இதுவரை கிடைத்தவை செப்புக்காசுகளே ஆகும். இவற்றில் ஒரு காசு இந்திய அருங்காட்சியகத்தில் உள்ளது. பிற காசுகள் யாவும் இரா. கிருஷ்ணமூர்த்தியின் இருப்பில் உள்ளன. மலையமான் காசுகள் மூன்றைப் பற்றி ஆறுமுகசீதாராமன் விவரம் தந்துள்ளார்.[2] இக்காசுகள் சதுரம், செவ்வக வடிவில் உள்ளன. சில காசுகள் நீள் வட்ட வடிவிலும் உள்ளன. இக் காசுகளில் முன்புறத்தில் குதிரையும் பின்புறத்தில் ஆறு, குன்றுகள் மற்றும் பிற உருவங்கள் உள்ளன. குதிரை மலையமான்களுக்கு உரியது என்பதாலும், இக்காசுகள் திருக்கோயிலூரில் கிடைத்தன என்பதாலும் இவற்றை மலையமான்கள் வெளியிட்டனர் எனக் கருதுகின்றனர். இக் காசுகள் 01.10 - 06.30 கிராம் வரை எடையுள்ளன.

## பெயர் பொறித்த காசுகள்

மலையமான்கள் வெளியிட்ட காசுகளில் மலையமான் அரசரின் பெயர் உள்ளது என்று கருதுகிறார் இரா. கிருஷ்ணமூர்த்தி. இவரது கருத்துப்படி முன்புறத்தில் வலதுபக்கம் நின்றவாறுள்ள குதிரையைச் சுற்றிச் சிதறியுள்ள பிராமி எழுத்துகளில் மலையமான், மலயமா, மலையன், காரி என்ற பெயர்கள் உள்ளன. பெயர் உள்ளதென குறிப்பிடும் இவரது கருத்துச் சரியன்று. எழுத்துகள் மேலும் கீழுமாகச் சிதறியுள்ளன. மேலும் ம போன்ற எழுத்து, தமிழ் பிராமி வடிவத்தைச் சாராதது. படுக்கை வசத்தில் உள்ள அங்குசத்தை ய எனக் கருதுவது சரியல்ல. குதிரையின் முன்புறமுள்ள தெளிவில்லாத உருவத்தை (தொட்டி ?) காரி என்று வாசிக்க இயலாது. எனவே இக்காசுகளில் பெயர் பொறிப்பு இல்லை.

## பெயர் இல்லாக் காசுகள் (கி.பி.1)

இவ்வகைக் காசுகளையே மலையமான்கள் வெளியிட்டனர் இவற்றில் குதிரை முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது சிலவற்றில் குதிரை வலப்புறம் நின்றவாறும் சிலவற்றில் இடப்புறம் நின்றவாறும் உள்ளது குதிரையோடு பிற உருவங்கள் சிறிய உருவங்களாக உள்ளன தொட்டி, அங்குசம், டாரின், பிறை, விளக்கு, நதி ஆகிய உருவங்களும் உள்ளன இவை கிபி முதல் நூற்றாண்டு வாக்கில் வெளியிடப் பட்டிருக்கலாம் இக்காசுகளில் உள்ள உருவங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்

*(கீழே உள்ள வகைப்பாட்டில் தரப்பட்டுள்ள விவரங்களின் வரிசை : வரிசை எண், காசின் முன்புறம் உள்ள உருவங்கள் சாய்கோட்டை (/) அடுத்துள்ளவை (பின்புறம்) பின்புறம் உள்ள உருவங்கள் இவற்றில் சாதாரணமாகக் காணப்படும் உருவங்கள் தரப்படவில்லை மாறுபட்ட உருவங்களே தரப்பட்டுள்ளன அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் நூல் பெயர் குறிப்பெழுத்திலும், அந்நூலில் தரப்பட்ட எண், அடுத்து எடை, கிராமில் தரப்பட்டுள்ளன நீள அளவுகள் சேர்க்கப்படவில்லை குறிப்பெழுத்துகளும் அவற்றுக்கு நேரான நூல்களும் வருமாறு : கி :* R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins*, 1997. *மி*: Michael Mitchiner, *The Coinage and History of Southern India*, part Two, 1998; *த தொ சா 2 (2000): ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி *2; த கா (2002): ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள்)*

1 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு மரம், குதிரையின் மேற்புறத்தில் அங்குசம் (வஜ்ராயுதம் ?), டாரின் (பின்புறம்) செங்கோல், நீண்ட வேல், வளைகோடு (நதி ?) நடுவில் மீன்களுக்காகப் புள்ளி படுக்கைவசத்திலும் இவை உள்ளன (த தொ சா 2, 41, 6.3).

2 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு தொட்டி, சில காசுகளில் தொட்டி தெளிவாக இல்லை மேல்புறத்தில் படுக்கைவசத்தில் அங்குசம் (?), அதன் மேல் டாரின் (? பிராமி ம ?), பிறை (பின்புறம்) மீன்கள் உள்ள நதி நதியின் அருகே சிறு குன்று (கி 218, 219, 220, 221, 2.00-4 30; மி 204, 3.75).

3 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு தொட்டி, அங்குசம் (?) மேல்புறத்தில் பிறை (பின்புறம்) நதி, குன்றம் (கி 235, 2 00).

4 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு விளக்கு (?), அங்குசம் (?) சில காசுகளில் இவைகள் தெளிவாக இல்லை (பின்புறம்) மும் முகடுள்ள மலை, மீன்கள் உள்ள நதி நதி அருகே சிறு குன்று (கி 222, 223, 231, 232, 234, 251, 2 20-6 10)

5 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு அம்பு(?) போன்ற உருவம் மேற்புறத்தில் நந்திபாதம் (பின்புறம்) மூன்று முகடுள்ள குன்றம், வளைந்தோடும் நதி (கி 229, 230, 3 00-3 10)

6 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு தொட்டி குதிரையின் மேற்புறத்தில் சூரியன், பின்புறத்தில் தூண் (பின்புறம்) மூன்று முகடுள்ள குன்றம், வளைந்தோடும் நதி, அவற்றுள் மீன்கள் (கி 236, 237, 238, 239, 240, 3 20-3 70; மி 205, 3 78)

7 குதிரை (வலப்புறம்), அதன் முன்பு தொட்டி (பின்புறம்) வளைந்தோடும் நதி, அவற்றில் மீன்கள் இவற்றில் சிறிய காசுகளும் (245, 246, 249, 250, 245, 246, 140-2 75) சற்றுப் பெரிய வகைக் காசுகளும் (241 244, 247, 3 40-4 00, மி 206, 209, 2 18-3 53) உள்ளன

8 குதிரை (இடதுபுறம்), அதன் முன்பு அங்குசம் மேற்புறத்தில் நந்திபாதம் (பின்புறம்) மூன்று முகடுள்ள குன்றம், வளைந்தோடும் நதி, அவற்றில் மீன்கள் நடுவில் சிறு குன்று (கி 224, 225, 226, 227, 228, 2 70-4 10, மி 217, 4 33)மற்றொரு வகைக் காசு அதிக எடையுள்ளது (கி 233, 610)

9 குதிரை (இடதுபுறம்), அதன் முன்பு தொட்டி (பின்புறம்) வளைந்தோடும் நதி, மீன்கள் நடுவில் சிறு குன்று நீண்ட வேல் (?) கி 243, 248 கி 242, 2 70-6 10)

10 சற்றே பெரியவை குதிரை, தொட்டி ஆகியவற்றோடு, வேல் (?) குதிரையின் மேற்புறத்தில் படுக்கைவசத்தில் அங்குசம், அதன் மேல் ஒன்றுக்குள் ஒன்றான இரண்டு வட்டங்கள் இவை சூரியனைக் குறிக்கலாம் (பின்புறம்) வளைந்தோடும் நதி, மீன்களோடு சிறு குன்று (242, 4 00)

11 சிறிய வகைக் காசுகளைச் சார்ந்தவை அங்குசம், வேல் (பின்புறம்) இரண்டு வளை கோடுகள் இவை நதியைக் குறிக்கலாம் (252, 253, 110-120)

12 ஸ்ரீவத்சம்(?), டாரின், வச்சிராயுதம் (?) (பின்புறம்) இரண்டு கோல்கள், பிறை, ஐந்து புள்ளிகள் (த தொ சா 2,42 145)

மலையமான் அரசர்கள் வட்டக்காசும் வெளியிட்டுள்ளனர். வட்டச் செப்புக் காசு ஒன்று கிடைத்துள்ளது. இக்காசில் உள்ள உருவங்களாவன:

13. நின்றவாறுள்ள குதிரை (வலப்புறம்), குதிரையின் முன் அங்குசம்(?), குதிரையின் மேல்பகுதியில் பிறை. (பின்புறம்) நதியைக் குறிக்கும் வளைகோடு, மீன்(?), குன்றம். இக்காசின் ஒருபகுதி உடைபட்டுள்ளதால் சில உருவங்கள் மறைந்தன. (த.கா. (2002), 5, 3.4).

## ஆண்டிப்பட்டி சேந்தன் காசு

செங்கம் வட்டம் ஆண்டிப்பட்டியில் (திருவண்ணாமலை மாவட்டம்) 1968இல் ஒரு புதையலில் 143 ஈயக் காசுகள் கிடைத்தன.[3] இப்புதையலில் எடுக்கப்பட்ட காசுகள் யாவும் ஒரே வகையானவை. இவை யாவும் வட்ட அச்சுக்களில் வார்க்கப்பட்ட காசுகள். இக்காசுகள் 2.32 விட்டமும் 8 கிராம் எடையும் உடையன. காசுகளில் முன் பக்கம் இணைகோடுகளும் அதன் மேலே அங்குசம் உள்ளது. இணை கோடுகளில் இருபுறமும் இரண்டு வட்டங்கள் உள்ளன. இவை சூரியன் சந்திரனைக் குறிக்கலாம். காசின் விளிம்பையொட்டித் தமிழ் பிராமி வடிவத்தில் 13 எழுத்துகள் உள்ளன. மற்ற காசுகளில் உள்ளது போன்றில்லாமல் எழுத்துகளின் தலைப்பகுதி காசின் உள்பக்கத்தை நோக்கியவாறு உள்ளது. பின்புறத்தில் மூன்று முகடுகள் உள்ள இரண்டு குன்றங்கள் இருபுறமும் உள்ளன. அவற்றின் இடையில் இரண்டு வளைகோடுகள் உள்ளன. இவை நதியைக் குறிக்கலாம்.

இக்காசைப் பொறுத்தவரையில் தமிழ் பிராமி எழுத்துகளை வாசித்தல், பொருள் அறிதல், மற்றும் காலத்தை உறுதி செய்தல் ஆகியவற்றில் எல்லாம் ஆய்வாளர்கள் மாறுபடுகின்றனர். ஆரம்பத்தில் இக்காசுகளை ஆராய்ந்த டி.வி. மஹாலிங்கம் (1970), எதிரான் பிர்தான் சேந்தன் என்று வாசித்தார்.[4] இக்காசுகளை வெளியிட்டவர் சேந்தன் என்றும் கி.பி. 2ஆம் நூற்றாண்டளவில் வெளியிடப்பட்டன என்றும் கருதினார். கேஜி.கிருஷ்ணன் (1980), அதின்னன் எதிரான சேந்தன் என்று வாசித்து, கி.பி.4ஆம் நூற்றாண்டளவில் வெளியிடப்பட்டன என்றார்.[5] ஆர். நாகசாமி (1981) தின்னன் எதிரான் சேந்தன் அ என்று வாசித்து வெளியிட்டவர் தின்னன் என்பவனின் பகையாளியான சேந்தன் என்றார். இக்காசுகளில் காணப்படும் எழுத்துகள் சுமார் கி.பி. 2-3ஆம் நூற்றாண்டு வகையைச் சார்ந்தவை. எனவே இக்காசுகள் அப்பொழுது வெளியிடப்பட்டிருக்கலாம் என்றார்.[6] இக்காசுகளை 1987இல் ஆய்ந்த

கே.வி. இராமன் இவ் எழுத்துகளை, அதினனன எதிரன சேனதன என்று வாசித்தார்.[7] இக்காசுகளை ஆய்ந்த அய். கே. சர்மா (1992), தின்னன் எதிரான சேந்தன் என்று வாசித்து இக்காசுகள் களப்பிர அரசரால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் பிற்காலச் சாதவாகனர் காசுகளின் முன்னோடியாக இருக்கலாம் என்றார்.[8] நடன காசிநாதன் (1992) சேந்தன் அதின்னன் எதிரான் என்று வாசித்து வெளியிட்டவர் சேந்தன் மகனான அதின்னன் என்றும் இவ் அரசரை எதிர்ப்போர் எவருமில்லை என்றும் கருதினார். இக்காசுகள் கி.பி. 2-3ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டவை என்றார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் (1995) இவர் தம் கருத்தை மாற்றிக்கொண்டார். இக்காசுகள் கி.மு. நான்காம் அல்லது மூன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றார்.[9] ஐராவதம் மஹாதேவன், (2003) அதின்னன் எதிரான் சேந்தன் என்று வாசித்து, அதின்னனின் வழிவந்த சேந்தன் எனப் பொருள் கொண்டார்.[10] இக்காசின் காலம் கி.பி.3ஆம் நூற்றாண்டு என்றார்.

இவ்வாறு கருத்து மாறுபாடுகள் இருப்பினும் இக்காசுகளை வெளியிட்டவர் சேந்தன் என்பது உறுதி. காசில் காணப்படும் எழுத்துகளை அதின்னன் எதிரான் சேந்தன் என்று வாசிக்கலாம். அதின்னன் எதிரான் என்ற சொற்கள் சேந்தனின் தந்தையின் பெயராகலாம். அதின்னனின் மறு வடிவமாக அதனன் என்ற பெயரைக் கொள்ளலாம். இப் பெயர் (அதனன்) அரிட்டாபட்டி கல்வெட்டில் ஆள் பெயரின் ஒரு பகுதியாக உள்ளது.[11] இக்காசுகள் ஈயக்காசுகள் என்பதாலும் தமிழ் பிராமி எழுத்துகளின் வடிவம் தொன்மையாக உள்ளதாலும் இக்காசுகள் சுமார் கி.பி.1-2 நூற்றாண்டு அளவில் வெளியிடப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.

இக்காசுகளைச் சேந்தன் வெளியீடாகக் கொண்டாலும் இப்பகுதியைச் சேந்தன் என்ற அரசர் ஆண்டதாக இதுவரை சான்றுகள் கிட்டவில்லை. ஆயினும் சேந்தன் இப்பகுதியை ஆண்ட குறுநிலமன்னராக இருக்க வாய்ப்புண்டு.

## களப்பிரர் காசுகள்

சங்க காலத் தமிழக வரலாற்றின் கடைசிக் காலப்பகுதியில் ஆண்டவர்கள் களப்பிரர். இவர்கள் யார், எங்கிருந்து வந்தனர், எவ்வாறு தமிழக அரசுகளைக் கைப்பற்றினர் போன்ற வினாக்களுக்குச் சரியான விடை தெரிந்திலது. எனினும் சங்க காலத்தின் இறுதியில் தமிழக அரசுகளை வீழ்த்திச் சிறிது காலம் தமிழகத்தை ஆண்டவர்கள்.

இவர்களும் காசுகளை வெளியிட்டதாகச் சில காசுகளை அடையாளம் காட்டுவர் சில ஆய்வாளர்கள்

களப்பிரரால் வெளியிடப்பெற்ற காசு என்று முதலில் அறிவித்தவர் (1973), எஸ் ராமையா இவரிடம் உள்ள காசுகளில் சிலவற்றில் அச்சுதவிகந்த, களபரா என்று பெயர்கள் உள்ளன என்றார் இதுவரை வெளியிடப்பட்ட காசுகள் பலவற்றை மீண்டும் ஆராய்ந்து அவையாவிலும் களப்பிரர் பெயர் உள்ளது என்றார் எலியட் வெளியட்ட காளை உருவம் உள்ள காசுகள், காவிரிப்பூம்பட்டினத்தில் கண்டெடுக்கப்பட்ட புலி உருவம் பொறித்த காசுகள், காஞ்சிபுரத்து அகழாய்வில் கிடைத்த காளை உருவம் உள்ள காசுகள், ஆண்டிப்பட்டியில் புதையலாகக் கிடைத்த காசுகள் யாவும் களப்பிரர் காசுகள் என்றார் அக்காசுகளில் களபர, அசுவிகந்த போன்ற களப்பிரரைக் குறிக்கும் சொல் பொறிப்புகள் உள்ளன என வாதித்தார் மேலும் கொங்கு நாட்டில் கிடைத்த பல காசுகளும் களப்பிரரால் வெளியிடப்பட்டவை என்று கருதினார் இக்காசுகள் நெல்லூரிலிருந்து தெற்கே இலங்கை வரை புழக்கத்தில் இருந்தன என்றார் இவற்றில் காணப்படும் அசுவிகந்த, களபர ஆகிய பெயர்கள் கி பி 4-5ஆம் நூற்றாண்டு எழுத்துவடிவில் உள்ளன[12] தற்போது இக்காசுகளை ஆய்ந்த நடன காசிநாதன், ராமையாவின் வாசகம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும் அவை மிகவும் பிற்காலத்திய காசுகள் என்றும் கருதுவர்[13]

இரா கிருஷ்ணமூர்த்தி, (1986) தம்மிடம் உள்ள ஒரு காசில் களப்பிரர் என்ற பெயர் உள்ளது என்றார்[14] இது வைகை ஆற்றுப்படுகையில் கிடைத்த சதுர வடிவச் செப்புக்காசு (20 மிமீ, 7 45 கி) இக்காசின் முன்புறத்தில் வலப்புறம் நின்றவாறுள்ள யானையும் பிராமி எழுத்தில் களபிர (Galapira) என்றுமுள்ளது என்றார் இக்காசின் பின்புறத்தில் எவ்வித உருவமும் இல்லை இக்காசில் காணப்படும் எழுத்துகள் சாதவாகன பிராமி எழுத்துகளோடு தொடர்புடையது என்றார் இக்காசு கி பி 2-3 ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டிருக்கலாம்

இக்காசை ஆய்ந்த நடன காசிநாதன், இக்காசில் அவர் குறிப்பிடும் எழுத்துகள் குறியீடுகளாகவே காணபபடுகின்றன என்றும் அவை எழுத்துகளாகத் தோன்றவில்லை என்றும் குறித்துள்ளார்[15] அண்மையில், க அ திருஞானசம்பந்தம், களப்பிரரின் இரண்டு காசுகளைப் பற்றித் தகவல் அளித்துள்ளார் ஒரு காசு மாற்றுக் குறைந்த தங்கம் என்றும் மற்றொரு காசு போடின் உலோகம் எனவும்

குறிப்பிடுவார் இக் காசுகளில் எழுத்துகள் இல்லை யானை, மீன், வில், அம்பு, புலி ஆகிய உருவங்கள் ஒரு பக்கத்திலும் மறு பக்கத்தில் கோங்க மலரும் உள்ளன இரண்டாம் காசில் வேட்டைச் சிவிங்கி, வில், மான், பன்றி, மீன் உருவங்களும், பின்புறம் தர்மச் சக்கரமும் உள்ளன இக்காசுகளில் சங்க கால மூவேந்தர் சின்னங்களைப் பொறித்துள்ளதாலும், யானை களப்பிரரின் குல மரபுச் சின்னம் என்பதாலும், புத்த சமயத்தைச் சார்ந்த களப்பிரர் தர்மச் சக்கரத்தைத் தம் காசுகளில் பொறித்துள்ளதாலும் இவை களப்பிரரால் வெளியிடப்பட்டன என்பார்[16] இவ்விரண்டு காசுகளின் தெளிவான படங்கள் இல்லையாதலால் உருவங்களைச் சரியாக அறிய இயலவில்லை மேலும் இக் காசுகளை ஊகத்தின் அடிப்படையில், களப்பிரர் வெளியிட்டனர் என்று கருத இயலாது

களப்பிரர் காசுகள் பற்றிய ஆய்வு முடிவு பெறவில்லை இக்காசுகள் பல ஆய்வாளர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை வெளியிடப்பட்ட காசு புகைப்படங்கள் தெளிவாக இல்லை இதனால் காசுகளில் உள்ள உருவங்கள் மற்றும் பெயர் பொறிப்பைச் சரியாக அறிய இயலவில்லை தற்பொழுது களப்பிரர் காசு என்று எக்காசையும் அடையாளம் காண்பது இயலாது

## குறிப்புகள்

1 இரா கிருஷ்ணமூர்த்தி, *சங்க கால மலையமான் நாணயங்கள், 1990;* R. Krishnamurthy, *Sangam Age Tamil Coins,* pp.131-148.

2 *ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி *2, ப 4; ஆறுமுகசீதாராமன், தமிழகக் காசுகள், ப 6*

3 P.N. Mohandas, "New find of Coins with Tamil-Brahmi Characters of Great Numismatic value", *The Hindu, சனவரி,* 7, 1968.

4. T.V. Mahalingam, Presidential Address, 49th Session, (1970), *Sixty Years of the Numismatic Society of India 1910-1971-* History and Presidential Addresess-1973, p.504.

5. *Annual Report on Indian Epigraphy,* 1973-74, pp.139-140; K.G. Krishnan, "Coin from the Andippatti Hoard", *Epigraphia Indica,* 40, pp.139-40.

6. R. Nagaswamy, *Tamil Coins-A Study,* (1981), pp.140-141.

7. K.V. Raman, "Numismatography of Tamilnadu", *JNSI.,* Vol. xlix, 1987, p.206.

8. I.K. Sarma, *South Indian Coinage: A Review of Recent Discoveries,* (1992), p.16.

9. *தமிழக நாணயவியல் கழகத்தின் ஆண்டுக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை, நடன காசிநாதன், தமிழர் காசு இயல், ப.19.*

10. Iravatham Mahadeven, *Early Tamil Epigraphy from the Earliest Times to the Sixth century AD.,* pp.63, 121. Table 1.6, No.13.

11. Iravatham Mahadeven, *மேலே குறிப்பிட்ட நூல், ப.325.*

12. S. Ramayya, "The Kalabhras and their Coinage", *JNSI,* 35, 1973, pp.142-145.; S. Ramayya, "A Note on Kalabhra Kootran's Coins:, *JNSI* 42, 1980, pp.18-20.

13. *நடன காசிநாதன், மேலே குறிப்பிட்ட நூல், ப.36.*

14. R. Krishnamurthy, "Kalabhra Coin with a legend", *JNSI,* 48, p.48.

15. *நடன காசிநாதன், மேலே குறிப்பிட்ட நூல், ப.36.*

16. *க. அ. திருஞானசம்பந்தம், "களப்பிரர் காசுகள்",* Madras Coin *Society,* 8, pp.20-22.

# பிறபகுதிக் காசுகள்

தமிழ் நாட்டுக்கு அப்பால் அமைந்த அண்டை அரசுகள் வெளியிட்ட காசுகள் பலவும் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன. இவைகள் புதையல், கள ஆய்வு மற்றும் அகழாய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. வட இந்தியப் பகுதிகளில் கி.மு.6 ஆம் நூற்றாண்டிலிருந்து வெளியிடப்பட்ட முத்திரைக்காசுகள், சாதவாகனர் காசுகள் யாவும் கிடைத்துள்ளன. இக்காசுகள் யாவும் வணிகத் தொடர்பால் வந்தன என்பதில் ஐயமில்லை.

## முத்திரைக் காசுகள்

இந்தியாவில் புழக்கத்தில் விடப்பட்ட மிகத் தொன்மையான காசுகள் முத்திரைக் காசுகள் வகையைச் சார்ந்தவை. இவை வெள்ளிக் காசுகள். இவற்றை உற்பத்திச் செய்யும் முறையை ஒட்டி இப்பெயர் இடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கனத்தில் தகடுகளாக அடிக்கப்பட்ட வெள்ளித் தகடுகள் தேவையான அளவு நீளக் கீற்றுக்களாக வெட்டப்படும். பின்னர், தேவையான எடைக்கு ஏற்றவாறு சிறு சிறு வில்லைகளாக இவை நறுக்கப்படும். இவ் வில்லைகள் சதுரம், செவ்வகம் வடிவங்களைப் பெறும். அதிக எடையுள்ள வில்லைகளின் முனைகள் தேவையான எடைக்குத் தகுந்தவாறு வெட்டப்படும். இதனால் இவை வட்டம், நீள்வட்டம் என்ற உருவங்களைப்பெறும். முனைகள் நறுக்கப்படுவதால் இக்காசுகளில் சில ஒழுங்கற்ற ஓரங்களைப் பெற்றுள்ளன. இவ் வெள்ளி வில்லைகள் மீது ஒவ்வொரு உருவமும் (முத்திரை) அதற்கென உள்ள தனி அச்சு மூலம் தனித் தனியாக இடப்பெறும். இவ்வாறு உருவங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இடப்பெறுவதால் இக்காசுகள் முத்திரைக் (Punch Marked) காசுகள் என்று அழைக்கப்படுகின்றன.

இக்காசுகளில் பொதுவாக ஐந்து உருவங்கள் உண்டு. உருவங்களைத் தவிர வெளியிட்டோர் பெயர் அல்லது எவ் ஆண்டில் வெளியிடப்பட்டது என்ற குறிப்பு இல்லை. இதனால் வெளியிட்டவர் மற்றும் இக்காசுகளின் காலம் ஆகியவற்றை அறிய இயலாது. இருந்தபோதிலும் பிற சான்றுகளின் அடிப்படையில் வட இந்திய அரசுகள், இனக் குழுக்கள் (Tribal), வணிகர்களால், கி.மு.6ஆம்

*நூற்றாண்டளவில் வெளியிடப்பெற்றன என்று கருதப்படுகிறது வட இந்தியாவில் கி மு 4ஆம் நூற்றாண்டளவில் பேரரசை நிறுவிய மௌரியஅரசும் இக்காசுகளை வெளியிட்டது என்று கருதப்படுகிறது இவை கி மு 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி மு 2ஆம் நூற்றாண்டு வரை வெளியிடப்பெற்றன கி மு 2ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரும் இக்காசுகள் தொடர்ந்து பல நூற்றாண்டுகள் புழக்கத்தில் இருந்துள்ளன இக்காசுகளை அக்கால வட இந்திய இலக்கியங்கள் குறிப்பிடும் கார்ஷாபண, புராண வகைகளோடு ஒப்பிடலாம்*

*தமிழ் நாட்டில் 1903ஆம் ஆண்டு முதல் இக்காசுகள் பல ஊர்களில் கண்டெடுக்கப்பட்டன[1] பெண்ணாறு (கோவை மாவட்டம்) என்ற ஊரில் முதன் முதலாக முத்திரைக் காசுகளுடன் உரோம அரசர் அகஸ்டசின் வெள்ளிக் காசுகள் புதையலாகக் கண்டெடுக்கப்பட்டன இப்புதையலைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இக் காசுகள் கண்டெடுக்கப்பட்டன மாம்பலம் (சென்னை நகரம்), தொண்டைமாநத்தம் (தென் ஆற்காடு), கணியன்குட்டை (சேலம்), தாராபுரம்(பெரியார்), சாவடிப்பாளையம் (கோயம்புத்தூர்), வேம்பாவூர் (திருச்சிராப்பள்ளி), போடிநாயக்கனூர் (மதுரை), வீரசிகாமணி (திருநெல்வேலி) ஆகிய ஊர்களில் புதையலாக இக்காசுகள் கண்டெடுக்கப்பட்டன*

*அண்மைக்காலத்தில் தமிழ் நாட்டின் பலபகுதிகளில் முத்திரைக் காசுகள் களமேற்பரப்பு ஆய்வுகளிலும் அகழாய்வுகளிலும் கிடைத்துள்ளன கரூர் (திருச்சிராப்பள்ளி), காவிரிப்பூம்பட்டினம் (தஞ்சாவூர்), கொடுமணல் (ஈரோடு) ஆகிய ஊர்களில் களமேற்பரப்பு ஆய்வுகளில் இக்காசுள் கண்டெடுக்கப்பட்டுள்ளன அழகன்குளம் (இராமநாதபுரம் மாவட்டம்), கொடுமணல் (ஈரோடு மாவட்டம்) ஆகிய ஊர்களில் மேற்கொண்ட அகழாய்வுகளிலும் இக்காசுகள் கிடைத்துள்ளன*

*கரூரில்[2] கிடைத்த இரண்டு காசுகள் ஒன்று வட்டமாகவும் மற்றொன்று சதுரமாகவும் உள்ளன வட்டக் காசில் கீழ்க்கண்ட உருவங்கள் தெளிவாக உள்ளன: 1 சூரியன், 2 காளை, 3 அம்பு குறி உள்ளிட்ட இரண்டு வட்டங்கள் (அறு முனைக் குறியாகலாம் ?), 4 இரண்டு ஆமைகளின் மீதுள்ள தட்டு போன்ற உருவம், 5 இவ் உருவம் தெளிவாக இல்லை சதுரக் காசில் உருவங்கள் தெளிவில்லாமல் உள்ளன அவற்றில் ஓர் உருவம் யானையைப் போல் உள்ளது அழகன் குளத்தில் கிடைத்த காசுகளைப் பற்றிய விவரங்கள் தெளிவில்லாமல் உள்ளன வெள்ளி, செம்பு உலோகங்களிலான இரண்டு காசுகள் கிடைத்தன அவற்றுள் உருவங்கள் தெளிவில்லை என்று குறித்து,*

வேலியிட்ட மரம் உருவம் மட்டும் காணப்படுவதாகக் காசிநாதன் குறிப்பிடுவார்[3] கொடுமணலில் இரண்டு காசுகள் கண்டெடுக்கப் பட்டன[4] களமேற்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட காசில் முன்பக்கத்தில் சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், பிறை சுமந்த மும் முகடுடைய குன்றம், யானை (?), புள்ளியைச் சுற்றி 4 டாரின்கள் உள்ளன பின்புறத்தில் உள்ள உருவங்களைச் சரியாக அடையாளம் காண இயலவில்லை அகழாய்வில் கிடைத்த காசில் முன்புறத்தில் நான்கு உருவங்கள் உள்ளன வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், 5 முகடுள்ள குன்றின் மீது நின்றவாறுள்ள நாய், காளை மற்றும் தெளிவில்லாத உருவம் உள்ளன இக்காசின் பின்புறத்தில் 5 உருவங்கள் உள்ளன என்றாலும் அவை மிகவும் சிறியதாக உள்ளதால் இனம் காண இயலவில்லை தருமபுரி மாவட்டம் நவலையில் 1989 ஆம் ஆண்டு 333 வெள்ளி முத்திரைக் காசுகள் புதையலாக கிடைத்தன[5] பெரும்பாலும் செவ்வக வடிவுடைய காசுகள் இவற்றில் இருந்தன இவற்றில் சூரியன், சக்கரம், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், குன்றம், யானை போன்ற உருவங்கள் உள்ளன பின்புறத்தில் உருவம் ஏதுமில்லை சிலவற்றில் யானை உருவம் உள்ளதாகக் கருதுகிறார் நடன காசிநாதன்

தமிழ் நாட்டில் கிடைத்த இக்காசுகளை வனஜா (1955),[6] பி எல் குப்தா (1965),[7] கிருஷ்ணமூர்த்தி (1986)[8] ஆகியோர் விரிவாக ஆய்ந்துள்ளனர் கேரளாவில் கிடைத்த முத்திரைக் காசுகளோடு, தமிழ் நாட்டில் கிடைத்த காசுகளையும் ஒப்பிட்டு, பி எல் குப்தா தம் ஆய்வை மேற்கொண்டார் அவ் ஆய்வில் மாம்பலம், வெம்பாவூர், வீரசிகாமணி, தாராபுரம், தொண்டைமாநத்தம், கவுணியன்குட்டை ஆகிய ஊர்களில் புதையலாகக் கிடைத்த காசுகளையும் சேர்த்துக் கொண்டார் இக்காசுகளை வகைப்படுத்தி அவை வெளியிடப்பட்ட காலத்தையும் நிர்ணயம் செய்துள்ளார்[9]

இந்தியாவில் கிடைத்த முத்திரைக் காசுகள் ஆறு காலகட்டங்களில் வெளியிடபபட்டன இவற்றில் முதல் இரண்டு காலகட்டத்தைச் சார்ந்த காசுகள் மகதப் பேரரசன் அஜாத சத்துருவினால் வெளியிடப்பட்டன (கி மு 552-520) தமிழ் நாட்டில் கிடைத்த காசுகளில் முதல் காலகட்டத்தைச் சார்ந்த காசுகள் கிடைக்கவில்லை இரண்டாம் கால கட்டத்தைச் (அஜாதசத்ரு, கி மு 552-520) சார்ந்த காசுகள் இரண்டு (மாம்பலத்தில் ஒன்று, வெம்பாவூரில் ஒன்று) புதையலில் கிடைத்துள்ளன இவற்றில் சூரியன், வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள், வேலியிட்ட மரம்,

வட்டத்திற்குள் அங்குசம், டாரின்கள், வலப்புறம் நின்றவாறுள்ள யானை ஆகிய ஐந்து உருவங்கள் உள்ளன.

மூன்றாம் கால கட்டத்தைச் (சிசுநாக, கி.மு.440-400) சார்ந்த காசுகள் மாம்பலம், வெம்பாவூர், வீரசிகாமணி, தாராபுரம் ஆகிய ஊர்ப் புதையல்களில் கிடைத்தன. இக்காசுகளை மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்துவார். இவ் வகைக் காசுகள் யாவிலும் சூரியன் உள்ளது. நடு வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள் எல்லாக் காசுகளிலும் உள்ளன என்றாலும் இவை காசுக்குக் காசு மாறுபட்டுள்ளன. முதல் வகையில் நாய், பனை மரம் ஆகிய உருவங்கள் உள்ளன. இவற்றோடு வட்டத்தின் இருபுறமும் டாரின்கள் சில பொறிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் வகைக் காசுகளில் ஒரு கொம்புள்ள விலங்கு, தொட்டிக்குள் நான்கு மீன்கள், யானை உள்ளன. மூன்றாம் வகையில் முதலை, தொட்டிக்குள் நான்கு டாரின்கள், யானை ஆகிய உருவங்கள் உள்ளன.

நான்காம் காலக் கட்டத்தைச் (நந்தர்கள், கி.மு.400-324) சார்ந்த காசுகள் மாம்பலம், வெம்பாவூர், வீரசிகாமணி, தாராபுரம், தொண்டைமாநத்தம் ஆகிய ஊர்ப் புதையல்களில் கிடைத்தன. இக்காசுகளை 5 பெரும் வகைகளாகப் பிரித்துள்ளார். இவ் வகைக் காசுகள் யாவிலும் சூரியன் உருவம் உள்ளது. நடு வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள் எல்லாக் காசுகளிலும் உள்ளன என்றாலும் இவை காசுக்குக் காசு மாறுபட்டுள்ளன. முதல் வகையில் ஐந்து உட்பிரிவுகள் உள்ளன. இவ் வகைக் காசுகளில் ஐந்து முகடுடைய குன்றம், ஐந்து முகடுடைய குன்றின் மேல் நின்றவாறுள்ள நாய், ஒரு சதுரத்தின் விளிம்பை ஒட்டி மாறி மாறி அமைக்கப்பட்டுள்ள வட்டம், டாரின்கள், இரு மீன்கள், தொட்டிக்குள் இரண்டு மீன்கள், காளை, மரம், ஒரு தடியில் நீளவாக்கில் இணைக்கப்பட்ட மூன்று வட்டங்கள் உள்ளன. இரண்டாம் வகைக் காசுகளில் ஐந்து முகடுடைய குன்றின் மேல் மரம், காளை ஆகியவற்றோடு யானை அல்லது வட்டப் புள்ளியின் இருபுறமும் டாரின் குறிகள் உள்ளன. மூன்றாம் வகைக் காசுகளில் ஐந்து முகடுடைய குன்றின் மீது நின்றவாறுள்ள காளை, முக்கோண வடிவக் கொடிமரம் ஆகியவைகளோடு யானை அல்லது அம்பு முனை போலுள்ள நெளிகள் உள்ளன. நான்காம் வகையில் அரை வட்டத்தினுள் மூன்று முகடுள்ள குன்றம், மீன்கள், கோபுரம் போன்ற உருவத்தினைச் சுற்றி வேல், டாரின்கள், யானை, பலவகையில் அடுக்கப்பட்டு அம்புகள், மரம் ஆகியவை உள்ளன. ஐந்தாம் வகையில் ஐந்து முகடுள்ள குன்றமோடு டாரின்கள், தொட்டிக்குள் மீன்கள், கள்ளிச் செடி ஆகியன உள்ளன.

ஐந்தாம் காலக் கட்டத்தைச் (சந்திரகுப்தர், பிந்துசாரன், கி.மு.324-232) சார்ந்த காசுகள் மாம்பலம், வெம்பாவூர், வீரசிகாமணி, தாராபுரம், கவுணியன்குட்டை ஆகிய ஊர்ப் புதையல்களில் கிடைத்துள்ளன. இக்காசுகளை 5 பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார். இவ் வகைக் காசுகள் யாவிலும் சூரியன் உள்ளது. நடு வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள் சிறு மாற்றங்களோடு இவ்வகைக் காசுகள் யாவிலும் உள்ளன. முதல் வகையில் மும் முகடுள்ள வாயில், நாய், வட்டத்தைச் சுற்றி டாரின்கள் உள்ளன. இரண்டாம் வகையில் சூலம், அதன் இருபுறமும் டாரின், நான்கு காலுள்ள மேடை, தாமரை, மரம் உருவங்கள் உள்ளன. மூன்றாம் வகையில் மீன்போன்ற உருவம், தொட்டிக்குள் 4 மீன்கள், 5 முகடுள்ள குன்றின் மீது மரம் உள்ளன. நான்காம் வகையில் மீன்கள் அருகே காளை, நடுப்புள்ளியைச் சுற்றி 4 டாரின்கள், இருபக்கம் பிளவுள்ள நீண்ட தடியின் பக்கவாட்டில் டாரின்கள் உள்ளன. ஐந்தாம் வகையில் டாரின்களைப் பக்கவாட்டில் கொண்ட காளை, ஆறுமுகடுள்ள குன்றம், வேலியிட்ட மரம் ஆகிய உருவங்கள் உள்ளன.

ஆறாம் காலக் கட்டத்தைச் (அசோகர், பிற்கால மௌரியர், கி.மு.232-187) சார்ந்த காசுகள் மாம்பலம், வெம்பாவூர், வீரசிகாமணி, தாராபுரம், தொண்டைமாநத்தம், கவுணியன்குட்டை ஆகிய ஊர்ப் புதையல்களில் கிடைத்தன. இக்காசுகளை 2 பெரும் பிரிவுகளாக வகைப்படுத்துவார். முதல் வகையில் சூரியன், நடு வட்டத்திலிருந்து வெளிப்படும் ஆறு கதிர்கள் சிறு மாற்றங்களோடு உள்ளன. மும் முகடுள்ள குன்றம், ஒரு தடியில் நீளவாக்கில் கோர்க்கப்பட்ட மூன்று வட்டங்கள் உள்ளன. இவற்றோடு யானை, கொடிமரம், சதுரத்தின் மேல் நின்றவாறுள்ள ஆள், மான், நாய், ஆள், காளை, முக்கோணக் கொடிமரம் ஆகியன உள்ளன. இரண்டாம் வகைக் காசுகளில் நான்கு உருவங்கள் உள்ளன. நின்றவாறுள்ள மூன்று ஆள்கள், சதுரத்தின் ஒரு முனையில் உள்ள மரம், யானை, அதன் கீழே சிலந்தி ஆகிய உருவங்கள் உள்ளன.

தமிழ் நாட்டு அரசுகள் இக்காசுகளை வெளியிட்டன என்பது தெளிவாகவில்லை. இக்காசுகள் யாவிலும் பின்புறம் யாதொரு உருவமும் இல்லை. மேலும் தமிழ் நாட்டில் கிடைத்த முத்திரைக் காசுகளைப் போன்று தக்காணத்திலும் வட இந்தியாவிலும் கிடைத்துள்ளன. குறிப்பாகச் சில காசுகள் குல்பர்கா, கரிம்நகர், அமராவதி, ரெய்ச்சூர் போன்ற தக்காணப் பகுதிகளில் கிடைத்த காசுகளோடு பொருந்துகின்றன. சில காசுகள் அலகாபாத், கௌசாம்பி, மதுரா, தக்ஷசீலம் ஆகிய வட இந்திய ஊர்களில்

கிடைத்த காசுகளோடும் பொருந்துகின்றன எனவே தென் இந்தியாவில் கிடைத்த இக் காசுகள் வட இந்திய மகதப் பேரரசர்களால் வெளியிடப்பட்டவை என்று பி எல் குப்தா கருதுவார் இக்காசுகள் யாவும் வட இந்தியாவில் உருவாக்கப்பட்டு, தென் இந்தியாவில் புழக்கத்தில் விடப்பட்டன தமிழ் நாட்டோடு மகதப் பேரரசு ஏற்படுத்திக்கொண்ட வணிகத் தொடர்பை இவை உறுதி செய்கின்றன[10]

இக்காசுகளைப் பொதுமக்கள் யாவரும் பயன்படுத்தினர் என்று கருத இயலாது இவை வணிகர்களிடையே புழங்கியது என்பது தெளிவு இக்காசுகள் கி மு 5 ஆம் நூற்றாண்டு வெளியீடுகளிலிருந்து கிடைக்கின்றன என்றாலும் அவை தென்னிந்தியாவில் சற்றுப் பிந்தியே புழக்கத்தில் வந்திருக்கவேண்டும் புதையல்களில் சில பிற்காலக் காசுகளோடு சேர்ந்து இவை கிடைப்பதாலும் வெளியிடப்பெற்ற காலத்திற்குப் பின்னரும் காசுகள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன என்பதாலும் இவ்வாறு கருதலாம் எனவே இக்காசுகள் தமிழகத்தில் கி மு 3 ஆம் நூற்றாண்டு வாக்கில் புழக்கத்திற்கு வந்திருக்கலாம்

## சாதவாகனர் காசுகள்

சாதவாகனர்கள் தமிழ் நாட்டின் எல்லைக்கு அப்பாலுள்ள தக்காணப் பகுதியை ஆண்டனர் இவர்கள் கி மு 2ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.2 ஆம் நூற்றாண்டு வரை அரசு செலுத்தினர் இவ் அரசர்கள் வெள்ளி, செம்பு, போடின், ஈயம் ஆகிய உலோகங்களில் பலவகைக் காசுகளை வெளியிட்டுள்ளனர்[11] இவர்கள் வெளியிட்ட சில காசுகள் தமிழ் நாட்டின் பகுதிகளில் களமேற்பரப்பு மற்றும் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன திருக்கோயிலூர், கரூர் ஆகிய ஊர்களில் இவர்கள் காசுகள் கிடைத்துள்ளன காஞ்சிபுரம், மாளிகைமேடு (பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளிலும் காசுகள் கண்டெடுக்சப் பட்டுள்ளன

திருக்கோயிலூர், கரூர் ஆகிய ஊர்களில் வாசிஸ்டி புத்ர புலுமாவியினுடைய (கி பி 78-114) காசுகள் கிடைத்துள்ளன இக்காசுகள் ஈயம்,போடின் ஆகிய உலோகங்களால் ஆனவை இவற்றில் ஒரு வகைக் காசு வட்ட வடிவுடையது (19மி மீ, 288 கி) இக்காசின் முன்புறத்தில் வலது புறம் நின்றவாறுள்ள யானையும் அதைச் சுற்றிப் பிராமி எழுத்தில் சிரி புலுமாவிச என்றும் உள்ளன இதன் பின்புறத்தில் உஜ்ஜயினி உருவம் உள்ளது இதே வகையான

மற்றொரு காசு போடின் உலோகத்தில் வெளியிடப்பெற்றது[12] இவ் அரசரின் மற்றொரு வகைக் காசு கரூரில் கிடைத்துள்ளது அக்காசு தேய்ந்துள்ளதால் உருவங்கள் தெளிவாக இல்லை ஆயினும் முன்பக்கம் பிராமி எழுத்தில் புலுமாவிச என்றுள்ளது பின்புறத்தில் உஜ்ஜயினி உருவம் உள்ளது[13]

கௌதமிபுத்ர சிரி யஜ்ஞ சாதகர்ணியால் (கி பி 167-196) வெளியிடப்பெற்ற போடின் உலோகக் காசுகள் கரூரில் கிடைத்துள்ளன இவ் வட்டக் காசின் (16 மி மீ 2 08 கி ) முன்பக்கத்தில் வலதுபுறம் நின்றவாறுள்ள யானை, அதைச் சுற்றிப் பிராமி எழுத்தில் சிரி யஜ்ஞ சாத(கர்ணி) என்ற பெயர் உள்ளது பின்புறத்தில் உஜ்ஜயினி உருவம் உள்ளது

காஞ்சிபுரம் அகழாய்வில் செப்புக் காசுகள் சில கண்டெடுக்கப்பட்டன[14] இக்காசுகள் மிகத் தேய்ந்துள்ளதால் அவற்றில் காணப்படும் உருவங்கள் தெளிவில்லாமல் உள்ளன ஆயினும் முன்புறத்தில் வலதுபுறம் நின்றவாறுள்ள யானையும் ருத்ர சதகர்ணி என்ற பெயரும் உள்ளன பின்புறத்தில் உஜ்ஜயினி குறி உள்ளது எனவே இக்காசுகள் ருத்ர சதகர்ணியால் வெளியிடப்பட்டவை

மாளிகைமேட்டில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த காசின் முன்புறம் யானையும் பின்புறத்தில் உஜ்ஜயினி உருவமும் உள்ளன காசு மிகவும் தேய்ந்துள்ளதால் மற்ற உருவங்கள் தெளிவாக இல்லை[15] பெயர் தெளிவாக இல்லையாதலால் இக்காசை வெளியிட்ட அரசரை அடையாளம் காண்பது இயலாது

இக்காசுகளேயன்றி, சாதவாகனர் வெளியிட்ட சில காசுகளில் இரு மொழி வாசகம் உள்ளது இக்காசுகளை 1 வாஸிஸ்டி புத்ர புலுமாவி, 2 வாஸிஸ்டி புத்ர சாதகர்ணி, 3 வாஸிஸ்டி புத்ர சிவ சிரீ புலுமாவி, 4 வாஸிஸ்டி புத்ர சிவ ஸ்கந்த சாதகர்ணி, 5 கௌதமி புத்ர யஜ்ஞ சிரி சாதகர்ணி, 6 வாஸிஸ்டி புத்ர விஜய சாதகர்ணி ஆகிய ஆறு அரசர்கள் வெளியிட்டுள்ளனர்[16] இக்காசுகளின் முன்புறத்தில் அரசரின் தலை, சுற்றிலும் விளிமபை ஒட்டிப் பிராகிருத மொழியில், (வட இந்திய )பிராமி எழுத்தில் அரசரின் பெயர் உள்ளது பின்புறத்திலும் பிராமி எழுத்தில் அரசரின் பெயர் உள்ளது ஆயினும் இப்பெயர் எம் மொழியில், எவ் எழுத்து வடிவில் உள்ளது என்பதை உறுதிச் செய்வதில் கருத்து மாறுபாடு உள்ளது

அரசர் தலை உருவம் பொறித்த காசுகளின் முன்புறத்தில் அரசரின் பெயர் சில வேறுபாடுகளுடன் உள்ளது சிலவற்றில்

அரசரின் உருவத்திலும் சில வேறுபாடுகள் உள்ளன. வாசிஸ்டி புத்ர புலுமாவியின் காசுகளின் பின்புறத்தில் உஜ்ஜயினி உருவம், ஆறு முகடுள்ள குன்றம், அம்புமுனை வடிவக் கோடுகள், இவற்றோடு விளிம்பையொட்டித் தமிழ் பிராமி எழுத்திலும் தமிழ் மொழியிலும் அரசரின் பெயர் அரசனுகு வாசிட்டி மகனகு திரு புலுமாவிகு என்றுள்ளது (டி.சி. சர்கார் கீழ்க்கண்டவாறு வாசிக்கிறார்: அரஹனகு வாஹிட்டி மகனகு திரு புலுமாவிகு).

பில்சா மற்றும் ஹைதராபாத் பகுதிகளில் கிடைத்த வாசிஸ்டிபுத்ர சாதகர்ணியின் வெள்ளிக் காசுகள் சிலவற்றில் இருமொழிகளில் பெயர் உள்ளது. இவை வட்டமாக, சுமார் 28 நெல்மணி எடை (கிரைன்) உள்ளன. பின்புறத்தில் மேற்புறம் பிறை சுமந்த உஜ்ஜயினி உருவம், பிறை சுமந்த ஆறு முகடுள்ள குன்றம், சூரியன் உள்ளன. இவற்றைச் சுற்றி விளிம்பை ஒட்டி உள்ள பெயர் அரசனுகு வாசிட்டி மகனகு திரு சாதாகணிகு என்றுள்ளது. இவ்வாசகத்தை அல்டேகர் (அரகச வாசிஷ்டிபுதச ஹிரு ஹாதகணிச), டி.சி. சர்கார் (அரஹணஷ வாஹிட்டிமாகணஷ திரு ஹாதகணிஷ), பி.கே. பிரசாத் (அரஹணகு வாஹிட்டி மாகணகு திரு ஹாதகணிகு), அய்.கே. சர்மா (அரஹநகு வஹிட்டி மகனகு திரு ஹாதகணிகு) ஆகியோர் பலவிதமாக வாசித்துள்ளனர். எனினும் இவ்வாசகம் தமிழ் பிராமி எழுத்திலும் தமிழ் மொழியிலும் உள்ளது தெளிவு.

வாசிஸ்டி புத்ர சிவ சிரி புலுமாவியின் ஒரு காசு துளிகட்ட அகழாய்வில் கிடைத்துள்ளது. உடைபட்ட இக்காசில் உருவங்களும் எழுத்துகளும் தெளிவாக இல்லை. பின்புறத்தில் உஜ்ஜயினி உருவத்தோடு ஆறுமுகடுள்ள குன்றம், சூரியன் ஆகியவற்றோடு, தமிழ் பிராமி எழுத்தில் அரசனுகு வாசிட்டி ம(கனகு சி ?) வ திரு புருமாவிகு என்றுமுள்ளது (டி.சி. சர்கார் கீழ்க்கண்டவாறு வாசிக்கிறார்: அரசனகு வசிட்டி மகநகு திவ (?) புருமாவிகு).

வாசிஷ்டி புத்ர சிவ ஸ்கந்த சாதகர்ணியின் காசுகளின் பின்புறத்தில் உஜ்ஜயினி உருவம், ஆறு முகடுள்ள குன்றம், சூரியன் ஆகிய உருவங்களோடு விளிம்பை ஒட்டித் தமிழ் பிராமி எழுத்தில், . . . . சிட்டி மகநகு. . . என்று பெயர் உள்ளது.

கௌதமி புத்ர யஜ்ஞ சிரி சாதகர்ணியின் காசுகளில் பின்புறத்தில் உஜ்ஜயினி உருவம், ஆறு முகடுள்ள குன்றம், சூரியன் ஆகிய உருவங்களோடு தமிழ் பிராமி எழுத்தில் அரசனகு கௌதமி புதகு சிரு யஜ்ஞ சாதகணிகு என்றுள்ளது.

வாசிஸ்டி புத்ர விஜய சாதகர்ணியின் காசுகளின் பின்புறத்தில் மற்ற காசுகளில் காணப்படும் உருவங்களோடு, (அரசனுகு வாசி)ட்டி புதகு திரு விஜய (சாதகணிகு) என்றுமுள்ளது.

இக்காசுகளில் ஏதொன்றும் தமிழ் நாட்டில் கிடைக்கவில்லை. இவை தக்காணம், மராட்டியம் ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன. ஆயினும் இக்காசுகளில் பின்புறத்தில் காணப்படும் அரசரின் பெயர் தமிழ் பிராமி எழுத்திலும், தமிழ் மொழியிலும் உள்ளதால் இக்காசுகளைத் தமிழ் நாட்டோடு தொடர்பு படுத்தலாம். இக்காசுகள் தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்தன என்று தற்போது அறிய இயலவில்லை.

இக்காசுகளின் பின்புறத்தில் காணப்படும் எழுத்து வடிவம் பற்றியும் அதன் விளக்கமும் பெரும் விவாதத்தை உருவாக்கியுள்ளன. டி.சி. சர்கார், அல்டேகர், அஜய் மித்ர சாஸ்திரி போன்றோர் தமிழ் மொழியல்ல என கருதுகின்றனர்.[17] ஐ.கே. சர்மா இவ் எழுத்து முறை ஆந்திரப் பகுதியில் நிலவிய ஒன்று; தெலுங்கு அல்லது முந்து திராவிட மொழியாகலாம் என்பார்.[18]

இக்காசுகளில் இரண்டு அரசர்களின் காசுகளை முதலில் ஆராய்ந்தார் நாகசாமி. பின்னர் பிற காசுகளில் உள்ள பெயர்களையும் வாசித்தார். இவரது கருத்துப்படி, பின்புறத்தில் உள்ள எழுத்துக்கள் தமிழ் பிராமி வடிவிலும் தமிழ் மொழியிலும் உள்ளன (அரசனகு வாசிட்டி மகனகு திரு சாதகணிகு). மற்ற அரசர்களின் காசுகளிலும் அவ்வாறே உள்ளன என்றார்.[19] பின்னர் ஆய்வு செய்த சோமசுந்தரமும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்பு உண்டு என்றும் இவை தமிழ் அல்லது முந்து திராவிட (Proto Dravidi) மொழியாக இருக்கலாம் எனவும் கருதுவார்.[20]

இக்காசுகள் தமிழ் நாட்டின் வடபகுதிகளில் கிடைத்துள்ளன. இதனால் இப்பகுதி சாதவாகனரின் ஆட்சியின் கீழ் வந்தது என்று கருதுகின்றனர்.[21] இக்காசுகள் கிடைக்கின்ற காரணத்தினாலேயே இவ்வாறு கருத இயலாது. காசுகள் மற்ற நாட்டுக் காசுகள் போலவே வணிகத்தின் பொருட்டு வந்திருக்கலாம். சாதவாகனர் ஆட்சிக்குட்பட்டதாகத் தக்க சான்றுகள் மூலம் உறுதியாகவில்லை.

இந்தியாவின் முத்திரைக் காசுகள் கி.மு.3-1 நூற்றாண்டுகளில் வெளியிடப்பெற்றவை. சாதவாகனர் காசுகள் கி.பி.1-2 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. இக்காசுகளை எவ்வாறு வணிகர்கள் ஏற்றுக் கொண்டனர் என்று யூகிக்கலாம். வெள்ளி, தங்கம் போன்ற

மதிப்பு மிக்க உலோகங்கள் அன்றைய உலோக மதிப்பை ஒட்டிச் செலாவணியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் ஆயினும் மாற்று மதிப்புத் திட்டம் ஒன்று அக்காலத்தில் வணிகர்களிடையே வழக்கில் இருந்திருக்கலாம் இக்கருத்தை மற்ற சான்றுகளோடு ஒப்பிட்டு ஆய்தல் வேண்டும்

## குறிப்புகள்

1 இக்காசுகள் கிடைத்த ஊர்களின் பட்டியல் கீழ்க்கண்ட நூல்களில் வெளியிடப்பட்டுள்ளன R Champakalakshmı, *Trade, Ideology and Urbanızatıon-South Indıa 300 BC to AD 1300,* Oxford, 1996, p 157, R Krıshnamurthy, "Coın Cırculatıon ın Ancıent Tamıl Regıon, c 400 B C - c 600 A D" *JNSI*, 58 (1996), p 12 *அகு 9*

2 R Nagaswamy, *Roman Karur,* p 28

3 *மேலது, ப,74,* Abdul Majeed, D Thulsıraman, S Vasanthı, *Alagankulam-A Prelımınary Report,* (1992) p 15

4 K Rajan, "A Chronologıcal Note on the Punch Marked Coıns of Tamılnadu", *SSIC*, Vol 1 (1991) p 17-22

5 Natana Kasınathan, "Punch Marked Coıns of Atıya County", *JNSI,* 51 (1989), pp 93-94

6 R Vanaja, "The Madras Museum Collectıon of Punch-Marked coıns, A study", M Lıtt Thesıs (unpublıshed), Unıversıty of Madras Chennaı, 1955

7 Parameswarı Lal Gupta, *The Ealry Coıns From Kerala,* 1965, pp 1-45

8 *இரா கிருஷ்ணமூர்த்தி, சங்க காலச் சோழர் நாணயங்கள், சென்னை, பக் 20-34*

9 Parameswarı Lal Gupta, *முன்னே குறித்தநூல், பக் 1-45*

10 *மேலது* P V Radhakrıshana, "Chronology of Sılver Punch Marked Coıns ın South Indıa", *SSIC*, Vol 8 (1998) pp 27-34

11 I K Sarma, *Coınage of the Satavahana Empıre,* New Delhı, 1980, Mala Dutta, *A Study of the Satavahana Coınage,* New Delhı, 1990

12 Mıchael Mıtchıner, *முன்னே குறித்த நூல், ப 82,* No 149, 151

13 R Nagaswamy, *முன்னே குறித்த நூல், ப 33*

14 K V Raman, "Terracotta figurines and other objects from Kanchipuram Excavations-1962", - - - , *Journal of Indian History,* 14, (1967), p 506, - - - *JNSI* , 29 , p 23, *யானை இடப்புறம் நோக்கியவாறுள்ளது என்கிறார் மாலா தத்தா* Mala Dutta, *முன்னே குறித்த நூல், ப,188*

15 S Vasanthi, "Coins from the Excavations at Maligaimedu, Tamil Nadu", *SSIC* , Vol 13 (2003) pp 69-70, Coin No 2 *இக்காசைப் பதிப்பித்தவர்கள் முன்புறத்தைப் பின்புறம் என்றும் பின்புறத்தை முன்புறம் என்றும் மாற்றிப் பதிப்பித்துள்ளனர்*

16 I K Sarma, *முன்னே குறித்த நூல், பக்118-119, 274-286* R Nagaswamy, *Tamil Coins A Study,* pp 132-139 , Mala Dutta, *முன்னே குறித்த நூல், பக்55 56*

17 A S Altekar, "The Reverse Legend on the New Silver Coin of Vasisitiputra Satakarni", *JNSI,* 21, (1958), p 13 , D C Sircar, "Silver Coins of Vasistiputra Satakarni", *Epigraphia Indica,* 35, (1965), p 247

18 I K Sarma, *முன்னே குறித்த நூல், பக்118-119, 274-286*

19 R Nagaswamy, "A Bilinqual Coins of A Satavahana", *Seminar on Inscriptions,* Chennai, 1968, pp 200-202, R Nagaswamy, " A Bilingual Coins of Vasisthiputra Siva Siri Pulumavi", *Journal of Archaeology, in Andhra Pradesh,* Vol I, 1985, pp 105-113 , *முதலில் அரசனச வாசிட்டி மகனச திருசாதகணிச என்று வாசித்தார் பின்னர் அரசனகு வாசிட்டி மகனகு திருசாதகணிகு என்று திருத்திக் கொண்டார்* R Nagaswamy, *Tamil Coins A Study,* pp 132-139

20 C Somasundara Rao, "A Note on Bilingual Legends on Satavahana Coins", *SSIC* , 7 (1997), pp 17-22

21 Michael Mitchiner, *முன்னே குறித்த நூல் ப 82,* No*149, 151*

## பட்டியல் 1

### தமிழ் நாட்டில் வெள்ளி முத்திரைக் காசுகள் கிடைத்த இடங்கள்

| வரிசை எண் | ஊர் | மாவட்டம் | ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அழகன் குளம் | இராமநாதபுரம் | | ? |
| 2 | ஆலம்பாளையம் | கோயமுத்தூர் | 1948 | 63 |
| 3 | உத்தமபாளையம் | மதுரை | 1978 | 278$ |
| 4 | கரூர் | கரூர் | | 1+* |
| 5 | கவுணியன்குட்டை | சேலம் | 1956 | 17 (14$) |
| 6 | கொடுமணல் | ஈரோடு | | 2 |
| 7 | கொளத்தூர் | திருச்சிராப்பள்ளி | | 346 |
| 8 | கோயமுத்தூர் | கோயமுத்தூர் | | 3 |
| 9 | கோயமுத்தூர் | கோயமுத்தூர் | | ? |
| 10 | சாவடிபாளையம் | கோயமுத்தூர் | | ?* |
| 11 | சேவல்பட்டி | ? | 1976 | 18$ |
| 12 | தயிராபாளையம் | கோயமுத்தூர் | 1960 | 193 |
| 13 | தொண்டைமாநத்தம் | கடலூர் | 1958 | 27* (10$) |
| 14 | நவலை | தருமபுரி | 1988 | 355$ |
| 15 | நெடுமங்கலம் | இராமநாதபுரம் | | 212 |
| 16 | பெண்ணார் | கோயமுத்தூர் | | ?* |
| 17 | பெரியமாம்பட்டு | ? | 1957 | 84$ |
| 18 | போடிநாயக்கனூர் | மதுரை | 1941 | 1138# (1126$) |
| 19 | மதுரை (செ) | மதுரை | 1956 | 7+# |
| 20 | மாம்பலம் | சென்னை | 1929 | 770* |
| 21 | வக்கம்பாளையம் | ? | 1961 | 48$ |
| 22 | வீரசிகாமணி | திருநெல்வேலி | 1952 | 287 |
| 23 | வெம்பாவூர் | திருச்சிராப்பள்ளி | 1949 | 991 (116$) |
| 24 | வெள்ளனூர் | | 1972 | 386$ |

* ரோமானியக் காசுகளும் உள்ளன.

\# பாண்டியர் காசுகள்

$ கிருஷ்ணமூர்த்தியின் பட்டியல்

செ செம்பு

# வெளிநாட்டார் காசுகள்

வெளிநாட்டுக் காசுகள் பலவும் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன. முக்கியமாக உரோமானியக் காசுப் புதையல்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் தவிர பண்டைய கிரேக்க நாடுகள், மற்றும் மத்திய தரைக்கடல் சார்ந்த நாடுகளின் காசுகளும் அண்மைக்காலத்தில் கிடைத்துள்ளன. இவையாவும் வணிகத் தொடர்பால் வந்தன என்பதில் ஐயமில்லை.

## உரோமானியர் காசுகள்

கடந்த 200ஆண்டுகளாக உரோமானியக் காசுகள் தமிழகத்தின் பல ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான காசுகள் புதையலாகக் கிடைத்தவை. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகப் புதையல்களும் அதிக எண்ணிக்கையில் உரோமானியக் காசுகளும் கிடைத்துள்ளன. களமேற்பரப்பு ஆய்வுகளிலும் சிலகாசுகள் கிடைத்துள்ளன.

கோயமுத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த பொள்ளாச்சியில் 1800 ஆம் ஆண்டு முதன்முதலாக ரோமானியக் காசுப்புதையல் கண்டெடுக்கப் பட்டது. இப்புதையலைத் தொடர்ந்து கோயமுத்தூர், கரூர், உதகமண்டலம், திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உரோமானியக் காசுப் புதையல்கள் கண்டெடுக்கப் பட்டன. இருபதாம் நூற்றாண்டில் ஏறக்குறைய 20 இடங்களில் உரோமானியக் காசுப் புதையல்கள் கண்டெடுக்கப்பட்டன. இக்காசுப் புதையல்கள் பெரும்பாலும் கொங்கு நாட்டுப்பகுதியில்தான் (கோயமுத்தூர், ஈரோடு, கரூர், சேலம், தருமபுரி மாவட்டங்கள்) அதிகமாகக் கிடைத்துள்ளன. அண்மைக் காலங்களில் சொறையப்பட்டு, உத்தமபுரம், திருப்பூர் ஆகிய ஊர்களிலும் உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன.[1] கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலான காசுகள் கிடைக்கின்றன. இவற்றில் சங்க காலத்தோடு தொடர்புபடுத்தத்தக்க கி.பி.300ஆம் ஆண்டுவரையிலான உரோமானியக் காசுகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. உரோமானியக் காசுகள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி, தென்னகப் பகுதிகளான

கேரளம், கருநாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் கிடைத்துள்ளன

தமிழ் நாட்டில் உரோமானியக் காசுகள் கிடைத்த காலந்தொட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன பிடே, ராபர்ட் சூவெல், டி ஜி ஆராவமுதன், மார்டிமர் வீலர், பி எல் குப்தா, பாலா ஜே டர்னர், கே வி இராமன், ஆர் சம்பகலக்ஷ்மி[2] ஆகிய பலர் ரோமானியக் காசுகளைப் பட்டியலிட்டு ஆய்ந்துள்ளனர் இக்காசுகளின் பட்டியல் இறுதியில் தரப்பட்டுள்ளது

உரோமானியக் காசுகளில் வெள்ளிக் காசுகள் (denarius) கி.மு.31 முதல் கிடைக்கின்றன இக்காசுகள் பெரும்பாலும் அகஸ்டஸ் (Augustus), டைபீரியஸ் (Tiberius) ஆகிய இரு அரசர்களால் வெளியிடப்பட்டவை இவை 3 5-4 கி வரை எடையுள்ளவை நீரோ (Nero, 41-54) காலத்திய வெள்ளிக்காசுகள் ஏதும் கிடைக்கவில்லை தங்கக் காசுகள் (aureus) அகஸ்டஸ் காலம் முதல் கிடைக்கின்றன டைபீரியஸ் கிளாடியஃஸ் (Claudius), நீரோ, வெஸ்பேசியந் (Vespasian), ஹாட்ரியன் (Hadrian) மற்றும் கரகல்லா (Caracalla, 198-217) வெளியிட்ட காசுகள் யாவும் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன இக்காசுகள் 7-8 கிராம் எடையுள்ளவை

தமிழ் நாட்டில் கிடைத்த உரோமானியக் காசுகளில் மிகத் தொன்மையானவை உரோமானியக் குடியரசு வெளியிட்ட காசுகளாகும் தினார் எனப்படும் வெள்ளிக்காசுகள் மூன்று கிடைத்துள்ளன சி நெவியோ பல்புஸ் (C Naevius Balbus) என்ற காசு வெளியீட்டாளரால் (moneyar) கி மு 79 இல் வெளியிட்ட ஒரு காசு கிருஷ்ணகிரியில் கண்டெடுக்கப்பட்டது இக்காசின் முன்புறத்தில் வீனஸ் தேவியின் தலையுள்ளது மறுபுறத்தில் விக்டோரிய தேவி ஓட்டும் மூன்று குதிரைகள் பூட்டிய ரதம் உள்ளது[3] இரண்டாவது காசு கல்லகிணர் புதையலில் 1909 ஆம் கண்டெடுக்கப்பட்டுள்ளது இக்காசு கி மு 55ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது முன்புறத்தில் புவன் (Buon) தலை உருவமும் பின்புறத்தில் நின்றவாறுள்ள பருந்தும் அதன் கீழே Q CASSIVS என்ற வாசகமும் உள்ளது[4] மூன்றாம் காசு (திருப்பூர்) ஜூலியஸ் சீசரால் கி மு 46ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது இக்காசின் முன்புறத்தில் சீசரின் தலையோடு DICTITER COS TERT என்ற வாசகம் உள்ளது பின்புறத்தில் கரண்டி, ஜாடி, மந்திரக்கோல் முதலியவை உள்ளன இவற்றோடு PONTMAX AVGVR என்ற வாசகம் உள்ளது[5]

உரோமானியப் பேரரசு காலக் காசுகள் அதிக அளவில் கிடைத்துள்ளன அவற்றில் அகஸ்டஸ், டைபீரியஸ் ஆகியோரின்

காசுகளே அதிகம். இவர்கள் வெளியிட்ட ஆரே (தங்கம்), தினார் (வெள்ளி) காசுகள் கிடைத்துள்ளன. கயஸ் (Gaius), கிளாடியஸ், நீரோ ஆகியோரது தங்கம் வெள்ளிக் காசுகள் கிடைத்துள்ளன. மற்ற அரசர்களில் வெஸ்பேசியன் டோமிதியன் (Domitian), ஹாட்ரியன், அந்டோநிநஸ் பயஸ் (Antoninus Pius), மார்க்கஸ் ஆரேலியஸ் (Marcus Aurelius), செப்திமியஸ் செவெரெஸ் (Septimius Severus), கரகல்லா ஆகியோரது காசுகள் குறைந்த அளவிலும் கிடைத்துள்ளன.

அகஸ்டசின் (கி.மு.31-கி.பி.14) தங்கம், வெள்ளிக் காசுகள் அதிகம் கிடைத்துள்ளன. இக்காசுகள் சி எல் சீசர் (C L CAESARES) அல்லது இரண்டு சீசர் காசுகள் எனப்படுகின்றன. இக்காசுகளின் முன்புறத்தில் வீனஸ், அப்போலோ, அகஸ்டஸ் தலை உருவம் உள்ளன. சில காசுகளில் பெயர் பொறிக்கப்படவில்லை. மற்றவற்றில் கீழ்க்கண்ட பெயர்களும் பட்டங்களும் உள்ளன.

DIVIF
CAESAR AVGVSTVS
CAESAR AVGVSTVS DIVI F PATER PATRIAE
IMP CAESAR AVGVST

இக்காசுகளின் பின்புறத்தில் அக்ரிப்ப (Agrippa), அப்போலோ (Appollo), டயான (Diana), வீனஸ் (Venus), அமர்ந்தவாறுள்ள அகஸ்டஸ், எட்டுக் கதிர்களையுடைய நட்சத்திரம், காளை போன்ற உருவங்களில் ஏதேனும் ஒன்று உள்ளது. அவ் உருவங்களைச் சுற்றிக் கீழ்க்கண்ட பெயர்களும் பட்டங்களும் உள்ளன.

AVGVSTVS,
MARTVLT,
PONTIF MAXIM,
IMP CAESAR,
DIVVS IVLIVS,
CEASAR DIVIF

டைபீரியஸின் (கி.பி.14-37) தங்கம், வெள்ளிக் காசுகள் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன. இக்காசுகள் போந்டிப் மாக்சிம் (PONTIF MAXIM) என்ற வகையைச் சார்ந்தவை. இவை கிபி. 14-37 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இவற்றில் எல்லாம் முன்புறத்தில் டைபீரியசின் தலையும் அதைச் சுற்றி TI CAESAR DIVI AVG F AVGVSTVS என்று பெயர் உள்ளது. பின்புறத்தில் அகஸ்டசின் தலை, அமர்ந்த நிலையில் ஒரு பெண் கடவுள், நான்கு குதிரை பூட்டிய தேரில் டைபீரியஸ்

ஆகிய உருவங்கள் உள்ளன. அவ் உருவங்களைச் சுற்றிக் கீழ்க்கண்ட பெயர்களும் பட்டங்களும் உள்ளன.

DIVOS AVGVST DIVI F
PONTIF MAXIM
TR POT 16 TR POT XVI
TR POT 16 TR POT XVII
IMP VII

கிளாடியஸ் (கி.பி.41-54) அரசரது காசுகள் தங்கம், வெள்ளியில் கிடைத்துள்ளன. இவரது காசுகளில் முன்புறத்தில் அந்டோநியாவின் (Antonia) தலை, நீரோ கிளாடியஸ் ட்ருசசின் (Nero Caludius Drusus) தலை, நீரோவின் தலை, கிளாடியசின் தலை ஆகியோரின் உருவங்களோடு கீழ்க்கண்ட பெயர்கள் உள்ளன.

ANTONA AVGVSTA
NERO CLAVDIVS DRVSVS GERMANICVS IMP
NERO CLAVID CAES DRVSVS GERM PRINC
IVVENT
TI CLAVD CAESAR AVG PM TR P

பின்புறத்தில் அக்ரிப்பினாவின் தலை, நின்றவாறுள்ள அந்டோநியோ, மலர் வளையம், கேடயம், நீரோ கிளாடியோ ட்ருசசின் தலை போன்ற உருவங்களோடு கீழ்க்கண்ட வாசகங்கள் உள்ளன.

AGRIPINAE AVGVSTAE
CONSTANTIAE AVGVSTI
PRAETOR RECEPT
IMPER RECEPT,
SPQR PP OB CS
PACI AVGVSTAE.

உரோமானியக் காசுகளில் போலிக் காசுகள் பல கிடைத்துள்ளன. இக்காசுகள் இந்தியா முழுவதிலும் கிடைத்துள்ளன. தமிழ் நாட்டிலும் ரோமானியப் போலிக்காசுகள் கிடைத்துள்ளன. மாற்றுக் குறைந்த உலோகத்தில், ஒரு அரசரின் காசில் உள்ள முன் பக்க உருவத்தையும் மற்றொரு அரசர் காசில் உள்ள பின்பக்க உருவத்தையும் இணைத்து ஒரே காசில் பொறித்தல். இவ் வகைப் போலிகள் பல சொறையப்பட்டு புதையல் காசுகளில் உள்ளன. டைபீரியஸ் (14-37) காசின் முன்பக்கம் ட்ரோஜன் (98-117) காசின் பின்புறத்தோடு உள்ளது.

அதேபோல் நீரோவின் முன்பக்கம் ட்ரோஜனின் பின்புறத்தோடு உள்ளது.[6]

தமிழ் நாட்டில் கிடைக்கும் உரோமானியக் காசுகள் பலவற்றில் வெட்டுக்குறி உள்ளது. பொதுவாக இவ் வெட்டுக் குறி, காசின் முன்புறத்தில் உள்ள தலைப்பகுதியில் காணப்படுகிறது. அகஸ்டஸ் முதல் நீரோ அரசர்கள் வெளியிட்ட காசுகளில் இவ் வெட்டுக் குறியைக் காணலாம். புதுக்கோட்டை, தொண்டைமாநத்தம், கலையம்புத்தூர் ஆகிய ஊர்ப் புதையல்களில் கிடைத்த காசுகளில் இவ் வெட்டுக் குறி உள்ளது. வெட்டுக்குறி இடுவதன் நோக்கம் பற்றி ஒருமித்த கருத்து இல்லை. சிலர் தங்கத்தின் தூய்மையைப் பரிசோதனை செய்வதற்காக இடப்பட்ட குறி என்பர். வேற்று நாட்டுக் காசைச் செலாவணியிலிருந்து தடுக்கவே இக்குறி இடப்பட்டது என்றும் வாதிடுவர்.

மாற்றுக் குறைந்த உலோகம், பிற உலோகங்கள், ஈயம், சுடுமண் ஆகியவற்றால் வெளியிடப்பெற்ற போலிக் காசுகளும் உண்டு. இப்போலிக் காசுகள் பழங்காலத்திலேயே புழக்கத்தில் இருந்துள்ளன. உரோமானியக் காசுகளின் மதிப்பை அறிந்த சிலர் அக்காலத்திலேயே போலிகளை உருவாக்கிப் புழக்கத்தில் விட்டிருக்கலாம்.

தென்னிந்தியாவுடன் ஏற்பட்ட வணிகத் தொடர்புகளால் இக்காசு பரிவர்த்தனை ஏற்பட்டது. சங்க இலக்கியங்கள் உரோம் நாட்டுடனான வணிக உறவுகளை உறுதிப்படுத்தும். தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் உரோமானியப் பொருள்களும் கிடைத்துள்ளன. ஆம்பொரா (மது சாடி), ரௌலடெட், அரிடைன் மண்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இவைகள் அக்காலத்தில் உரோம நாட்டுடன் ஏற்பட்ட வணிக உறவுகளை உறுதிப்படுத்தும். இக்காசுகள் வெளியிடப்பட்ட காலத்திலேயே தமிழ் நாட்டில் செலாவணிக்கு வந்தன என்று உறுதி செய்ய இயலாது. பெருமளவு காசுகள் புதையலாகக் கிடைத்துள்ளதால் ஒவ்வொரு புதையலிலும் பல அரசர்கள் காசுகள் கலந்து கிடைப்பதாலும் எக்காலத்தில் இக்காசுகள் தமிழ் நாட்டை வந்தடைந்தன என்று தெளிவுபடுத்திக்கொள்ள இயலவில்லை. பொதுவாகக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் தினாரும் (வெள்ளிக் காசுகள்), மூன்றாம் நூற்றாண்டில் ஆரேயும் (தங்கக் காசுகள்) தமிழ் நாட்டில் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. புதையல்களை ஆய்ந்து இக்கருத்து தரப்பட்டுள்ளது. ஆயினும் தென்னகப் பகுதிகளில் குறிப்பாகத் தமிழ் நாட்டோடு ஏற்பட்ட வணிக உறவுகள், அகழாய்வுச் சான்றுகள் ஆகியவற்றை ஒப்புநோக்கி ஆய்ந்தால் இக்காசுகள் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டை அடைந்ததற்கான வாய்ப்புகள் உள்ளமை புலப்படும்.

### கிரேக்க, பிற நாட்டுக் காசுகள்

தென் இந்தியாவில் கிரேக்க (Greece), மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளைச் சார்ந்த அரசுகளின் காசுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலும் அண்மைக்காலங்களில் இப் பகுதியைச் சார்ந்த காசுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் கி.மு.3-1 நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டவை. வணிக நோக்கில் இக்காசுகள் தமிழ் நாட்டில் கொண்டுவரப்பட்டன. இக்காசுகள் பெரும்பாலும், கரூர், அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்தவை. மத்திய தரைக்கடல் நாடுகளின் காசுகள் தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்ற தகவலை இரா. கிருஷ்ணமூர்த்தி 1990இல் வெளியிட்டார். பின்னர் இவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். இக்காசுகள் யாவும் இரா. கிருஷ்ணமூர்த்தியின் இருப்பில் உள்ளன.

இன்றைய கிரேக்க நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது திரேஸ் (Thrace). இப் பகுதியைச் சார்ந்த ஒரு செப்புக் காசின் (13 மி.மீ) முன்புறத்தில் ஹெர்மேயஸ் (Hermes) தலையும் பின்புறத்தில் கடுசஸ் (Caducceus) எனப்படும் ஹெர்மேயசின் கைத்தடியும் உள்ளது. இக்காசு கி.மு. 350இல் வெளியிடப்பட்டது.[7]

கிரேக்க (Greece) நாட்டைச் சார்ந்த நான்கு காசுகள் கிடைத்துள்ளன.[8] இக்காசுகள் யாவும் செப்புக் காசுகள். இவை 10-13 மி.மீ அளவுடையன. முதல் வகைக் காசின் முன்புறத்தில் ஹெராக்கிளிசின் (Herakles) தலையும், பின்புறத்தில் நீண்ட தடியும் கீழ்க்கண்ட எழுத்துகளும் உள்ளன : EPY

இக்காசுகள் கி.மு.338 ஆண்டு வாக்கில் வெளியிடப்பட்டிருக்கலாம். இரண்டாம் வகைக் காசின் முன்புறத்தில் ஹெராக்ளிசின் தலையும், பின்புறத்தில் தடியும் தெளிவில்லாத எழுத்துகளும் உள்ளன. இக்காசைப் பேரரசன் அலெக்சாண்டர் வெளியிட்டிருக்கலாம். மூன்றாம் வகைக் காசின் முன்புறத்தில் ஓராளின் தலையும் (ஹெராக்ளிசு ?) பின்புறத்தில் நின்றவாறுள்ள சிங்கம், அதன் மேற்புறத்தில் தெளிவில்லாத சில எழுத்துகள் உள்ளன. இக்காசு கி.மு. 3ஆம் றூற்றாண்டில் வெளியிடப்பட்டது.

பாரசீக வளைகுடாவின் வட பகுதி பண்டைக்காலத்தில் மெசபொடேமியா (Mesoptamia- இன்றைய ஈராக் நாடு) என்று அழைக்கப்பட்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் செலுசிட (Selucid) அரசு ஏற்படுத்தப்பட்டது. இந்நாட்டை ஆட்சி செய்த செலூக்கஸ் (Selucus -கி.மு. 246-226) வெளியிட்ட 10 காசுகள்

கிடைத்துள்ளன. இக்காசுகள் யாவும் வெண்கலத்தால் ஆனவை. சுமார் 10-11 மி.மீ விட்டம் உடையவை. முதல் வகைக் காசுகளின் முன்புறத்தில் கிரேக்க தேவதை அதீனா (Athina) உருவம் உள்ளது. பின்புறத்தில் நின்றவாறுள்ள அப்போலோ உருவம் உள்ளது. இரண்டாம் வகைக் காசுகளில் செலுகஸ் அரசரின்தலை உள்ளது. பின்புறத்தில் நின்றவாறுள்ள அப்போலோ உருவம் உள்ளது. இக்காசுகளில் இரண்டு காசுகள் டைகிரிஸ் (Tigris) ஆற்றுக் கரையில் அமைந்த செலுசியா (Selucia) நகரத்தில் அச்சிடப்பட்டவை எனத் தெரிகிறது.[9]

கிரேக்க நாட்டிற்குத் தெற்கே, மத்தியத் தரைக் கடலில் அமைந்துள்ளது கிரீட் (Crete) என்ற பெருந்தீவு. இப் பகுதியைச் சார்ந்த ஒரு செப்புக் காசின் (17 மி.மீ) முன்புறத்தில் ஓர் ஆளின் தலையும் (அப்போலோ ?) மறுபுறத்தில் நின்றவாறுள்ள காளையும் பொறிக்கப் பட்டுள்ளன. இக்காசுகள் கி.மு.200-67 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. கிரீட் தீவுக்கு மேற்கே உள்ளது ரோட் (Rodos) தீவு. இத்தீவைச் சார்ந்த இரண்டு செப்புக் காசுகள் கிடைத்துள்ளன. அவை 10-11 மி.மீ. விட்டம் உடையன. அவற்றில் முன்புறத்தில் ஹெலியாஸ் (Helios) தேவியின் தலை பின்புறத்தில் சதுரக் குழிவில் ரோஜா மலர் உள்ளன. இக்காசுகள் கி.மு.166-88 இல் வெளியிடப்பட்டன.[10]

பண்டைய கிரேக்கத்தின் மத்தியப்பகுதியில் அமைந்துள்ளது தெஸ்ஸாலி (Thessaly). இப்பகுதியைச் சார்ந்த ஒரு செப்புக் காசின் (11 மி.மீ.) முன்புறத்தில் ஜீயஸ் (Zeus) தலையும் பின்புறத்தில் நின்றவாறுள்ள குதிரையும் உள்ளன. இக்காசு கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம்.[11]

மத்திய தரைக்கடல் பகுதியின் கிழக்குப் பகுதியில் அமைந்த பண்டைய நாடு பொனீசியா (Phoenecia) (இன்றைய சிரியா). இப்பகுதி கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் செலூசிய அரசின் கீழ் வந்தது. கி.மு. முதல் நூற்றாண்டு வரை அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இக்கால கட்டத்தில் வெளியிடப்பெற்ற நான்கு காசுகள் கரூரில் கிடைத்துள்ளன. இக்காசுகள் யாவும் செம்பினால் ஆனவை. இவை வட்டமாக உள்ளன. இவை 09 முதல் 15 மி.மீ வரை விட்டம் உடையன. முதல் காசின் முன்புறத்தில் ஜீயஸ் கடவுளின் தலை பின்புறத்தில் மும்முனையுள்ள கப்பல் உள்ளன. அஸ்கலானின் (Ascalan) அராடஸ் (Aradas) நகரில் இருந்து இக்காசு கி.மு. 150 இல் வெளியிடப் பெற்றது. இரண்டாம் வகைக் காசின் முன்புறத்தில் டைகே (Tyca) தேவியின் தலையும், பின்புறத்தில் கப்பலின் முன் பகுதியும் உள்ளன. மூன்றாம் வகைக் காசின் முன்புறத்தில் ஒரு பெண் உருவமும் பின்புறத்தில்

கப்பலின் முன்பகுதியும் உள்ளன. மேற்கண்ட இரண்டு காசுகளும் அஸ்கலானில் கி.மு.2ஆம் நூற்றாண்டளவில் வெளியிடப் பட்டவை. நான்காம் வகைக் காசின் முன்புறத்தில் உருவங்கள் தெளிவாக இல்லை. பின்புறத்தில் முனை பருத்த நீண்ட தடி உள்ளது. இக்காசு டயர் (Tyre) நகரத்திலிருந்து கி.மு.2-1 நூற்றாண்டளவில் வெளியிடப்பட்டிருக்கலாம்.[12]

யூத (Judea) நாடு மத்தியதரைக் கடல் பகுதியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந் நாட்டைச் சார்ந்த ஒரு வெண்கலக் காசின் (11 மி.மீ.) முன்புறத்தில் மலர் வளையத்தின் நடுவில் பண்டைய ஹீப்ரு (Hebrew) மொழி வாசகம் உள்ளது. பின்புறத்தில் வளமையைக் குறிக்கும் இரண்டு கொம்புகளின் (cornucopiae) நடுவில் மாதுளம் பழம் உள்ளது. இக்காசுகள் முதல் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வெளியிடப்பட்டன.[13]

தமிழ் நாட்டில் இதுவரை கிடைத்துள்ள கிரேக்க நாட்டுக் காசுகள் கி.மு. 3-1 நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டவை. உரோமானியக் காசுகள் கி.மு.1-கி.பி.2ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டவை. இக்காசுகள் எல்லாம் வெளியிடப்பெற்ற காலத்திலேயே தமிழ் நாட்டை வந்தடைந்தன என்று உறுதியாகக் கூற இயலாது. அதேபோல் பொது மக்களிடையே தீவிரப் புழக்கத்தில் இருந்தன என்றும் கருத இயலாது. ஆயினும் வெளியிடப்பட்ட காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் கழித்துத் தமிழ் நாட்டை அடைந்தன என்ற கருத்தையும் ஏற்க இயலாது. இக்காசுகள் வணிகர்களிடையே புழங்கின என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## குறிப்புகள்

1. தினமணி, 22-4-90; அளக்குடி ஆறுமுகசீதாராமன், *தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி, 1 ப.17, படம்.12; R. Krishnamurthy, "Imitation Roman Gold Coins frokm Tirukkoilur Hoard" *Ex Moneta,* Ed. Amal Kumar Jha and Sanjay Garg, Nashik, 1995.; C. Santhalkingam, Roman Coins From Kambam Valley in Tamil Nadu, *SSIC.*, Vol. 7, (1997), pp.57-60.

2. G. Bidie, *Catalogue of Coins Collection of Government Central Museum,* Madras, 1874; T.G. Aravamuthan, *Catalogue of the Roman and Byzantine coins in the Madras Government Museum,* Madras, 1942; R.E.M. Wheeler, *Ancient India,* (1946), Vol.2, pp.116-121; P.L.Gupta, *Roman coins from*

*Andhra Pradesh,* Hyderabad, 1965; Paula J. Turner, *RomanCoins from India,* London; K.V. Raman, "Roman Coins from Tamil Nadu", *SSIC,* 2, (1992), pp 19-34; R. Champakalakshmi, *Trade, Ideology and Urbanization-South India 300 BC to AD 1300,* (1996), pp.158-174.

3. Nishathuddeen Ahmed, "A Roman Serrati Denarius from Tamilnadu", *SSIC.,* Vol.4., 1994, p.43.

4. P.V. Radhakrishnan, *Roman Gold & Silver Coins From India,* Nasik, 1999, p.13.

5. *தினமணி, 22-4-90, அளக்குடி ஆறுமுகசீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 1, தஞ்சாவூர், 1994, ப.17, படம்.12.*

6. R. Krishnamurthy, "Imitation Roman Gold Coins from Tirukkoilur Hoard" *Ex Moneta,* Ed. Amal Kumar Jha and Sanjay Garg, Nashik, 1995.

7. R. Krishnamurthy, "Coins from Greek Islands, Rhodes and Crete found at Karur, Tamilnadu", *SSIC.,* Vol. 5, (1995), pp.29-36.

8. R. Krishnamurthy, "Some Unknown Ancient Greek Coins from Karur", *SSIC.,* Vol.11 (2001), pp.53-56

9. R. Krishnamurthy, "Selucid Coins from Karur", *SSIC,* Vol.3, (1993), pp.19-28.

10. R. Krishnamurthy, "Coins from Greek Islands, Rhodes and Crete found at Karur, Tamilnadu", *SSIC.,* Vol.5, (1995), pp.29-36.

11. மேலது.

12. R. Krishnamurthy, "Coins from Phonecia found at Karur", *SSIC.,* Vol.4, (1994), pp.19-28.

13. R. Krishnamurthy, "A Coin of Priest-King of Judaea from Karur", *SSIC.,* Vol.9, (1999), pp.23-29.

**பட்டியல் – 2**

**தமிழ் நாட்டில் உரோமானியக் காசுகள் கிடைத்த இடங்கள்**

| எண் | ஊர் | மாவட்டம் | ஆண்டு | எண்ணிக்கை | அரசர்கள் | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அகிலாண்டபுரம் | கோயமுத்தூர் | 1936 | 5 | அகஸ்டஸ்-டைபீரியஸ் | கி.மு.21-கி.பி.37 |
| 2. | ஆனைமலை | கோயமுத்தூர் | 1984 | 1 | டைபீரியஸ் | கி.பி.14-37 |
| 3. | உத்தமபுரம் | மதுரை | 1996 | 10 | சீசர் | கி.மு.31-கி.பி.14 |
| 4. | கத்தாங்கண்ணி | ஈரோடு | 1913 | 233 | அகஸ்டஸ்-டைபீரியஸ் | கி.மு.31-கி.பி.37 |
| 5. | கரிவலம்வந்த நல்லூர் | திருநெல்வேலி | 1932 | 6 | நீரோ-ஹாட்ரியந் | கி.பி.54-138 |
| 6. | கரூர் | கரூர் | 1806 | 5 | அகஸ்டஸ்-கிளாடியஸ் | கி.மு.31-கி.பி.54 |
| 7. | கரூர் | கரூர் | 1856, 1986 | 1+1 | அகஸ்டஸ் | கி.மு.31-கி.பி.14 |
| 8. | கரூர் | கரூர் | 1878, 1888 | 500+? | அகஸ்டஸ்-டைபீரியஸ் | கி.மு.31-கி.பி.37 |
| 9. | கரூர் | கரூர் | 1884, 1891 | 5 | கிளாடியஸ் | கி.பி.41-கி.பி.54 |
| 10. | கரூர் | கரூர் | 1904, 1901 | ? | மார்கஸ் ஆரேலியஸ் | கி.பி.161-180 |
| 11. | கல்லகிணர் | கோயமுத்தூர் | 1909 | 2 | காசியஸ்-அகஸ்டஸ் | கி.மு.55-கி.பி.14 |
| 12. | கலையம்புத்தூர் | திண்டுக்கல் | 1856 | 63 | டைபீரியஸ்-நெர்வா | கி.பி.14-98 |
| 13. | காருகாக்குரிச்சி | புதுக்கோட்டை | 1898 | 501 | அகஸ்டஸ்-வெஸ்பேசியந் | கி.மு.31-கி.பி.79 |
| 14. | கிருஷ்ணகிரி | தருமபுரி | 1992 | 1 | நெவினோ பல்புஸ் | கி.மு.79 |
| 15. | கோனேரிப்பட்டி | சேலம் | 1987 | 35 | டைபீரியஸ் | கி.பி.14-37 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | சாவடிபாளையம் | கோயமுத்தூர் | 1808 | ? | அகஸ்டஸ் | கி மு 31-கி பி 14 |
| 17 | சொறையப்பட்டு | கடலூர் | 1992 | 200 | டைபீரியஸ்-கரகல்லா | கி பி 14-217 |
| 18 | திருப்பூர் | கோயமுத்தூர் | 1990 | 1 | சீசர் | கி மு 46 |
| 19 | தொண்டைமாநத்தம் | கடலூர் | 1918 | 6 | டைபீரியஸ்-நீரோ | கி பி 14-68 |
| 20 | பிஷப்ஸ்டவுன் | உதகமண்டலம் | 1827 | 1 | கிளாடியஸ்? | கி பி 41-54 |
| 21 | பூதிநத்தம் | கோயமுத்தூர் | 1946 | 1398 | அகஸ்டஸ்-டைபீரியஸ் | கி மு 31-கி பி.37 |
| 22 | பெண்ணார் | கோயமுத்தூர் | 1803 | 1 | அகஸ்டஸ் | கி மு 31-கி பி 14 |
| 23 | பொள்ளாச்சி | கோயமுத்தூர் | 1800 | ? | அகஸ்டஸ்-கையஸீம் | கி மு.31-கி பி 41 |
| 24 | மதுரை மலைப்பகுதி | மதுரை | 1917 | 11 | கிளாதியஸ்-டொமிதீசியந் | கி பி 41-96 |
| 25 | மதுரை நகரம் | மதுரை | 1917 | ? | நீரோ | கி பி 54-68 |
| 26 | மதுரை | மதுரை | 1888 முன்பு | 1 | டொமீதிசியந் | கி பி 81-96 |
| 27 | மாம்பலம் | சென்னை | 1929 | 1 | அகஸ்டஸ் | கி பி 27-14 |
| 28 | வெள்ளலூர் | கோயமுத்தூர் | 1841, 1891 | 522(547) | அகஸ்டஸ்-நீரோ | கி மு 31-கி பி 68 |
| 29 | வெள்ளலூர் | கோயமுத்தூர் | 1932 | 121 | அகஸ்டஸ் | கி மு 31-கி பி 14 |
| 30 | வெள்ளலூர் | கோயமுத்தூர் | 1939 | ? | டைபீரியஸ் | கி பி 14-37 |
| 31 | ? | கோயமுத்தூர் | 1817 | 1 | அகஸ்டஸ் | கி மு 31-கி பி 14 |
| 32 | ? | கோயமுத்தூர் | 1912 | 2 | டைபீரியஸ் | கி பி 14-37 |
| 33 | ? | மதுரை | 1917 | 1 | டொமீதீசியந் | கி பி 81-96 |

## நோக்கு நூல் பட்டியல்

### (அ) தமிழ் நூல்களும் கட்டுரைகளும்


1 ஆறுமுகசீதாராமன், அளக்குடி, *தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி-1, தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், 1994

2 ஆறுமுகசீதாராமன், அளக்குடி, "சங்ககாலக் காசுகள்", *ஆவணம்,* 8, தஞ்சாவூர், 1997, பக் 130-133

3 ஆறுமுகசீதாராமன், அளக்குடி, *தமிழகக் காசுகள்,* தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர். 2002

4 ஆறுமுகசீதாராமன், அளக்குடி, *தஞ்சாவூர் நாயக்கர் காசுகள்,* தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், 2002

5 ஆறுமுகசீதாராமன், அளக்குடி, *தமிழகத் தொல்லியல் சான்றுகள்,* தொகுதி-2, தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், 2002

6 ஆறுமுகசீதாராமன், சங்கரன்ராமன், *மதுரை நாயக்கர் காசுகள்,* தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், 2002

7 ஆறுமுகசீதாராமன், சங்கரன்ராமன், *பல்லவர் காசுகள்,* தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், 2002

8 இராகவன், அ, *கோ நகர்-கொற்கை,* கலை நூற் பதிப்பகம், திருநெல்வேலி, 1971

9 இராசகோபால், சு, "துளைப்பொன்", *கல்வெட்டு,* 54, 2000, பக்.37-38

10 கண்ணன், இரா, *தமிழ் நாட்டு நாணயங்கள,* அரசு அருங்காட்சியகங்கள், சென்னை, 1999

11 காசிநாதன், நடன, "அழகன்குள அகழாய்வில் கிடைத்த சங்ககாலப் பாண்டியரின் அரியகாசு", கல்வெட்டு, 37, 1993, பக்35-38 சென்னை, 1995

12 காசிநாதன், நடன, *தமிழர் காசு இயல்,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995

13. கிருஷ்ணமூர்த்தி, இரா., *சங்க காலச் சோழர் நாணயங்கள்*, சென்னை, 1986.

14. கிருஷ்ணமூர்த்தி, இரா., *பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்*, சென்னை, 1987.

15. கிருஷ்ணமூர்த்தி, இரா., *சங்க கால மலையமான் நாணயங்கள்*, சென்னை, 1990.

16. சாந்தி, இரா., "அருங்காட்சியக ரோமானிய நாணயங்களில் கட்டிடக் கலை", *Coinex-1994*, பக்.6-11.

17. சிற்றம்பலம், சி.க., *பண்டைய தமிழகம்*, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1999.

18. சுகவன முருகன், "பெண்ணைக் கரையில் சிந்துக்காசு", *ஆவணம்*, 12, 2001, பக்.114.

19. திருஞானசம்பந்தம், க.ஆ., "களப்பிரர் காசுகள்", *Madras Coin Society, Special Bulletin*, Vol. 8. 2001, பக். 20-22.

20. பத்மாவதி, ஆ., "கொல்லிப்புறை காசு - ஓர் ஆய்வு", *கல்வெட்டு*, 53, 2000, சனவரி, பக்.22-26.

21. புஷ்பரட்ணம், ப., "பூநகரியில் கிடைத்த அரிய சங்ககால நாணயங்கள்", *ஆவணம்*, 9, 1998, பக்.114-119.

**(ஆ) ஆங்கில நூல்களும் கட்டுரைகளும்**

1. Abdul Majeed, D. Thulsiraman, S.Vasanthi, *Alagankulam- A Preliminary Report*, Department of Archaeology, Government of Tamil Nadu, Chennai, 1992.

2. Altekar, A.S., "The Reverse Legend on the New Silver Coin of Vasistiputra Satakarni", *JNSI*, 21, 1958, pp.13.

3. *Annual Report of the Mysore Archaeological Department*, 1934, "The Cholas", pp.58-72, plate xviii, 1-52.

4. *Annual Report of the Mysore Archaeological Department*, 1935, "Ancient Coins from the Extreme South of India", pp.67-71.

5. *Annual Report of the Mysore Archaeological Department*, 1937, "Pandya Coins", pp.74-81, plate xxii, 1-25.

6. *Annual Report of the Mysore Archaeological Department,* 1940, "Chera Coins", pp.76-80, plate xxiv, 1-21.

7. *Annual Report of the Mysore Archaeological Department,* 1940, "Pallava Coins", pp.75-76, plate xxiv, I, 6, 7.

8. *Annual Report on Indian Epigraphy,* 1973-74, pp.139-140.

9. Aravamudhan, T.G., *Catalogue of Venitian Coins in the Madras Government Musuem,* Chennai, 1938.

10. Aravamudhan, T.G., *Catalogue of the Roman and Byzantine Coins in the Madras Government Museum,* Madras, 1942.

11. Aravamudhan, T.G., "A Pandya Issue of Punch Marked Purana", *JNSI.,* vol.6, 1944, pp.1-4.

12. Aravamudhan, T.G., "Punch Marked Coins", *JNSI,* vol.10, 1948.

13. Berghaus, Peter., "Roman Coins from India and their Imitations", *Coinage, Trade and Economy,* ed. A.K.Jha, Nasik, 1991, pp.108-121.

14. Biddulph, C.H., *Coins of the Pandyas (Numismatic notes and Monographs No.11),* Numismatic Society of India, Varanasi, 1966.

15. Biddulph, C.H., *Coins of the Cholas (Numismatic notes and Monographs No.13),* Numismatic Society of India, Varanasi, 1968.

16. Bidie, G., "The Pagoda or Varaha Coins of Southern India", *Journal of the Asiatic Society of Bengal,* vol.52, 1883.

17. Bidie, G., *Catalogue of Coins Collection of Government Central Museum,* Madras, 1874.

18. Brown, C.J., *The Coins of India,* (The Heritage of India Series), Calcutta, 1922.

19. Caldwell, R., *Roman Imperial Aurei,* 1851.

20. Champakalakshmi, R., *Trade, Ideology and Urbanization-South India 300 BC to AD 1300,* Oxford, 1996.

21. Chattopadhyaya, Brajadulal., *Coins and Curency Systems in South India,* New Delhi, 1977.

22. Davidson, Alexander., "On Some Roman Coins found at Nelore", *Asiatic Researches,* Vol.2, 1790.

23. Desikachari, T., "Dravidian Kingdoms and list of Pandyan Coins", *TA.,* vol.I, No.ix,1911, pp.1-16.

24. Desikachari, T., "Numismatics with special relation to South India," *QJMS.,* III, I, 1913, pp.1-11.

25. Desikachari, T., "Pandiyan Coins", *TA.,* vol. II, no. 1, 1913, pp.99-109, gf; 1-16.

26. Desikachari, T., "The Cholas and their Coinage", *TA,* Vol. II, No.2, 1914, pp.1-19.

27. Desikachari, T., "South Indian Epigraphy and Numismatics", *Proceedings of the Madras Literary Society,* 1916, pp.33 ff.

28. Desikachari, T., *South Indian Coins,* Trichinopoly, 1933.

29. Elliot, W., "Numismatic Gleanings", *MJLS.,* (New Sereies), vol.3, 1857-58; vol.4, 1858-59.

30. Elliot, W., *Catalogue of Gold Coins in the Government Central Museum,* 1874.

31. Elliot, W., *Coins of Southern India,* London, 1885-86, Reprint, Varanasi, 1970.

32. *Epigraphia Indica,* vol.32, No.41, pp.337-338.

33. Ganesh, K. *The Coins of Tamilnadu,* Bangalore, 2002.

34. Gupta, P.L., "A Bibliography of the Hoards of Punch-marked Coins of Ancient India", *JNSI.,* vol.17, 1955, pp.15-19.

35. Gupta, P.L., "A Survey of Indian Numismatography (South Indian Coinage)", *JNSI.,* xxiii, 1961, pp.74-77.

36. Gupta, P.L., *Roman Coins from Andhra Pradesh,* Department of Archaeology, Goverment of Andhra Pradesh, Hyderabad, 1965.

37. Gupta, P.L., *The Early Coins from Kerala,* Department of Archaeology, Government of Kerala, 1965.

38. Hultzsch, E., "South Indian Copper Coins," *IA.,* xxi, 1892, pp.321-26.

39. Hultzsch, E., "Micelleneous South Indian Coins," *IA.,* xxv, 1896, pp.317-23.

40. Irfan Habib, "Hoards and History", *JNSI,* 50, 1988, pp.50.

41. Karunakaran, M.T., "Smallest Coin Known so far of Sangam Age Cheras", *Madras Coin Society, Special Bulletin,* vol.7, 2000, pp.13.

42. Kasinathan, Natana., "Punch Marked Coins of Atiya County", *JNSI.,*51, 1989, pp.93-94.

43. Kasinathan, Natana., "Gandagopalan Madai", *SSIC.,* vol.1, 1991, pp.87-90.

44. Kasinathan, Natana., "Andipatti Coins-A Re appraisal", *Art Panorama of Tamils,* Chennai, 1992.

45. Kasinathan, Natana., "Roman Coins from Alagankulam Excavations", *SSIC,* vol.3, 1993, pp.47-50.

46. Kasinathan, Natana., "Two copper coins from Alagankulam and Padaividu Excavations", *SSIC.,* vol.V, 1995 pp.85-88.

47. Kasturi Bai, M., "Sada: A New Dynasty Discovered at Vaddamanu, Guntur District in Coastal Andhra Pradesh", *JNSI.,* 48, 1986, pp.14-23.

48. Kosambi, D.D., "The Bodinayakanur Hoard", *JBBRAS.,* vol.26, ii,1951, pp.214-218.

49. Kosambi, D.D., *Indian Numismatics,* New Delhi, 1981, pp.123-127.

50. Krishnamurthy, R., "Sangam Period Pandya Coins with Tamil-Brahmi Legends", *JNSI.,* 47, 1985, pp.45-47.

51. Krishnamurthy, R., "Kalabhra Coin with a Legend", *JNSI.,* 48, 1986, pp.48.

52. Krishnamurthy, R., "Sangam period Chera Coins ", *JNSI.,* vol.49, 1987, pp.36-38.

53. Krishnamurthy, R., "Some Unpublihsed Silver Punch Marked Coins of the Pandyas", *JNSI.,* vol.50, 1988, pp.25-27.

54. Krishnamurthy, R., "Coins of the Pallava King Mahendravarman I", *JNSI.,* 50, 1988, pp.33-34.

55. Krishnamurthy, R., "Some Unpublished Rare Coins of Pallavas", *JNSI.,* 50, 1988, pp.35-36.

56. Krishnamurthy, R., "Pallava Coin with Lion Symbol", *JNSI.,* 51, 1989, pp.90-92.

57. Krishnamurthy, R., "Two More Pallava Coins with Legends", *JNSI.,* 52, 1991, pp.62-63.

58. Krishnamurthy, R., "Makkotai Coins", *SSIC.,* 2, 1992, pp.89-93.

59. Krishnamurthy, R., "Selucid Coins from Karur", *SSIC.,* vol.3, 1993, pp.19-28.

60. Krishnamurthy, R., *Late Roman Copper Coins from South India, Karur and Madurai,* Chennai,1994.

61. Krishnamurthy, R., "Coins from Phonecia found at Karur", *SSIC.,* vol.4, 1994, pp.19-28.

62. Krishnamurthy, R., "Imitation Roman Gold Coins from Tirukkoilur Hoard", *Ex Moneta,* Ed. Amal Kumar Jha and Sanjay Garg, Nashik, 1995.

63. Krishnamurthy, R., "Coin Circulation in Ancient Tamil Region, c 400 B.C. - c 600 A.D.", *JNSI.,* 58, 1996.

64. Krishnamurthy, R., *Sangam Age Tamil Coins,* Chennai, 1997.

65. Krishnamurthy, R., "Coins from Greek Islands, Rhodes and Crete found at Karur, Tamilnadu", *SSIC.,* vol.5, 1995, pp.29-36.

66. Krishnamurthy, R., "A coin of Priest-King of Judaea from Karur", *SSIC.,* vol.9, 1999, pp.23-29.

67. Krishnamurthy, R., *Non Roman Ancient Foreign Coins from Karur in India,* Chennai, 2000.

68. Krishnamurthy, R., "Some Unknown Ancient Greek Coins from Karur", *SSIC.,* Vol.11, 2001, pp.53-56.

69. Krishnan, K.G., "Literary and Epigraphic references to Coinage in the Ancient Tamilnadu", *JNSI.,* xx, pp.9-14.

70. Krishnan, K.G., "Coin from the Andippatti Hoard", *Epigraphia Indica,* 40, pp.139-40

71. Krishnan, K.G., *Inscriptions of the Early Pandyas (from c.300 BC - 984 A.D.)*, Northern Book Centre, New Delhi, 2002.

72. Loventhal, E., *Coins of Tinnevelly,* Vellore, 1888.

73. Mac Dowall, "Indian Imports of Roman Silver Coins", *Coinage, Trade and Economy,* ed. A.K.Jha, Nasik, 1991, pp.145-163.

74. Mahadevan, Iravatham., "Ancient Tamil Coins from Sri Lanka", *Journal of the Institute of Asian Studies,* Chennai, Vol. 17, pp. 147-156.

75. Mahadevan, Iravatham., *Early Tamil Epigraphy from the Earliest Times to the Sixth century AD.,* Cre-A Chennai and Harvard University, USA., 2003.

76. Mahalingam, T.V., Presidential Address, 1973, *Sixty Years of the Numismatic Society of India 1910-1971,* History and Presidential Addressess, 1973, p.504.

77. Mangalam, S.J., "Satavahana Coins from Karur, Tamil Nadu", *JNSI.,* 57 1995, pp.29-33.

78. Mala Dutta, *A Study of the Satavahana Coinage,* New Delhi, 1990.

79. Mitchiner, Michael., *Coin Circulation in Southernmost India,* Indian Institute of Research in Numismatic Studies, Nashik, 1995.

80. Mitchiner, Michael., *The Coinage and History of Southern India,* 2 parts, London, 1998.

81. Mohandas, P.N., "New Find of Coins with Tamil-Brahmi characters of great Numismatic value", *The Hindu,* 7 January, 1968.

82. Nagaswamy, R., "A Bilingual Coin of a Satavahana", *Seminar on Inscriptions,* Chennai, 1968, pp.200-202.

83. Nagaswamy, R., *Tamil Coins-A Study, Department of Archaeology,* Chennai, 1981.

84. Nagaswamy, R., "A Bilingual Coin of Vasisthiputra Siva Siri Pulumavi", *Journal of Archaeology in Andhra Pradesh,* Vol.I, 1985, pp.105-113.

85. Nagaswamy, R., "Kollipurai: An Inscribed Tamil Coin of First Century A.D.", D.W. Mac Dowall, Savita Sharma and Sanjay Garg (eds.), *Indian Numismatics, History, Art and Culture,* Essays in Honour of Dr. Parameswari Lal Gupta, pp.187-191.

86. Nagaswamy, R., *Roman Karur, Brihad Prakashan,* Chennai, 1995.

87. Nishathuddeen Ahmed, "A Roman Serrati Denarius from Tamilnadu", *SSIC.,* Vol.4, 1994, pp.43.

88. Pushparatnam, P., *Ancient Coins of Sri Lankan Tamil Rulers,* Bavani Patippakam, Jafna, Sri Lanka, 2002.

89. Radhakrishnan, P.V., "Chronology of Silver Punch Marked Coins in South India", *SSIC.,* Vol.8, 1998, pp.27-34.

90. Radhakrishnan, P.V., *Roman Gold & Silver Coins from India,* Indian Institute of Research in Numismatic Studies, Nashik, 1999.

91. Rajan, K., "A Chronological Note on the Punch Marked coins of Tamilnadu", *SSIC,* Vol.1, 1991, pp.17-22.

92. Rajan, K., "Mani, Kacu, Kanam-An Explanation", *SSIC,* 10, 2000, pp.114-116.

93. Raman, K.V., "Terracotta figurines and other objects form Kanchipuram Excavations-1962", *Journal of Indian History,* 14, 1967, pp.506.

94. Raman, K.V., "Pallava Coins at Kanchi", *JNSI,* xxxi, ii, 1969, pp.185-87, pl. iii, 12-16.

95. Raman, K.V., *Some Aspects of Pandyan History in the Light of Recent Discoveries,* University of Madras, Chennai, 1973.

96. Raman, K.V., "Numismatography of Tamilnadu", *JNSI.,* 49, 1987, p.205.

97. Raman, K.V., Presidential Address, 77th Session, *JNSI.,* 1990, p.4.

98. Raman, K.V., "Roman Coins from Tamil Nadu", *SSIC.,* vol.2, 1992, pp.19-34.

99. Ramasamy, Vidvan I., "Ancient Chera Coin Found (Globule)", *JNSI.,* 53, 1991, pp.64-65.

100. Ramasamy, Vidvan I., "Sangam Age Bow Fish Coin (Globule) and some Roman Coins Found at Kongu", *JNSI.,* 54, 1992, pp.48-50.

101. Ramayya, S., "The Kalabhras and their Coinage", *JNSI.,* 35, 1973, pp142-154.

102. Ramayya, S., "A Note on Kalabhra Kootran's Coins", *JNSI.,* 42, 1980, pp.18-20.

103. Rangachariar, T.M., and Desikachari, T., "Indo-Danish Coins", *MJLS.,* 1888-89.

104. Sankaranarayana, N., "Three Hoards of Chinese Coins in Madras Government Museum" *JNSI.,* Vol.33, 1971, pp.61-68.

105. Sankaranarayana, N., *Catalogue of Vijayanagar Coins in the Madras Government Museum,* Chennai, 1994.

106. Santhalingam, C., "Roman Coins form Kambam Valley in Tamil Nadu," *SSIC.,* Vol.7, 1997, pp.57-60.

107. Sarma, I.K., *Coinage of the Satavahana Empire,* New Delhi, 1980.

108. Sarma, I.K., *South Indian Coinage: A Review of Recent Discoveries,* New Era Publications, Chennai, 1992, pp.16.

109. Satyamurthy, T., *Catalogue of Roman Gold Coins,* Thiruvanantapuram, 1992.

110. Seyone, K.N.V., *Some Old Coins Found in Early Ceylon (Sri Lanka),* Numismatic Society of Sri Lanka, 1998.

111. Shanmugam, P., "The Monetary System of Medieval Tamil Nadu", The Bulletin of the Institute of the Traditional Cultures, University of Madras, Madras, 1982, pp. 159-181.

112. Shanmugam, P., "Monetary System under Rajaraja I", Journal of the Madras University, Vol. LVII, Nos. 1 and 2, 1985.

113. Shanmugam, P., "Two Pandya Coins from Madurai", *SSIC.,* vol.2, 1992, pp.93-98.

114. Shanmugam, P., "Two Coins of Tamil Origin from Thailand", *SSIC,* 4, 1994, pp.95-101.

115. Shanthi, R., "A New Gold Coin of Rajendra Chola - I", *SSIC.,* vol 6, 1996, PP.71-72.

116. Shanthi, R., "Vallimalai Hoard of Indo Sassanian Silver Coins from Tamil Nadu", *SSIC.,* vol.7, 1997, pp.73-76.

117. Shanthi, R., "Consecratio Coins of Faustina from Tirukkoilur Hoard", *SSIC.,* vol.8, 1998, pp.40-43.

118. Sircar, D.C., "Silver Coins of Vasistiputra Satakarni", *Epigraphia Indica,* 35, 1965, pp.247.

119. Somasundara Rao, C., "A Note on Bilingual Legnds on Satavahana Coins", *SSIC.,* 7, 1997, pp.17-22.

120. Soundara Rajan, K.V., Kaveripatinam Excavations 1963-73, *Archaeological Survey of India,* pp.121.

121. Sumabala, P., "Pandya Coin - A Fresh look", *JNSI,* 139-140.

122. Suresh, S., *Roman Antiquities in Tamil Nadu,* Chennai.

123. Thirugnanasampandan, K.A., *Kanchi Pallava Coins,* Erode, 1989.

124. Thriugnanasambandan, K.A., "A Rare Peruvazhuthi Copper Coin", *JNSI,* 54, 1992, pp.73-74.

125. Thurston, E., "Coins," *Catalogue No.2, (Roman, Indo -Portuguese, and Ceylon),* Madras Government Museum, Second Edition, Madras, 1894.

126. Tracey, J.E., "Pandya Coins," *MJLS.,* 1887-88, pp.138-44.

127. Tufnell, R.H.C., "On a Collection of South Indian Coins", *JASB.,* lv., 1887, pp.157-60; plates vi-vii.

128. Tufnell, R.H.C., *Hints to Coin Collectors in South India,* Madras, 1889.

129. Turner, Paula J. *Roman Coins from India,* London, 1989.

130. Vanaja, R., "The Madras Museum Collection of Punch-Marked coins, A Study", M.Litt Thesis (unpublished), University of Madras, Chennai, 1955.

131. Vanaja, R., "The Coin-Collection of the Government Museum, Madras", *JNSI,* 23, 1961, p.476.

132. Vasanthi, S., "Coins from the Excavations at Maligaimedu, Tamil Nadu", *SSIC,* Vol.13, 2003, pp.69-70, Coin No.2/16.

133. Vedachalam, V., and C. Santalingam, "Discovery of Roman Coins from Nattampatti in Tamil Nadu", *SSIC,* vol.9, 1999, pp.53-64.


134. Vidya Prakash, *Coinage of South India, An Indtroductory Survey,* Numismatic Society of India No.14, Varanasi, 1968.

135. Vijayaraghavan, P., "A Punch Marked Chera Silver Coin from Karur", *SSIC,* vol.10, 2000, pp.28-31.

136. Vijayaraghavan, P., "A Further Note on the Silver Punchmarked Chera Coin from Karur", *SSIC.,* vol.11, 2001, pp.60-61.


137. Wheeler, R.E.M., "Roman Coins, first century B.C. to fourth century A.D., found in India and Ceylon," *Ancient India,* No.2, Appendix, pp.116-21.

* * *





**படம் 1**

**பாண்டியர் காசுகள் (1–6): முத்திரைக் காசுகள் 1,2 மதுரை; 3–5 போடிநாயகனூர்.**
**6 பெருவழுதி காசு.**




**படம் 2**

பாண்டியர் காசுகள் (7-12): 7 பெருவழுதி பெருவழுதி காசு; 8-12 பாண்டியர் காசுகள்; 10 பாண்டியர் காசு (ஸ்ரீ லங்கா).





**படம் 3**
**பாண்டியர் காசுகள் (13–18)**





**படம் 4**


**சேரர் காசுகள் (19–25): 19 முத்திரைக் காசு, 20 மாக்கோதை, 21 குட்டுவன் கோதை, 22,23 கொல்லிப்புறை, 24 கொல்லிரும்புறைய்.**





**படம் 5**
**சேரர் காசுகள் (26–31)**





**படம் 6**
**சேரர் காசுகள் (32–33); சோழர் காசுகள் (34–37).**




**படம் 7**
**சோழர் காசுகள் (38–40); மலையமான் காசுகள் (41–43)**




**படம் 8**
**மலையமான் காசுகள் (44–46); அதினன் எதிரான் சேந்தன் காசுகள் (47–48).**




**படம் 9**
**அதினன் எதிரான் சேந்தன் காசுகள் (49–50); முத்திரைக் காசுகள் – வெம்பாவூர் (51–56).**




படம் 10

முத்திரைக் காசுகள் – வெம்பாவூர் (57–61); சாதவாகனர் காசு (62)(அரசனகு வாசட்டி மகனகு சிரி சாதகணிகு); உரோமானியக் காசு– ஜூலியஸ் சீசர் (63).




படம் 11
உரோமானியக் காசுகள் - அகஸ்டஸ் காசுகள் (64-66); டைபீரியஸ் காசுகள் (67-68); உரோமானியப் போலிக் காசு (69) முன்பக்கம்-டைபீரியசின் தலை, பின்பக்கம் பார்ச்சுனா அமர்ந்தவாறு.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| உ. வே. சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும் | 35.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| மிருச்சகடிகம் | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின்பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| Social Heritage of Tamils | 75.00 |

**Pub.No. 462** **சங்ககாலக் காசு இயல்** **30.00**